بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

தொகுதி 9

இதழ் 4&5&6

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1445 ரஜப் 13 - 27 ★ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - ஸுல்ஹ் 25 - 8 தப்லீஃக் ★ 25 ஜனவரி - 08 பிப்ரவரி 2024

## அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا لَا تَخُوۡنُوا اللّٰهَ وَالرَّسُوۡلَ وَتَخُوۡنُوۡۤا اَمٰنٰتِكُمۡ وَاَنۡتُمۡ تَعۡلَمُوۡنَ ۝٢٨

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் நம்பிக்கை துரோகம் செய்யாதீர்கள். மேலும் உங்களை நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருள்களில் நீங்கள் தெரிந்து கொண்டே நம்பிக்கைத் துரோகம் செய்யாதீர்கள்.

(அல் அன்ஃபால்: 28)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## அஹ்மதிய்யத்தின் தலைமையகம் காதியான் தாருல் அமானில் நடைபெற்ற வெற்றிகரமான மற்றும் அருளுக்குரிய 128-வது ஆண்டு மாநாடு

## ஸய்யிதுனா ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இஸ்லாமாபாத் யூ.கேவிலிருந்து அருளுக்குரிய MTA மூலமாக நிறைவுரை நிகழ்த்தினார்கள்

அல்ஹம்துலில்லாஹ்! காதியான் ஆண்டு மாநாடு புஸ்தானே அஹ்மதின் பரந்த வளாகத்தில் 2023 -ம் ஆண்டு டிசம்பர் 29,30,31 ஆகிய தேதிகளில் ஜுமுஆ, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் சீருடனும், சிறப்படனும் நடந்து முடிந்தது. நாட்டின் தொலை தூரப் பகுதிகளில் இருந்து அஹ்மதிய்யத்தின் நேசர்கள் மிகவும் ஆர்வத்துடனும் உத்வேகத்துடனும், உற்சாகத்துடனும் ஜல்ஸாவில் கலந்து கொள்ளும் நோக்கத்துடன் காதியானிற்கு வருகை தர துவங்கினார்கள். மேலும், ஜல்ஸாவின் நாட்கள் நெருங்க, நெருங்க காதியான் தாருல் அமான் நகரத்தின் பொலிவும் அதிகரித்துக் கொண்டே சென்றது. எந்த அளவுக்கு என்றால், காதியான் முழுமையாக விருந்தினர்களால் நிறைந்து விட்டது. எங்கு சென்றாலும், எங்கு பார்த்தாலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களே தென்பட்டனர். வெளிநாடுகளில் இருந்தும் கூட ஒரு பெரும் எண்ணிக்கையில் அஹ்மதிய்யத்தின் நேசர்கள் ஜல்ஸாவில் கலந்து கொண்டனர். காதியான் தாருல் அமான் எனும் நேசத்திற்குரிய நகரம் ஒருமுறை மீண்டும் மகிழ்ச்சிகளாலும், பொலிவுகளாலும் நிறைந்த விட்டது. விருந்தினர்கள் வருகை தருவதற்கு முன்னரே மின்சாரத் துறை சார்பாக முஹல்லாவின் அனைத்து வீதிகளிலும், சாலைகளிலும் டியூப் லைட்கள் மூலமாக ஒளிமயமாக்கி இருந்தது. பஹஷ்தி மக்பரா, தாருல் மஸீஹ், மஸ்ஜித் முபாரக், மஸ்ஜித் அக்ஸா, மினாரத்துல் மஸீஹ், போன்றவை சிறிய, சிறிய மின்சார அலங்கார விளக்குகளால் மணப்பெண்ணைப் போன்று அலங்கரிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த ஆன்மிக நகரம் தனது மறைமுகமான ஒளியுடன் வெளிப்படையாகவும் ஒளிமயமாக காட்சியளித்துக் கொண்டிருந்தது.

### டிசம்பர் 29, 2023 ஜுமுஆ நாள்
### துவக்க அமர்வு

அல்லாஹ்வின் எல்லையற்ற அருளினாலும், கருணையினாலும் டிசம்பர் மாதம் 29-ம் தேதி அருளுக்குரிய ஜுமுஆ நாளன்று காதியான் ஜல்ஸா ஸாலானா ஹுஸுர் அன்வர் அய்யதஹுல்லாஹ் அவர்களின் பிரதிநிதியும், ஸதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் தலைவருமான மதிப்பிற்குரிய மவ்லானா கரீமுத்தீன் ஸாஹிப் ஷாஹித் அவர்களின் தலைமையில் முழுப் பொலிவுடனும், மகிமையுடனும் நமது ஜமாஅத்தின் மரபுகளுக்கேற்பவும் சரியாக காலை 10.04 மணியளவில் ஆரம்பமானது. ஹுஸுர் அவர்களின் பிரதிநிதி சரியாக காலை 10.04 மணியளவில் அஹ்மதிய்யத்தின் கொடியை ஏற்றினார்கள். அதன் பிறகு துஆ செய்து வைத்தார்கள். காதியான் ஆண்டு மாநாட்டின் முதல் அமர்வின் துவக்கம் திருக்குர்ஆன் திலாவத்துடன் ஆரம்பமானது. மதிப்பிற்குரிய முர்ஷத் அஹ்மத் டார் அவர்கள் சூரா ஆலி இம்ரானின் 191 முதல் 195 வரையிலான வசனங்களை திலாவத் செய்தார்கள்.பின்னர் மதிப்பிற்குரிய ஸைனுத்தீன் ஸாஹிப் ஹாமித் அவர்கள் அதன் மொழியாக்கத்தை தஃப்ஸீரே ஸகீரிலிருந்து எடுத்துரைத்தார்கள். அதன் பிறகு கூட்டத்தின் தலைவர் அவர்கள் ஜல்ஸாவில் கலந்து கொண்டிருந்த அனைவருக்கும் ஜல்ஸாவில் கலந்து கொண்டதற்கான வாழ்த்துகளை தெரிவித்தார்கள். மேலும், அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் ஜல்ஸாவில் கலந்து கொண்டவர்களுக்கு சில அறிவுரைகளை வழங்கினார்கள். கூட்டத்தின் தலைவர் அவர்கள் தமது உரையின் இறுதியில் கூட்டுத் துஆ செய்தார்கள்.

### முதல் நாள் முதல் அமர்வு

இதன் பிறகு மதிப்பிற்குரிய நாயிப் நாஸிர் நஷ்ரோ இஷாஅத் காதியான் தன்வீர் அஹ்மத் நாஸிர் ஸாஹிப் அவர்கள் அழகிய குரலில் குதா ஸே சாஹியே ஹே லவ் லகானி என்ற ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் கவிதை வரிகளை பாடலாக பாடினார்கள். இறையிருப்பு (அதாவது அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வதனால் கிடைக்கும் அருட்களும், பயன்களும்) என்ற தலைப்பில் மதிப்பிற்குரிய மவ்லானா ஹமீது கவ்ஸர் ஸாஹிப், நாஸிர் தஃவத்தே இலல்லாஹ் மர்கஸிய்யா காதியான் அவர்கள் இந்த அமர்வின் முதல் சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். இந்த அமர்வின் இரண்டாவது சொற்பொழிவை மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது இனாம் ஸாஹிப் கௌரி,நாஸிர் ஆஃலா மற்றும் அமீர் ஜமாஅத் அஹ்மதிய்யா காதியான் அவர்கள் நிகழ்த்தினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு (ஹஜ்ஜத்துல் விதா சொற்பொழிவின் ஒளியில் மனித சமத்துவம்) என்ற தலைப்பில் நிகழ்த்தினார்கள்.

### முதல் நாள்-இரண்டாம் அமர்வு

காதியான் ஆண்டு மாநாடு-2023 முதல் நாளின் இரண்டாம் அமர்வு சரியாக பிற்பகல் 2.15 மணியளவில் ஆரம்பமானது. இந்த அமர்வு மதிப்பிற்குரிய ரஃபீக் அஹ்மத் ஸாஹிப் மலபாரீ, வகீலே ஆஃலா தஹ்ரீகே ஜதீத் காதியான் அவர்களின் தலைமையில் துவங்கியது. மேலும், மரபுகளுக்கேற்ப திருக்குர்ஆன் திலாவத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. மதிப்பிற்குரிய ஹாஃபிழ் உமைர் அப்பாஸ் நாயிக் அவர்கள் சூரா அன்ஃபாலுடைய வசனங்கள் 20 முதல் 25 வரை திலாவத் செய்வதற்கு நற்பேறு பெற்றார்கள். அதன் பிறகு தஃப்ஸீரே ஸகீரிலிருந்து மதிப்பிற்குரிய டாக்டர் ஜாவீத் அஹ்மத் ஸாஹிப் லோன் அவர்கள் அவற்றின் மொழியாக்கத்தை எடுத்துரைத்தார்கள். பின்னர் இயக்கத்தின் முரப்பி மதிப்பிற்குரிய ஸயீத் அஹ்மத் ஸாஹிப் மல்கானா அவர்கள் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ்

இதன் தொடர்ச்சி 9ம் பக்கம்...

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**போரின் சூழலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி &உஹது போருக்கான காரணிகள் மற்றும் பின்னணி மற்றும் பாலஸ்தீனத்தின் அநீதியிழைக்கப்பட்ட மக்களுக்காக துஆவிற்கான வழிகாட்டல்**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு யாருடனும் சொந்தப் பகைமை இருக்கவில்லை. அதாவது, அன்னாருடைய உள்ளத்தில் இவர்களுக்காக எந்தவொரு தனிப்பட்ட பகைமைக்கான உணர்வுகள் இருக்கவில்லை.மாறாக, அது அல்லாஹ்வின் மார்க்கத்தை அழிக்க முயன்றவர்களுக்கு எதிராக செய்யப்பட்ட போராக இருந்தது. எவர்கள் அல்லாஹ்வின் மார்க்கத்தை அழிக்க முயன்றார்களோ அவர்களுக்கு எதிரான போராக இருந்தது

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போருக்கான விதிகளையும், சட்டத் திட்டங்களையும் நிர்ணயித்தார்கள். உடன்படிக்கைகளையும் பேணிக் காத்தார்கள். மேலும், இந்த விஷயங்களின்படி உச்சக்கட்டமான தரத்தில் அமலும் செய்தார்கள். இன்றைய காலத்து உலகத்தைப் போன்று எண்ணற்ற சட்டத் திட்டங்களை உருவாக்கிக் கொண்டுவிட்டு பின்னர் எதன்படியும் செயல்படாமல் இருக்கவில்லை. மாறாக, இரட்டிப்புத் தரத்தை நிலைநாட்டினார்கள்
அன்னாரது வாழ்வோ திருக்குர்ஆனின் கட்டளைகளுக்கு செயல் வடிவ விளக்கவுரையாக இருந்தது. அதில் நீதி, நேர்மை மற்றும் அமைதியை நிலைநாட்டுதல் ஆகியவை அடிப்படை விதிகளாகக் கூறப்பட்டுள்ளன

**பாலஸ்தீனர்களுக்காக துஆக்கள் செய்து கொண்டு இருங்கள். அவர்களுக்காக அதிகம் துஆ செய்வதற்கான அவசியம் உள்ளது.அல்லாஹ் கருணை புரிவானாக**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 01 டிசம்பர் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **1ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயம் கலந்து கொண்ட யுத்தங்கள் தொடர்பாக சில விஷயங்களைக் கூறுவேன். இந்த சூழ்நிலைகளில் அன்னாருடைய ஆளுமையின் அம்சங்கள் அன்னாருடைய அழகிய முன்மாதிரி ஆகியவை எவ்வாறு நமக்கு முன்னால் வருகின்றன என்பது பற்றி கூறுவேன். எவ்வாறு அன்னார் (ஸல்) சிறைபிடிக்கப்பட்டவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தித் கொடுத்தார்கள் என்பதை பத்ர் யுத்தம் தொடர்பாக நாம் பார்த்து விட்டோம். சிறைபிடிக்கப்பட்டவர்களே இவ்வாறு கூறுகின்றார்கள்:

சிறைபிடிக்கப்பட்டவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள் என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப ஸஹாபா பெருமக்கள் தாங்கள் உண்பதை விடச் சிறந்த உணவை எங்களுக்கு வழங்கி வந்தார்கள்.

அடுத்து, இந்த சிறைபிடிக்கப்பட்டவர்களை விடுதலை செய்யும் விவகாரம் வந்தபோது மிகவும் எளிமையான நிபந்தனைகளின் பேரில் இவர்களை விடுதலை செய்து விட்டார்கள் என்பதையும் நாம் பார்த்தோம். எவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியுமோ அவர்கள் முஸ்லிம்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தால் போதும் என்பதே சிலருக்கான ஈட்டுத் தொகையாக இருந்தது.

இவையனைத்தும் எதனால் இருந்தன என்றால் அன்னாருக்கு யாருடனும் சொந்தப் பகைமை இருக்கவில்லை. அதாவது, அன்னாருடைய உள்ளத்தில் இவர்களுக்காக எந்தவொரு தனிப்பட்ட பகைமைக்கான உணர்வுகள் இருக்கவில்லை.மாறாக, அது அல்லாஹ்வின் மார்க்கத்தை அழிக்க முயன்றவர்களுக்கு எதிராக செய்யப்பட்ட போராக இருந்தது. எவர்கள் அல்லாஹ்வின் மார்க்கத்தை அழிக்க முயன்றார்களோ அவர்களுக்கு எதிராக போர் செய்யப்பட்டது. சிலர் தங்களுடைய நிர்பந்தம் காரணமாக எதிரிகள் தரப்பில் கலந்து கொண்டனர். இப்படியும் பல உதாரணங்கள் உள்ளன. அவர்கள் தாம் முஸ்லிம்களுடன் போரிடுவதை விரும்பியிருக்கவில்லை. ஆயினும், அவர்களுக்கு நிர்பந்தம் இருந்தது. இவர்களுக்கு அன்னார் பல வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். பின்னர் இவர்களில் பலர் முஸ்லிம்களாகவும் ஆகிவிட்டார்கள்.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போருக்கான விதிகளையும், சட்டத் திட்டங்களையும் நிர்ணயித்தார்கள். உடன்படிக்கைகளையும் பேணிக் காத்தார்கள். மேலும், இந்த விஷயங்களின்படி உச்சக்கட்டமான தரத்தில் அமலும் செய்தார்கள்.

இன்றைய காலத்து உலகத்தைப் போன்று எண்ணற்ற சட்டத் திட்டங்களை உருவாக்கிக் கொண்டுவிட்டு பின்னர் எதன்படியும் செயல்படாமல் இருக்கவில்லை. மாறாக, இரட்டிப்புத் தரத்தை நிலைநாட்டினார்கள். அன்னாரது வாழ்வோ திருக்குர்ஆனின் கட்டளைகளுக்கு செயல் வடிவ விளக்கவுரையாக இருந்தது. அதில் நீதி, நேர்மை மற்றும் அமைதியை நிலைநாட்டுதல் ஆகியவை அடிப்படை விதிகளாகக் கூறப்பட்டுள்ளன. இது குறித்து அல்லாஹ் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான்:

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُوْنُوْا قَوّٰمِيْنَ لِلّٰهِ شُهَدَآءَ بِالْقِسْطِ ۫
وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَاٰنُ قَوْمٍ عَلٰٓى اَلَّا تَعْدِلُوْا ؕ اِعْدِلُوْا ۟
هُوَ اَقْرَبُ لِلتَّقْوٰى ۫ وَاتَّقُوا اللّٰهَ ؕ
اِنَّ اللّٰهَ خَبِيْرٌۢ بِمَا تَعْمَلُوْنَ

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக உறுதியாக கண்காணித்தவாறு நேர்மைக்கு ஆதரவாக சாட்சி கூறுபவர்களாக ஆகிவிடுங்கள். மேலும் எந்த சமுதாயத்தின் பகைமையும் உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம்; நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இது இறையச்சத்திற்கு எல்லாவற்றையும் விட மிக நெருங்கியது. மேலும், அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்று அறிகின்றான். (அல்மாயிதா:9)

ஆக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி இந்தப் போதனையின் ஒளியில் எல்லா அம்சங்களையும் சூழ்ந்துள்ளதாகவும் இதன் உயர் தரத்தை நிலைநாட்டக் கூடியதாகவும் இருந்தது. நான் கூறியது போன்று, யுத்தங்களில் அன்னாரது வழிமுறை மற்றும் அழகிய முன்மாதிரி என்னவாக இருந்தது? என்பது தொடர்பாக பத்ர் யுத்தம் மட்டுமின்றி மற்ற யுத்தங்கள் தொடர்பாகவும் எடுத்துக் கூறுவேன். அவற்றில் போர்ப் படைகளும் வந்து விடுகின்றன. அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது வாழ்நாளில் மற்றவர்களின் தலைமையில் மற்றவர்களைத் தளபதிகளாக ஆக்கி அனுப்பி வைத்த போர்ப் படைகள்.

எவ்வாறு இருப்பினும், இது பெரிய வரலாறு ஆகும். எனவே இதிலும் சில குத்பாக்கள் எடுத்துக் கொள்ளலாம். இன்று உஹது யுத்தம் தொடர்பாக சில விஷயங்களை எடுத்துக் கூறுவேன். நிகழ்வுகள் நிரூபிப்பதற்கு ஏற்ப இந்த யுத்தத்தையும் எதிரிகள் தங்களுடைய பகைமைத் தீயின் காரணமாக ஆரம்பித்திருந்தனர். வேறு வழியின்றி முஸ்லிம்களுக்கும் யுத்தத்திற்காகப் புறப்பட

வேண்டி வந்தது.

இதன் விவரத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

இந்த யுத்தம் பெரும் பத்ர் யுத்தத்திற்கு ஓராண்டுக்குப் பிறகு ஹிஜ்ரீ 3-ம் ஆண்டு ஷவ்வால் மாதம் சனிக்கிழமை அன்று துவங்கியது. உஹது யுத்தம் ஹிஜ்ரீ 3-ம் ஆண்டு நிகழ்ந்தது என்பதில் வரலாற்று ஆசிரியர்களும் வாழ்க்கை வரலாறு எ மு து ப வ ர் க ளு ம் கருத்தொருமித்திருக்கின்றார்கள்.

எனினும், இந்தவொரு கூற்றும் உள்ளது. அதாவது இது அரிதான கூற்றாகும். அதாவது, இந்த யுத்தம் ஹிஜ்ரீ 4-ம் ஆண்டு நடைபெற்றது என்பதாகும். ஷவ்வால் மாதத்தின் தேதி பற்றி பல்வேறு கூற்றுகள் உள்ளன. அதிகப்படியாக ஷவ்வால் 7-ம் தேதி மற்றும் ஷவ்வால் 15-ம் தேதி கூறப்படுகிறது. இப்னு இஸ்ஹாக், இப்னு ஹிஷ்ஷாம், இப்னு ஹஸ்ம் (இப்னு ஃபுலான்) மற்றும் தபரீ போன்றோர் ஷவ்வால் 15-ம் தேதி என்ற கூற்றை மட்டும் எழுதியுள்ளார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஜுமுஆ நாளன்று அஸர் தொழுகைக்குப் பிறகு மதீனா முனவ்வராவில் இருந்து புறப்பட்டார்கள். சனிக்கிழமை சூரியன் மேலெழும்பும் முன் உஹது மைதானத்தை அடைந்தார்கள். உஹது மைதானம் என்பது மலைகளில் ஒரு மலையின் பெயராகும். இது மதீனாவிலிருந்து சுமார் மூன்று மைல்கள் தொலைவில் அமைந்துள்ளது. உஹது மலை தற்போதுள்ள மஸ்ஜிது நபவியிலிருந்து சுமார் 4 கி.மீட்டர் வடக்குத் திசை நோக்கி உள்ளது.

இன்றைய நாட்களில் மதீனா முனவ்வராவின் மக்கள் குடியிருப்பு இந்த மலையின் அக்கம் பக்கம் வரை சென்று விட்டது. இன்னும் சொல்வதாயின் இதன் அக்கம் பக்கமும் பரவியிருக்கின்றது என்று கூறுகின்றார்கள். உஹது மலை ஹரம் (எனப்படும் கண்ணியத்திற்குரிய) பகுதியில் அடங்கும். உஹது கிழக்கும், மேற்கும் பரவியுள்ளது. அதன் உயரம் 6 கி.மீ ஆகிறது. இந்த மலையின் நிறம், செந்நிறம் கலந்ததாகும்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் உஹது யுத்தத்தின் தேதி, ஹிஜ்ரீ 3-ம் ஆண்டு ஷவ்வால் 15-ம் தேதி அதாவது கி.பி 624-, மார்ச் 31 ஆம் தேதி சனிக்கிழமை அன்று என்று எழுதியுள்ளார்கள்.

இதன் மேற்கொண்ட விவரம் பின்வருமாறு: இந்த யுத்தம் நடைபெற்றதற்கான காரணம் யாதெனில் பத்ர் யுத்தத்தில் குறைஷிகளுக்கு ஒரு படிப்பினை வழங்கும் தோல்வி கிடைத்ததும் குறைஷிகளில் முன்னணி வகிக்கும் மக்களில் உதாரணமாக, அப்துல்லாஹ் பின் அபீ ரபீஆ இக்ரிமா பின் அபீ ஜஹ்ல், ஸஃப்வான் பின் உமையா, அஸ்வத் பின் முத்தலிஃப், ஜுபைர் பின் முத்இம், ஹாரிஸ் பின் ஹிஷ்ஷாம், ஹுவைத் பின் அப்தில் அஸ்ஸா மற்றும் குறைஷிகளின் மற்ற சில முன்னணி வகிப்பவர்கள் அபூ ஸுஃப்யானிடம் வந்தனர். பத்ர் யுத்தத்திற்குக் காரணமாக அமைந்த அந்த வியாபாரக் குழுவில் இவர்களுடைய செல்வங்கள் இருந்தன. இந்த வியாபாரச் செல்வத்தை மக்காவுக்குக் கொண்டு வந்து வழக்கப்படி தாருல் நத்வாவில் வைக்கப்பட்டு விட்டது. மேலும், அவர்களுடைய செல்வங்கள் அவர்களுக்குக் கொண்டு சேர்க்கப்படவில்லை. ஏனெனில், அபூ ஸுஃப்யான் இந்த செல்வங்களைக் கொண்டு வந்தபோது மக்கத்தினர் பத்ர் யுத்தத்திற்காகச் சென்றிருந்தனர். பத்ர் யுத்தத்திற்கு சில காலத்துக்குப் பிறகு இந்த மக்கள் வந்து அபூஸுஃப்யானிடம் கூறினார்கள்:

முஹம்மது (ஸல்) நம்முடைய எண்ணற்ற மக்களைக் கொன்று விட்டார். எனவே இந்த வியாபாரச் செல்வத்திலிருந்து முஹம்மது ((ஸல்) அவர்கள்) உடன் சண்டையிடுவதற்காக போருக்கான ஆயத்தம் மேற்கொள்ளுங்கள்; ஒருவேளை கொலையுண்ட நம்முடைய மக்களுக்காகப் பழிவாங்குவதில் நாம் வெற்றி பெறலாம்.

பின்னர் அந்த மக்கள் மேற்கொண்டு இவ்வாறு கூறினர்: முஹம்மது (ஸல்) அவர்கள்) உடன் போர் புரிவதற்காக இந்த வியாபாரச் செல்வத்தின் இலாபத்திலிருந்து ஒரு படை ஆயத்தம் செய்யப்படுவதற்கு நாங்கள் மகிழ்ச்சியுடன் தயாராக இருக்கிறோம். இதைக் கேட்ட ஆபூஸுஃப்யான் நான் இந்த ஆலோசனைக்கு சம்மதம் தெரிவிக்கின்றேன் என்று கூறினார். மேலும், பனூ அப்தி மனாஃப் என்னுடன் இருக்கிறார்கள்.

இதற்குப் பிறகு குறைஷியர்கள் செல்வத்திலிருந்து 50,000 தீனார் மதிப்புள்ள இலாபத் தொகையைத் தனியாகப் பிரித்து எடுத்து விட்டு முதலீட்டுத் தொகையை உரிமையாளர்களுக்குத் திருப்பி)க் கொடுத்து விட்டார்கள். ஒரு கூற்றுப்படி தனியாகப் பிரிக்கப்பட்ட இலாபத் தொகை 25,000 தீனாராக இருந்தது.

எவ்வாறு இருப்பினும், அதில் கிடைத்த இலாபத் தொகை இந்த யுத்தத்திற்காகக் கொடுக்கப்பட்டது.

இது தொடர்பாக அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்:

اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ
لِيَصُدُّوْا عَنْ سَبِيْلِ اللّٰهِ ؕ فَسَيُنْفِقُوْنَهَا
ثُمَّ تَكُوْنُ عَلَيْهِمْ حَسْرَةً ثُمَّ يُغْلَبُوْنَ ؕ

நிச்சயமாக நிராகரித்தவர்கள் தங்கள் பொருள்களை அல்லாஹ்வின் பாதையிலிருந்து (மக்களைத்) தடுப்பதற்காகச் செலவிடுகின்றனர். அவர்கள் அதனை அவ்வாறே செலவு செய்து கொண்டேயிருப்பார்கள். அ(ந்தச் செல்வமான)து அவர்களின் ஏக்க(த்திற்குக் காரண)ம் ஆகிவிடும். பின்னர் அவர்கள் தோற்கடிக்கப்படுவார்கள். மேலும், நிராகரித்தவர்கள் நரகத்தின் பக்கம் ஒன்றாக அழைத்துச் செல்லப்படுவார்கள்.

(அல் அன்ஃபால்: 37)

இந்வொரு முக்கியமான காரணம் மட்டுமின்றி இன்னும் சில விஷயங்களும் இருந்தன. அவற்றை(யும்) இந்த யுத்தத்திற்கான காரணங்களாகக் கூறலாம். கடந்த குத்பாவிலும் கூறப்பட்டு விட்டது போன்று பத்ர் யுத்தத்திற்குப் பிறகு மக்கத்தினர் சிரியாவுக்கு செல்வது சிம்ம சொப்பனமாகி விட்டிருந்தது. ஏனெனில், மக்காவுக்கும் சிரியாவுக்கும் இடையிலான வியாபாரப் பாதை மதீனாவின் சுற்று வட்டாரம் வழியாக சென்றது. அது முஸ்லிம்கள் தரப்பிலிருந்து அடைக்கப்பட்டு விட்டிருந்தது.

மக்கத்து காஃபிர்களின் முந்தைய அநீதி, அக்கிரமங்களின் காரணமாக அவர்கள் அங்கிருந்து (வியாபாரக்) குழுவுடன் கடந்து செல்வது கடினமாகிக் கொண்டே சென்றது.

அதன் காரணமாக குறைஷியர்களுக்குத் தங்களுடைய வாழ்வாதாரத்தின் இழப்பு தென்பட்டுக் கொண்டிருந்தது. வியாபார வழியை அடைத்தது, யுத்தங்கள் மற்றும் போர்ப் படைகளில் தோல்வியைத் தழுவியது, பத்ர் யுத்தத்தில் குறைஷிய தலைவர்கள் கொல்லப்பட்டது மற்றும் எழுபது இணை வைப்பாளர்கள் சிறை பிடிக்கப்பட்டது போன்ற விஷயங்கள் அவர்களுடைய புகழ் மற்றும் சமூகத்தில் அவர்களது நிலைமை மீது அசுத்தமாகத் தெரியும் கறைகளாக அமைந்தன. அவர்கள் அவற்றைக் கழுவுவதற்காகவும் தங்களுடைய சமூக செல்வாக்கை வளமுடன் வைத்திருப்பதற்காகவும் மக்கத்து குறைஷியர்களின் விழுந்து கொண்டிருந்த அரசியல் மற்றும் மத செல்வாக்கை செழிப்பாக வைத்திருப்பதற்காகவும் பழிவாங்க விரும்பினார்கள்.

மறுபுறம் பத்ர் யுத்தத்திற்குப் பிறகு மக்கத்து குறைஷியர்களுக்கு மேற்கொண்டு இரண்டு வெட்கத்திற்குரிய இழிவுகளை எதிர் கொள்ள நேரிட்டது. அவற்றின் காரணமாக அபூஸுஃப்யான் உட்பட மக்கத்தினரின் கோபமும், கொந்தளிப்பும் இன்னும் அதிகரித்து விட்டது. அவர்கள் முஸ்லிம்களைப் பழிவாங்குவதற்காக ஒரு முறையான ஆயுதம் ஏந்திய போர் புரிய உறுதியான எண்ணம் கொண்டனர்.

ஆக, ஓர் எழுத்தாளர் உஹது யுத்தத்திற்கான ஒரு காரணமாகப் பின்வரும் விஷயத்தைக் கூறுகிறார்: குறைஷியர்களுக்கு சில திட்டங்களில் தோல்வி ஏற்பட்டது. அதன் காரணமாக அவர்களிடம் வேதனை துயரம் மற்றும் பழிவாங்கும் உணர்வு மிகவும் அதிகரித்து விட்டது.

ஆக, அவர் எழுதுகிறார்: பத்ர்க் களத்தில் இறங்காமல் தன்னுடைய வியாபாரக் குழுக்களைப் பாதுகாப்பான வழிகளில் மக்காவுக்குத் திருப்பிக் கொண்டு வந்த அபூஸுஃப்யானிற்கு மக்கத்தினரின் குத்திக் காட்டும் பேச்சை தொடர்ந்து செவியேற்க நேரிட்டது. அவர் முஸ்லிம்களைப் பழிவாங்குவதற்காக சத்தியம் செய்து கொண்டார். மேலும், தான் மதீனாவுக்குச் சென்று முஸ்லிம்களுடன் முழுமையாகப் போர் புரிவதாக குறைஷிகளிடம் உறுதியளித்திருந்தார்.

அபூஸுஃப்யான் தனது சத்தியத்தை நிறைவேற்றுவதற்காக இரு நூறு பேர் கொண்ட படையையும் தயார் படுத்தி விட்டார். மதீனாவும் சென்றடைந்து விட்டார். ஆனால், அவருக்கு பகிரங்கமாகப் போர் புரிய துணிச்சல் வரவில்லை. மதீனாவின் சுற்று வட்டாரத்தில் சில மரங்களை வெட்டி வீழ்த்தி விட்டு வயல்களுக்குத் தீ வைத்து விட்டு இரண்டு நபர்களைக் கொன்று விட்டு தப்பி ஓடி விட்டார். இந்தப் போர் ஸவீக் போர் எனப்படுகின்றது.

அபூ ஸுஃப்யானோ இனி மக்கத்து மக்கள், பத்ர் களத்தில் நீ உனது கோத்திரத்து மக்களை விட்டு விட்டுத் திரும்பி வந்து விட்டாயே! என்று தன்னைக் குத்திக் காட்டக் கூடாது என்பதற்காகவே முயற்சி செய்திருந்தார். ஆனால், இந்தத் தோல்வியடைந்த திட்டத்திற்குப் பிறகோ மக்கள் அபூஸுஃப்யான் உடைய இந்த சிறு பிள்ளைத்தனமான செயலை தொடர்ச்சியாகக் குத்திக் காட்டத் துவங்கி விட்டனர். எனவே அபூஸுஃப்யான இப்பொழுது தனது

அகந்தைக்கு ஆறுதல் அளிப்பதற்காகவும் கூட முஸ்லிம்களுடன் ஒரு பெரிய போருக்காக முழு முயற்சி செய்து கொண்டிருந்தார். இது தொடர்பாக கடந்த குத்பாக்களில் கரதாவில் தோற்று ஓடியது பற்றி கூறப்பட்டு விட்டது. மதீனாவுக்கு எதிரான அபூஸுஃப்யானின் பயனளிக்காத திட்டத்துக்குப் பிறகு குறைஷியர்கள் தங்களுடைய ஒரு பெரிய வியாபாரக் குழுவை பாதை மாற்றி ஈராக்கின் நெடுஞ்சாலை வழியாக சிரியாவுக்கு அனுப்பி வைத்தார்கள். அதில் தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் மற்றும் இதர வியாபாரப் பொருட்கள் இருந்தன. அவற்றின் மதிப்பு கிட்டத் தட்ட ஒரு இலட்சம் திர்ஹமாக இருந்தது.

இந்த வியாபாரக் குழு கரதா நீரூற்றில் இறங்கிக் கொண்டிருந்தபோது ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் மதீனாவின் எல்லைகளுக்குள் குறைஷிய வியாபாரக் குழுவைத் தடுத்து நிறுத்தி விட்டார்கள். எல்லா வியாபாரப் பொருட்களையும் குறைஷியர்களிடமிருந்து பறித்து எடுத்துக் கொண்டு மதீனாவுக்குச் சென்றடைந்தார்கள். பத்ர் யுத்தத்தில் படுமோசமான தோல்வியடைந்த பிறகு குறைஷியர்களுக்கு கரதா சம்பவம் மிகப் பெரிய தோல்வியாக அமைந்தது. அதாவது, அது அப்பொழுது மதீனாவுக்கு அருகில்தான் இருந்தது. மேலும், அவர்களின் பழிவாங்கும் நெருப்பு இரட்டிப்பாக்கி விட்டிருந்தது. உஹது யுத்தத்திற்கான காரணிகளில் இந்த சம்பவமும் ஒன்றாக இருந்தது.

எவ்வாறு இருப்பினும், பல காரணங்கள் இருந்தன. அவற்றின் காரணமாக காஃபிர்கள் போருக்காக ஆயத்தங்கள் மேற்கொண்டு வந்தார்கள். மேலும், இதற்காக குறைஷியர்கள் தரப்பிலிருந்து அக்கம் பக்கத்து கோத்திரங்களுக்கும் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் தீர்மானிக்கும் போர் புரிவதற்காக மூலதனம் ஒன்று சேர்ந்த பிறகு ,அடுத்த கட்டத்திற்கான ஆயத்தம் துவங்கியது. குறைஷியர்களோ தாங்கள் போருக்கு ஆயத்தமாகத் தான் இருந்தார்கள்.ஆனால், அவர்கள் அக்கம் பக்கத்தின் பல்வேறு கோத்திரங்களை இந்தப் போரில் கலந்து கொள்ளச் செய்வதற்காக பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டார்கள். சிலரிடம் தனிப்பட்ட முறையிலும் சிலரிடம் குழுவாகவும் சென்றார்கள். சிலருக்குப் பேராசை காட்டினார்கள் என்றால், சிலருக்கு மதரீதியான வட்டார ரீதியான தன்மான உணர்வையும், நாணத்தையும் ஊட்டி தங்களுடன் இணைத்துக் கொண்டார்கள். இந்தப் பணிக்காக அம்ர் பின் ஆஸ், ஹுபைரா பின் அபீ வஹப், அப்துல்லாஹ் பின் ஸவாஹ், முஸாஃபிஹ் பின் அப்தி மனாஃப் மற்றும் அபூ உஸ்ஸா ஜம்ஈ போன்றோர் அனுப்பப்பட்டனர்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பத்ரில் சிறைபிடிக்கப்பட்டவர்களில் விடுத்தவர்களில் ஒருவன் தான் இந்த அபூ உஸ்ஸா ஜம்ஈ என்பவன். அப்பொழுது இவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் இவ்வாறு வேண்டிக் கேட்டுக் கொண்டிருந்தான்.

முஹம்மது ((ஸல்)) அவர்களே! எனக்கு ஐந்து மகள்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு என்னைத் தவிர ஆதரவு யாருமில்லை. என்னை மன்னித்து விடுங்கள். (அப்பொழுது) ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவனை மன்னித்தது மட்டுமல்லாமல்; அதையும் தாண்டி ஈட்டுத் தொகை பெறாமலேயே இவனை விடுதலையும் செய்து விட்டிருந்தார்கள். இதுதான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியாக இருந்தது.

அப்பொழுது, தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராக சண்டையிடவும் மாட்டேன் என்றும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராக எவருக்கும் உதவியும் செய்ய மாட்டேன் என்றும் அவன் நேச உடன்பாடு செய்திருந்தான். ஆனால், உஹதுப் போர் சந்தர்ப்பத்தில் ஸஃப்வான் பின் உமையா தரப்பிலிருந்து ஊட்டப்பட்ட பரிசுப் பொருட்கள் மற்றும் கண்ணியம் ஆகியவற்றின் மீதான பேராசையில் அவன் தனது அந்த வாக்குறுதியை முறித்து விட்டான். மேலும், தன்னுடைய கவிதைகளால் அரேபியர்களைப் பழிவாங்கும் உத்வேகத்திற்குத் தூண்ட ஆரம்பித்தான்.

இந்தக் கவிஞர்கள் சென்று கோத்திரங்களைத் தூண்டி விடுவார்கள். கடந்த காலத்தை நினைவூட்டி தூண்டி விடுவார்கள். உடன் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுப்பார்கள். கினானா கோத்திரத்தினர் தஹாமா வாசிகள் மற்றும் பிற கோத்திரங்களிலிருந்து எண்ணற்ற மக்கள் இவர்களுக்கு ஆமாம் போட்டார்கள். மேலும் மதீனாவின் இராஜாங்கத்தின் மீது இரவோடு இரவாகத் தாக்குதல் தொடுப்பதற்கு எல்லாப் புறத்திலிருந்தும் உறுதிபடுத்தினார்கள். இன்னும் கூறுவதாயின் உறுதிப்படுத்த மட்டும் செய்யவில்லை. மாறாக அதையும் தாண்டி கலந்து கொண்டார்கள்.

காஃபிர்களின் போருக்காக செய்து கொண்டிருந்த இந்த ஆயத்தங்கள் பற்றி ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் தரப்பிலிருந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தகவல் கிடைத்து விட்டது. அல்ஹம்துலில்லாஹ். அதன் விவரம் பின்வருமாறு:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் குறைஷியர்களின் இந்தப் போர் ஆயத்தங்கள் மற்றும் ஆரவாரம் பற்றிய தகவலை மக்காவில் இருந்த அன்னாருடைய தந்தையின் சகோதரர் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அனுப்பினார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இந்தத் தகவலை ஒரு கடிதம் மூலமாக வழங்கினார்கள். அதை அவர்கள் பனூ ஃகுஃப்பார் கோத்திரத்தின் ஒரு நபருடைய கையில் கொடுத்து அனுப்பினார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அந்த மனிதரைக் கடிதம் கொண்டு செல்வதற்காக ஊதியம் கொடுத்து தயார்படுத்தினார்கள். மேலும், அவன் மூன்று இரவு, மூன்று பகல் தொடர்ச்சியாகப் பயணம் செய்து மதீனா சென்றடைய வேண்டும்; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் இந்தக் கடிதத்தை ஒப்படைத்து விட வேண்டும் என்ற நிபந்தனையை அவனிடம் வைத்தார்கள்.

ஆக, அவன் இரவு பகலாக பயணம் செய்தான். மூன்றாவது நாள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்றடைந்தான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்கள் அப்பொழுது குபாவில் இருந்தார்கள். அந்த மனிதன் அந்தக் கடிதத்தை அன்னாரிடம் ஒப்படைத்தபோது, அன்னார் அதன் முத்திரையைப் பிரித்தார்கள். பிறகு, உபை பின் கஅப் அவர்களிடம் கடிதத்தைக் கொடுத்து வாசித்துக் காட்டுமாறு கூறினார்கள். உபை பின் கஅப் அவர்கள் கடிதத்தை அன்னாருக்கு வாசித்துக் காட்டினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்கள் உபை அவர்களிடம் அந்தக் கடிதத்தையும், அந்த செய்தியையும் மறைத்து வைக்குமாறு கூறினார்கள்.

மற்றோர் இடத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாமே ஸஅது பின் ரபீஃ அவர்களுடைய வீட்டிற்குச் சென்றார்கள். மேலும், அவர்களிடம் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் கடிதத்தைப் பற்றி கூறினார்கள். மேலும், நான் நன்மையை எதிர்பார்க்கின்றேன். நீர் இந்தச் செய்தியை இரகசியமாக வைப்பீராக! என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸஅது அவர்களின் இல்லத்திற்கு வருகை தந்தபோது அவர்களின் மனைவி அவரிடம் சென்று, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்ன கூறினார்கள்? என்று கேட்டார். (அவர் இவர்கள் பேசியதை வீட்டிற்குள்ளே இருந்து கொண்டு கேட்டுக் கொண்டிருந்தார்) ஸஅது (ரலி) அவர்கள் உனக்கு எதுக்கு அது? என்று கேட்டார்கள். அந்தப் பெண் நான் எல்லா விஷயத்தையும் கேட்டு விட்டேன் என்றார். அந்தப் பெண் எல்லா விஷயத்தையும் கூறிய பிறகு, ஸஅது (ரலி) அவர்கள் இன்னாலில்லாஹ் என்று கூறினார்கள்.

பிறகு நாங்கள் பேசுவதை நீ கேட்டு விட்டாய் என்று நான் நினைக்கவில்லை என்று கூறி, அவர்கள் தம் மனைவியை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அழைத்துச் சென்றார்கள். அவர் விவகாரத்தை அன்னாரிடம் கூறினார்கள். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்களோ என்னிடம் இரகசியத்தை மறைத்து வைக்குமாறு கூறினீர்கள். விஷயம் மக்களிடம் எங்கு பரவிடப் போகிறது என்றும், நான்தான் இந்த இரகசியத்தை அம்பலமாக்கி விட்டதாகத் தாங்கள் கருதி விடப் போகிறீர்கள் என்றும் எனக்கு அச்சம் ஏற்பட்டது என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

அதற்கு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சரி, இப்பொழுது இந்தப் பெண்ணை செல்ல விடுங்கள் என்று கூறினார்கள். அந்தப் பெண்ணை எச்சரிக்கவும் செய்திருப்பார்கள். ஒருபுறமோ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த எச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொண்டார்கள். ஆனால், மறுபுறமோ மதீனத்து யூதர்களும், நயவஞ்சகர்களும் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு ஏதோ ஒரு நல்ல செய்தி கிடைக்கவில்லை என்று பரப்பி விட்டார்கள். அவர்களுக்கு சுயமே தங்களுடைய அகத்தை வெளிப்படுத்துவதற்கும், பழித்துப் பேசுவதற்கும் மற்றொரு சந்தர்ப்பம் கிடைத்து

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

விட்டது. அதாவது, அந்த நயவஞ்சகர்களுக்கும், எதிரிகளுக்கும் அவர்கள் அந்த செய்தியில் நிறம் பூசி அதை நன்றாகப் பரப்பி விட்டார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களைத் தங்கள் தரப்பலிருந்து அச்சுறுத்துவதற்கான முழு முயற்சி செய்தார்கள். இவ்வாறே இந்த செய்தி மதீனாவின் சுற்று வட்டாரத்தில் பரவி விட்டது. ஒவ்வொருவரும் விழிப்புணர்வு கொண்டு விட்டார். மக்கத்து இணை வைப்பாளர்கள் மீண்டும் போருக்காக வருகிறார்கள் என்ற இந்தப் பேச்சு எல்லாப் பக்கமும் ஒலித்தது.

அல்லாமா இப்னு அப்துல் பர் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் இணை வைப்பாளர்களின் செய்திகளை எழுதி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பக்கம் அனுப்பி வைத்து வந்தார்கள். மக்காவில் இருந்த முஸ்லிம்கள் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களைத் தங்களுக்கு ஆதரவானவராகக் கருதி வந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களோ, தாம் மதீனாவில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்களிடம் சென்று விட விரும்பினார்கள். ஆனால், தாங்கள் மக்காவில் இருப்பது அதிகம் சிறந்தது என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்கள் அன்னாருக்கு கடிதம் அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களால் அனுப்பப்பட்ட செய்திகள் மிகவும் விரிவானவையாக இருந்து வந்தன. ஒரு கடிதத்தில் அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்: குறைஷியர்களின் படை தங்களை நோக்கி பயணமாகி விட்டது. அவர்கள் வந்தடைவதற்குள் அவர்களுடன் போரிட இயன்ற அளவுக்கு ஆயத்தம் செய்து கொள்ளுங்கள். இது மொத்தம் 3000 பேர் கொண்ட படையாகும். அதற்கு முன் வரிசையில் 200 குதிரை வீரர்கள் உள்ளனர். 3000 ஒட்டகங்கள் உள்ளன. மேலும், அவர்களுடைய எல்லா விதமான ஆயுதங்களையும் அவர்கள் உடன் எடுத்துக் கொண்டு வருகின்றனர்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீனில் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் தகவல் தெரிவிப்பு பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

எந்த வியாபாரக் குழுவைப் பற்றி பத்ர் யுத்தத்தின் நிலைமைகளில் எடுத்துக் கூறப்பட்டு விட்டதோ அதன் இலாபத் தொகையான 50,000 தீனார் மக்கத்து தலைவர்களின் தீர்மானத்துக்கு ஏற்ப முஸ்லிம்களுக்கு எதிராக தாக்குதல் தொடுப்பதற்கு ஆயத்தம் மேற்கொள்வதற்காக அப்போது வரை தாருன் நத்வாவில் பாதுகாப்பாகக் கிடந்தது. இப்பொழுது அந்தப் பணம் வெளியே எடுக்கப்பட்டது. மேலும், பெரும் ஆரவாரத்துடன் போருக்கான ஆயத்தம் துவங்கியது. முஸ்லிம்களுக்கு அந்த ஆயத்தத்தைப் பற்றி தகவல் கூட தெரிந்திருக்காது. அதற்குள் காஃபிர்களின் படை முஸ்லிம்களின் வாயில்கள் வரை வந்தடைந்திருக்கலாம். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்களின் விழிப்புணர்வு கொண்ட சிந்தை எல்லா அவசியமான முன்னேற்பாடுகளையும் மேற்கொண்டுவிட்டிருந்தது. அதாவது, உள்ளத்தால் தம்முடன் இருந்த தமது தந்தையின் சகோதரரான ஹஸ்ரத் அப்பாஸ் பின் அப்தில் முத்தலிப் (ரலி) அவர்களை மக்காவில் தங்கியிருக்குமாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வலியுறுத்திக் கூறியிருந்தார்கள். மேலும், அவர்கள் குறைஷியர்களின் ஒவ்வோர் அசைவுகள் பற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தகவல் கொடுத்து வந்தார்கள்.

ஆக, ஹஸ்ரத் அப்பாஸ் பின் அப்தில் முத்தலிப் (ரலி) அவர்கள் இந்த சந்தர்ப்பத்திலும் பனூ ஃகுஃப்பார் கோத்திரத்தின் ஒரு துரிதமான குதிரை வீரருக்குப் பெரும் பரிசுக்கான வாக்குறுதி அளித்து மதீனாவின் பக்கம் அனுப்பி வைத்தார்கள். மேலும், ஒரு கடிதத்தின் மூலமாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் குறைஷியர்களின் இந்த எண்ணத்தைப் பற்றி தகவல் கொடுத்தார்கள். மேலும், மூன்று நாட்களுக்குள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் இந்தக் கடிதத்தை ஒப்படைத்து விட வேண்டும் என்று அந்தத் தூதுவனுக்கு வலியுறுத்திக் கூறியிருந்தார்கள்.

இந்தத் தூதுவன் மதீனாவை சென்றடைந்தபோது, தற்செயலாக அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவின் அக்கம் பக்கத்திலிருந்த குபாவிற்கு அதாவது அருகில் உள்ள இடத்தில் இருந்தார்கள். எனவே இந்தத் தூதுவன் அன்னாருக்குப் பின்னால் அங்கேயே குபாவிற்கு சென்றடைந்தான். மேலும், மூடப்பட்டிருந்த அந்தக் கடிதத்தை அன்னாருக்கு முன்னால் சமர்ப்பித்து விட்டான்.

அன்னார் உடனடியாகத் தமது வஹீயை எழுதுபவரான உபை பின் கஅப் அன்ஸாரியிடம் இந்தக் கடிதத்தைக் கொடுத்து அதில் என்ன இருக்கின்றது? என்று வாசித்துக் காட்டுவீராக! என்று கூறினார்கள். உபை கடிதத்தை வாசித்துக் காட்டினார்கள். அதில் குறைஷியர்களின் ஒரு வீரியம் மிகுந்த படை மக்காவிலிருந்து வருகிறது என்ற இந்த பயங்கரமான செய்தி இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்தக் கடிதத்தில் இருந்ததைக் கேட்டு விட்டு, இதில் உள்ள கருத்து பற்றி யாருக்கும் தெரியக் கூடாது என்று உபை பின் கஅபிற்கு வலியுறுத்திக் கூறினார்கள்.

எவ்வாறு இருப்பினும், இந்தப் படை புறப்பட்டது. மேலும், அதன் விளக்கத்தில் மேற்கொண்டு இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: குறைஷியர்களின் படை ஷவ்வால் 5-ம் தேதி மக்காவில் இருந்து புறப்பட்டது. இந்தப் போரில் குறைஷியர்களின் தலைமை பொறுப்பு அபூஸுஃப்யான் கையில் இருந்தது. குதிரை வீரர்களின் கண்காணிப்பாளராக காலித் பின் வலீத் இருந்தார். மேலும், கொடியை ஏந்துபவர்களாக பனூ அப்துத் தார் கோத்திரத்தினர் இருந்தனர். மேலும், கேடயங்களை ஏந்திக் கொண்டு வில் அம்பை உடன் எடுத்துக் கொண்டு தங்களுடைய நெஞ்சங்களைப் பழிவாங்கும் உத்வேகத்தால் நிறைத்துக் கொண்டு 3000 போர் வீரர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராக போர் புரிவதற்காக மக்காவிலிருந்து மதீனாவை நோக்கிப் புறப்பட்டார்கள்.

அவர்களில் 2900 பேர் குறைஷியர்களாகவும், அவர்களுடைய உதவியாளர்கள் மற்றும் இதர கோத்திரங்களைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தார்கள். அதேவேளையில், 100 பேர் கினானா கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். முன்னர் கூறப்பட்டு விட்டது போன்று 700 கவசங்கள், 200 குதிரைகள், 3000 ஒட்டகங்கள் ஆகியவற்றை உடன் எடுத்துச் சென்றனர். இவை மட்டுமின்றி (கூடுதலாக) வழியில் உண்பதற்காக அறுக்கப்படும் ஒட்டகங்கள் இருந்தன. கொட்டுவதற்காக மேளங்கள், குடிப்பதற்காக குறிப்பான அளவு மதுவையும் உடன் தூக்கிச் சென்றார்கள்.

அடுத்து, ஒரு வாழ்க்கை வரலாற்று நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: குறைஷியர்கள் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களைத் தங்களுடன் இந்த யுத்தத்தில் அழைத்துச் செல்ல முயற்சி செய்தார்கள். ஆனால், ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் காரணம் கூறி மறுத்து விட்டார்கள். பத்ர் யுத்தம் சந்தர்பத்தில் அவர்களுடன் செய்யப்பட்ட குறைஷிகளின் அந்தப் பொருட்படுத்தாமையைப் பற்றி கூறினார்கள். அதாவது, ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் சிறை பிடிக்கப்பட்டிருந்தார்கள். யாரும் அவர்களை விடுதலை செய்வதில் அவர்களுக்கு உதவவில்லை.

பல பெண்களும் கூட பழிவாங்கும் உத்வேகத்தில் போரில் ஆண்களுடன் செல்வோம் என்று பிடிவாதமாக இருந்தார்கள். இதனால் ஒரு மனிதன் ஆலோசனை சபையில் இவ்வாறு கூறினான்: நாம் தலை மீது கஃபன் அணிந்து கொண்டு செல்கின்றோம்.ஒருவேளை கொல்லப்பட்ட நம்மவர்களுக்காக நம்மால் பழிதீர்த்துக் கொள்ள முடியவில்லை என்றால் உயிருடன் திரும்ப மாட்டோம். எனவே பெண்கள் உடனிருப்பது நமக்கு பலனுள்ளதாக அமையும். இவர்கள் நம்முடைய உத்வேகத்தைத் தூண்டுவார்கள். மேலும், நமக்கு பத்ர் உடைய நிகழ்வுகளை நினைவூட்டி முன்னோக்கிச் செல்வதற்கான உணர்வை ஏற்படுத்துவார்கள்.

நவ்ஃபில் பின் முஆவிய்யா தீலீ என்பவன், இந்தப் பெண்கள் நம்முடைய கண்ணியமும், கௌரவமும் ஆவார்கள். ஒருவேளை நமக்குத் தோல்வி ஏற்பட்டு விட்டால் இவர்களுக்கு ஏற்படும் அவமரியாதையால் நம்முடைய கௌரவம் மண்ணோடு மண்ணாகி விடும் என்று கூறினான். பல்வேறு கருத்துகள் முன் வந்தன.

அபூஸுஃப்யான் உடைய மனைவி ஹிந்தும் அந்த சந்தர்ப்பத்தில் இருந்தார். இந்த இருவகையான கருத்துகளும் ஆண்கள் தரப்பிலிருந்து வந்த பின்னர் இந்தப் பெண் கூறினார்: மக்களே! உங்களால் உயிர் தப்பி வரமுடியாது என்ற விஷயத்தால் பதற்றமடையாதீர்கள். நீங்களோ பத்ரில் இருந்தும் பாதுகாப்பாக திரும்பி வந்து விட்டிருந்தீர்கள். மேலும், நீங்கள் உங்களுடைய மனைவிகளையும் பார்த்து விட்டிருந்தீர்கள். நீங்கள் எங்களை இந்தப் போரில் உடன் அழைத்துச் செல்வதை மறுக்க முடியாது. நீங்கள் எல்லாம் உங்களுடைய மனைவிமார்களைத் திருப்பி அனுப்பி இதே தவறைத்தான் பத்ரில் செய்தீர்கள். ஒருவேளை இந்தப் பெண்கள் பெரும் பத்ர் யுத்தத்தில் உங்களுடன் இருந்திருந்தால் உங்களுக்குத் தன்மான உணர்வூட்டி முன்னால் அனுப்பி இருந்திருப்பார்கள். அந்தோ! பத்ர் களத்தில் நம்முடைய அன்பிற்குரிய அன்பர்கள் எதிரிகள் கைகளால் கொல்லப்பட்டார்கள்.

எவ்வாறு இருப்பினும், குறைஷிய தலைவர்கள் ஹிந்த் கூறிய விஷயத்தில் ஒருமித்தார்கள். மேலும், அவர்கள் பெண்களைப் படையுடன் அழைத்துச் செல்ல சம்மதித்து விட்டார்கள். படையுடன் சென்ற பெண்களின் எண்ணிக்கை 15 என்று கூறப்பட்டுள்ளது.

அவர்களில் அபூஸுஃப்யான் தன் மனைவியை சேர்த்தார். ஹிந்த் பின்த் உத்பாவை சேர்த்தார். இவ்வாறே இக்ரிமா

பின் அபீ ஜஹ்ல் தனது மனைவி உம்மு ஹக்கீம் பின்த் ஹாரிஸ் பின் ஹிஷ்ஷாமை உடன் அழைத்துக் கொண்டார். ஹாரிஸ் பின் ஹிஷ்ஷாம் தன் மனைவி ஃபாத்திமா பின்த் வலீதை உடன் அழைத்துக் கொண்டார். ஸஃப்வான் பின் உமையா, அப்துல்லாஹ் பின்த் ஸஃப்வானின் தாயான தன் மனைவி பர்ஸா பின்த் மஸ்ஊதை உடன் அழைத்துக் கொண்டார்.

இப்னு இஸ்ஹாக் கூறினார்: அம்ர் பின் ஆஸ் தன் மனைவி ரைத்தன் பின்த் முனப்பிஃ உடன் புறப்பட்டார். தல்ஹா பின் அபீ தல்ஹா தன் மனைவி சுலாஃபா பின்த் ஸஅதை உடன் அழைத்துக் கொண்டார். இவர் தல்ஹாவின் மகன்களான முஸாஃபிஹ், ஜுலாஸ் மற்றும் கிலாப் ஆகியோரின் தாயார் ஆவார். இவர்கள் எல்லாரும் உஹது போர் அன்று கொல்லப்பட்டனர். பனூ மாலிக் கோத்திரத்தைச் சேர்ந்த ஃஹுனாஸ் பின்த் மாலிக் எனும் பெண் தன் மகன் அபீ அஸீஸ் பின் உமைருடன் புறப்பட்டார். இவர் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களுடைய தாயார் ஆவார். மேலும், பனூ ஹாரிஸ் கோத்திரத்தைச் சேர்ந்த அம்ரா பின்த் அல்கமா எனும் பெண்ணும் படையுடன் இணைந்து கொண்டார்.

ஹிந்த் பின்த் உத்பா வஹ்ஷீயிடம் வரும்போது அல்லது போருக்கிடையில் வஹ்ஷீ இவரிடம் வரும்போது இவர் அவரிடம் கூறுவார்: அபூதஸ்மாவே! இது வஹ்ஷீயின் விளிப்பெயர் ஆகும். எங்களுடைய உள்ளங்களுக்கு நிம்மதி கிடைக்கும் செயலை நீ செய்ய வேண்டும். வஹ்ஷீ எனப்படும் இந்தக் கருப்பின அடிமையிடம் ஓர் ஈட்டி இருந்தது. அது மிகவும் குறைவாகவே இலக்கைத் தவற விடும். யார் மீது படுமோ அவரை உயிருடன் விடாது.

வஹ்ஷீ ஜுபைர் பின் முத்அம் உடைய அடிமையாக இருந்தான். அவன் வஹ்ஷீயை அழைத்துக் கூறினான்: நீயும் படையுடன் செல். ஒருவேளை நீ ஹம்ஸாவை ஷஹீது ஆக்கி விட்டாய் என்றால், கொன்று விட்டாய் என்றால் நான் உன்னை விடுவித்து விடுவேன். ஏனெனில், ஹம்ஸா என் தந்தையின் சகோதரர் துஅய்மா பின் அத்தீயைக் கொன்று விட்டார். அந்தப் படை மதீனாவுக்கு எதிராக உஹது மலையில் ஸப்காவின் மத்தியில் கினாஆ எனும் ஊரின் ஓரத்தில் அமைந்துள்ள அய்னைன் மலை மீது முகாமிட்டுள்ளது. ஸப்கா என்பதும் மதீனாவில் அய்னைன் மலை மற்றும் ஜுர்ஃப் என்பதற்கு அருகில் உள்ள இடமாகும். ஜுர்ஃப் என்பது மதீனாவிலிருந்து மூன்று மைல் வடக்கு திசையை நோக்கி உள்ள ஓரிடமாகும். அய்னைன் என்பது உஹதின் ஒரு மலைக் குன்றின் பெயராகும். உஹதுக்கும், அதற்கும் இடையில் ஓர் ஊர் உள்ளது. கினாஆ என்பது மதீனாவுக்கு உஹதுக்கும் நடுவில் மதீனாவின் பிரசித்திப் பெற்ற மூன்று ஊர்களில் ஓர் ஊராகும். இது அது அமைந்திருந்த இடமாகும்.

போரின் விவரங்கள் பற்றி மேற்கொண்டு இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் குறைஷிய படை பற்றிய தகவல்களைக் கொடுத்தார்கள். மேலும், அமர் பின் ஸாலிம் அவர்கள் மக்கத்து இணை வைப்பாளர்கள் புறப்பட்ட தகவலை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தெரிவித்தார்கள். இதனால் அபூ ஸுஃப்யான் கவலவரமடைந்தார். அவருக்குத் தெரிந்து விட்டது.

என்ன நடந்தது? என்றால், அம்ர் பின் ஸாலிம் அவர்கள் தம்முடைய சில தோழர்களுடன் ஸீ தவா எனும் இடத்திலிருந்து குறைஷிய படையை விட்டுப் பிரிந்து வேக வேகமாக மதீனாவுக்கு வந்தடைந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் குறைஷிய படையின் தாக்குதல் பற்றிய செய்தியைத் தெரிவித்தார்கள்.

அம்ர் பின் ஸாலிம் அவர்களின் இந்த படைக் குழு மதீனாவிலிருந்து திரும்பி வருகையில் அப்வா என்ற இடத்தில் அபூஸுஃப்யானின் படையை இரவு நேரத்தில் தாண்டிச் சென்று விட்டது. அதாவது, அங்கு அவர்கள் இருந்தபோது அவர்களைத் தாண்டிச் சென்று விட்டது. விடிந்ததும் அபூஸுஃப்யான் மக்காவை நோக்கித் திரும்பிச் சென்று விட்டார். அம்ர் பின் ஸாலிம் அவர்கள் தம்முடைய சில தோழர்களுடன் இரவு நேரத்தில் மக்காவை நோக்கிச் சென்று விட்டதாக அபூஸுஃப்யானுக்கு வழியில் தெரிவிக்கப்பட்டது. அபூஸுஃப்யான் பதற்றமடைந்தவாறு கூறினார்:

நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். இவர் நிச்சயமாக முஹம்மது ((ஸல்)) அவர்களிடம் சென்று அவருக்கு நாம் முன்னோக்கி வருவது பற்றி தகவல் தெரிவித்து விட்டு வந்திருக்கிறார். அவருக்கு அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு நம்மைப் பற்றிய எல்லாத் தகவல்களையும் கொடுத்து விட்டார். மேலும், அவரை முன்னரே எச்சரிக்கை செய்து விட்டார். இப்பொழுது நாம் சென்று சேர்வதற்குள் முஸ்லிம்கள் தங்களைப் பாதுகாப்பாக ஆக்கிக் கொண்டிருப்பார்கள். இவ்வாறோ நம்மால் அவர்களுக்கு எந்த இழப்பையும் ஏற்படுத்த முடியாது. நம்மால் நமது நோக்கத்தில் வெற்றியடையவும் முடியாது.

உடனடியாக ஸஃப்வான் பின் உமையா கூறினார்: ஒருவேளை அவர்கள் கோட்டைகளை விட்டு வெளியே மைதானத்தில் நம்முடன் போரிட வெளியேறவில்லை என்றால் பதற்றமடையத் தேவையில்லை. நாம் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் ஆகிய இரு கோத்திரங்களின் பேரீத்தம் பழத் தோட்டங்களை அறுத்து விடுவோம். அதை அவர்களால் ஒருபோதும் நிவர்த்தி செய்ய முடியாது. அவர்கள் தங்களுடைய செல்வம் மற்றும் தானியங்களைக் கை நழுவ விட்டு விடுவார்கள். ஒருவேளை அவர்கள் பாலைவனத்தில் போர் புரிவதற்காக கோட்டைகளை விட்டு வெளியேறி வந்தார்கள் என்றாலுமே கவலையடைய வேண்டிய தேவை ஒன்றுமே இல்லை. அவர்களுடைய எண்ணிக்கையைக் காட்டிலும் நம்முடைய எண்ணிக்கை எவ்வளவோ அதிகமாக இருக்கிறது.

நம்முடைய ஆயுதங்களுடனும் அவர்களுடைய ஆயுதங்களுக்கு எந்த (எண்ணிக்கை)ப் பொருத்தமும் இல்லை. அவர்களிடம் குதிரைகள் இல்லை. நம்மிடமோ நிறைய குதிரைகள் இருக்கின்றன. நாம் போரில் அவர்களுக்கு உயிரழப்பையும் பொருளிழப்பையும் ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டிருக்கின்றோம். ஆனால், அவர்களாலோ நம்முடன் இவ்வாறு சண்டையிட முடியாது.

இது அவர்கள் வெளிப்படுத்திய அவர்களுடைய சிந்தனையாகும்.

எவ்வாறு இருப்பினும், மதீனாவை நோக்கி முன்னோக்கிச் சென்றவாறு குறைஷியர்கள் அப்வா எனும் இடத்தில் முகாமிட்டபோது, ஹிந்த் பின்த் உத்பா அபூஸுஃப்யானிடம் நீங்கள் எல்லாம் முஹம்மது ((ஸல்)) அவர்களின் தாயாரின் கப்ரைத் தோண்டி எடுங்கள். ஏனெனில், அவர்களுடைய கப்ர் அப்வாவில் உள்ளது. உங்களுடைய யாராவது ஒரு நபரை அவர்கள் சிறைபிடித்தால் நீங்கள் ஒவ்வொருவருக்கும் ஈட்டுத் தொகையாக அவர்களுடைய தாயாரின் ஓர் உடல் உறுப்பைக் கொடுத்து விடுங்கள் என்று கூறினார். விநோதமான ஷைத்தானிய ஆலோசனையாக இருந்தது. அபூஸுஃப்யான் இந்த விஷயத்தைக் குறைஷியர்களிடம் கூறினார். மேலும், இது ஓர் ஆலோசனையாகும் என்று கூறினார்.

அதற்கு குறைஷியர்கள் நீங்கள் அந்தக் கதவைத் திறக்காதீர்கள். இல்லையேல் பனூ பிக்ர் கோத்திரத்தினர் நம்முடைய மரணித்தவர்களின் கப்ருகளைத் தோண்டி எடுப்பார்கள். இது பெரும் ஆபத்தான ஆலோசனையாகும். இதை ஏற்காதீர்கள் என்று கூறினர்.

எவ்வாறு இருப்பினும், இந்த மக்கள் வழியில் எங்கெல்லாம் முகாமிட்டார்களோ அங்கு ஒட்டகங்கள் அறுக்கப்படும். பெண்கள் கவிதைகளைப் பாடி நன்றாக கோபமூட்டுவார்கள். கோப்பைகளில் மதுவை நிரப்பிக் கொடுப்பார்கள். இரங்கல் பாடல் பாடி தாங்களும் ஒப்பாரி வைப்பார்கள். மற்றவர்களையும் அழ வைப்பார்கள். பழிவாங்கத் தூண்டுவார்கள். காஃபிர்களின் இந்தக் குழு இவ்வாறே முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தது. மறுபக்கம் முஸ்லிம்கள் தம்மளவிலும் ஆயத்தம் மேற்கொள்வதில் ஈடுபட்டிருந்தார்கள். இது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஃபஸாலாவின் மகன்களான அனஸ் மற்றும் முஅன்னஸ் ஆகிய இருவரையும் வியாழக்கிழமை இரவு ஷவ்வாலின் முதல் பத்து நாள்களில் உளவறிந்து வருவதற்காக அனுப்பினார்கள். அநேகமாக இதே சந்தர்ப்பத்தில்தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களின் எண்ணிக்கை மற்றும் ஆற்றலைக் கண்டறிவதற்காக அனைத்து முஸ்லிம் குடிமக்களின் மக்கள் தொகைக் கணக்கெடுக்குமாறும் வழிகாட்டல் வழங்கினார்கள்.

ஆக, மக்கள் தொகை கணக்கெடுக்கப்பட்டபோது அப்பொழுது வரை மொத்தம் 1500 முஸ்லிம்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிய வந்தது. அப்போதைய நிலைமைகளின் கீழ் இந்த எண்ணிக்கையே மிகப் பெரும் எண்ணிக்கையாகக் கருதப்பட்டது.

சில ஸஹாபிகளோ அப்பொழுது மகிழ்ச்சியின் உத்வேகத்தில் நம் எண்ணிக்கை ஒன்னரை ஆயிரம் வரை

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

எட்டிய பிறகும் நமக்கு யாரைப் பற்றியும் கவலை இருக்க முடியுமா? என்ற அளவுக்குக் கூறி விட்டார்கள். ஆனால், அவர்களில் இருந்தே ஒரு ஸஹாபி கூறுகின்றார்கள்: இதற்கு பிறகு எங்களுக்கு எப்படிப்பட்ட கடினமான நேரங்கள் வந்தனவென்றால் சில நேரங்களில் தொழுகையையும் நாங்கள் ஒளிந்து தொழ வேண்டி வந்தது.

இதற்கு முன்னரும் ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பு செய்ய வைத்தார்கள். அப்பொழுது 600,700 பேருக்கு நடுவில் எண்ணிக்கை வந்திருந்தது.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்தி அறிந்து வருவதற்காக அனுப்பியிருந்த இரு ஸஹாபியும் அகீக் என்ற இடத்தில் குறைஷியர்களைச் சென்றடைந்தார்கள். திரும்பி ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து விட்டார்கள். மேலும், அன்னாருக்குக் காஃபிர்களின் படையைப் பற்றி செய்தி தெரிவித்தார்கள்.

இந்த அகீக் என்ற பெயரிலும் அரேபிய தீபகற்பத்தில் பல ஊர்கள் உள்ளன. எல்லாவற்றையும் விட முக்கியமான ஊர் மதீனாவின் அகீக் எனும் ஊராகும். அது மதீனாவின் தென்மேற்கு திசையிலிருந்து வடகிழக்கு திசை வரை பரந்துள்ளது. மேலும், அதில் மதீனா முனவ்வராவின் எல்லா ஊர்களும் வந்து அடங்கி விடுகின்றன.

எவ்வாறு இருப்பினும், இவர்கள் இருவரும் வந்து இவ்வாறு கூறினார்கள்: அந்தக் காஃபிர்களின் படை தங்களுடைய ஒட்டகங்கள் மற்றும் குதிரைகளை உரைஸ் என்ற இடத்தின் வயலில் விட்டுள்ளார்கள். உரைஸ் என்பதும் மதீனாவிலிருந்து மூன்று மைல் தொலைவில் அமைந்துள்ள ஒரு தோட்டம் ஆகும்.

அவை அங்கு எந்தப் பசுமையையும் விட்டு வைக்கவில்லை. எல்லாவற்றையும் மேய்ந்து விட்டன. இணை வைப்பாளர்கள் புதன்கிழமை அன்று கினாஆ எனும் இடத்தில் இறங்கினார்கள். வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை அன்று அவர்களுடைய ஒட்டகங்கள் அந்த ஊரின் பசுமையைத் தின்று கொண்டே இருந்தன. அவை எந்தப் பசுமையையும் விட்டு வைக்கவில்லை.

பிறகு, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹுப்பாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்களையும் அவர்கள் பக்கம் அனுப்பினார்கள். அவர்கள் அந்த மக்களைப் பார்த்தார்கள். பிறகு திரும்பி வந்தார்கள். அவர்களுடைய எண்ணிக்கை மற்றும் பொருட்களைக் கணித்துக் கூறினார்கள். அப்பொழுது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் அவர்களுடைய நிலையை எவருக்கும் சொல்லக் கூடாது.

حَسْبُنَا اللّٰهُ وَنِعْمَ الْوَكِيْلُ. اَللّٰهُمَّ بِكَ اَجُوْلُ وَبِكَ اَصُوْلُ

அதாவது, நமக்கு அல்லாஹ் போதுமானவன். மேலும், அவன் மிக நன்றாகப் பணி அமைத்துக் கொடுப்பவன் ஆவான். அல்லாஹ்வே! நான் உன்னையே சுற்றி வருகிறேன். உன்னுடன் இணைந்தே தாக்குதல் தொடுக்கிறேன்.

அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் ஆகிய இரு கோத்திரங்களின் தலைவர்களான ஹஸ்ரத் ஸஅது பின் முஆஸ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உஸைத் பின் ஃஹுஸைர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஸஅது பின் உபாதா(ரலி) அவர்கள் இணை வைப்பாளர்களின் இரவு நேரத்து தாக்குதல்களின ஆபாயங்களின் காரணமாக ஆயுதங்களை ஏந்தியவாறு பள்ளிவாசலில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கதவுக்கு அருகில் இரவைக் கழித்தார்கள். மேலும், காலை வரை மதீனாவையும் காவல் காத்தார்கள்.

மக்கத்து இணை வைப்பாளர்களின் படை முஸ்லிம்கள் மதீனாவிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் கினாஆ கோத்திரத்தின் உப்பும், புதைக்குழிகளும் நிறைந்த நிலத்தில் முகாமிட்டார்கள். மதீனா முனவ்வராவின் கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு திசையில் அடர்ந்த பேரீத்தம் பழ மரங்கள் இருந்தன. அவற்றின் வழியாக கடந்து சென்று எந்தவோர் ஊர் மீதோ அல்லது பகுதி மீதோ தாக்குதல் தொடுப்பது எளிய காரியமாக இருக்கவில்லை. ஏனெனில், தோட்டங்களில் எதிரிகளின் ஒவ்வொரு மனிதனாகத் தான் சிரமப்பட்டு முன்னால் செல்ல முடியும். இந்த சூழ்நிலையில் தாக்குதல் தொடுப்பவர்கள் சுலபமாக் கொல்லப்படுவார்கள். வடக்கு திசையிலிருந்து மட்டும் தாக்குதல் தொடுக்க முடிந்திருந்தது. எனவே குறைஷியர்கள் வடக்கு திசையிலும் மேற்கு திசையில் முகாமிட்டார்கள். அடுத்து முழு மக்கள் குடியிருப்பும் ஓரிடத்தில் இருக்கவில்லை. மாறாக, மலைகளுக்கு நடுவில் விசாலமான மைதானத்தில் சிதறிக் கிடந்த சிற்றூர்கள் அல்லது பகுதிகளில் மக்கள் குடியிருப்புகள் இருந்தன.

சில கோத்திரங்கள் தங்களுடைய நிலங்கள் மற்றும் தோட்டங்களுக்கு அருகில் குடியிருப்புக்கான ஏற்பாட்டைச் செய்து கொண்டு விட்டிருந்தன. பல இரு அடுக்கு சிறிய கோட்டைகள் கட்டப்பட்டு விட்டிருந்தன. அவர்கள் எல்லா ஆபத்து நேரங்களிலும் குழந்தைகளையும், பெண்களையும் சிறிய கோட்டைகளில் மேல் தளத்தில் கொண்டு சேர்த்து விடுவார்கள். சுயம் கவலையின்றி தாக்குதல் தொடுப்பவர்களை எதிர் கொள்வார்கள்.

மற்றோர் வாழ்க்கை வரலாற்று எழுத்தாளர் இவ்வாறு எழுதுகிறார்: நயவஞ்சகர்கள், யூதர்கள், போர் புரிய முடியாத முஸ்லிம்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோரைத் தவிர வேறு எவரும் எஞ்சியிருக்காத மதீனாவுக்கும், முஸ்லிம்களின் படைப்புக்கும் நடுவிலும் எதிரிப் படை காலை வரை தடையை ஏற்படுத்தி வந்தது.

இதன் விளக்கத்தில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:

அநேகமாக ஹிஜ்ரீ 3-ம் ஆண்டு ரமலான் மாதத்தின் இறுதியில் அல்லது ஷவ்வால் மாதத்தின் துவக்கத்தில் குறைஷிகளின் படை மக்காவிலிருந்து புறப்பட்டது. படையில் மற்ற அரபுக் கோத்திரங்களின் பல வீரர்களும் இணைந்திருந்தார்கள். அபூஸுஃப்யான் படைத் தளபதியாக இருந்தார். படையின் எண்ணிக்கை மூவாயிரமாக இருந்தது. அதில் கவசம் அணிந்த வீரர்கள் 700 பேர் இருந்தார்கள். சவாரிகளுக்கான பொருட்களும் போதுமான அளவு இருந்தது.

அதாவது 200 குதிரைகளும், 3000 ஒட்டகங்களும் இருந்தன. போர்த் தளவாடங்களும் போதுமான அளவுக்கு இருந்தன. பெண்களும் உடன் இருந்தனர். அபூஸுஃப்யானின் மனைவி ஹிந்த், இக்ரிமா பின் அபீ ஜஹல், ஸஃப்வான் பின் உமையா மற்றும் காலித் பின் வலீத் மற்றும் பிற நபர்களின் மனைவிகளும் இருந்தனர். இந்தப் பெண்கள் அரேபியாவின் தொன்மையான வழக்கப்படி கோபத்தைத் தூண்டி விடும் கவிதைகளைப் பாடி, கொட்டுகளைக் கொட்டி தங்களுடைய ஆண்களுக்கு உத்வேகம் அளித்துக் கொண்டே இருப்பதற்காக பாட்டிசைக்கும் கருவிகளைத் தங்களுடன் கொண்டு வந்திருந்தனர். குறைஷியர்களின் இந்தப் படை 10,11 நாட்கள் பயணத்துக்குப் பிறகு மதீனாவுக்கு அருகில் வந்தடைந்தது. சுற்றி வந்து விட்டு மதீனாவின் வடக்குப் பக்கம் உஹதின் மலைக் குன்றுக்கு அருகில் தங்கி விட்டது. இந்த இடத்துக்கு அருகிலேயே உரைஸ் எனும் இடத்தின் பசுமையான மைதானம் இருந்தது. அங்கு மதீனாவின் கால்நடைகள் மேய்ந்து வந்தன. சிறிது விவசாயமும் செய்யப்பட்டு வந்தது.

குறைஷியர்கள் எல்லாவற்றிற்கும் முதலாக அந்த மேய்ச்சலிடத்தில் தாக்குதல் தொடுத்து அதில் விரும்பியதை செய்தார்கள். மேலும், நாசம் செய்தார்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தம்முடைய செய்தி தெரிவிப்பவர்கள் மூலமாக படை அருகில் வந்து விட்ட தகவல் கிடைத்ததும், அன்னார் தம்முடைய ஒரு ஸஹாபி ஹுப்பாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்களை சென்று எதிரிகளின் எண்ணிக்கையையும் அவர்களைப் பற்றியும் அறிந்து வாரும் என்று அனுப்பி வைத்தார்கள். பிறகு ஏற்கனவே கூறப்பட்டது போன்று, முஸ்லிம்கள் மத்தியில் கோழைத்தனம் பரவாமல் இருக்கும் பொருட்டு அன்னார் ஒருவேளை எதிரிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் முஸ்லிம்களுக்கு ஆபத்தான சூழ்நிலை இருந்தால் யாரிடமும் கூறக் கூடாது. மாறாக, தனிமையில் எனக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் கூறிவிட்டார்கள்.

எவ்வாறு இருப்பினும் ஹுப்பாப் இரகசியமான வழியாகச் சென்றார்கள். மிகவும் சாதுர்யமாக சிறிது நேரத்தில் திரும்பி வந்து விட்டார்கள். மேலும், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ்(ஸல்) அவர்களிடம் முழு சூழ்நிலையையும் பணிவுடன் எடுத்துரைத்தார்கள். இப்பொழுது படை வருகின்ற செய்தி மதீனாவில் பரவிவிட்டிருந்தது. உரைஸ் மீது இவர்கள் செய்த தாக்குதலைப் பற்றியும், அவர்கள் எப்படி தோட்டங்களை அழித்தார்கள்? என்பது பற்றியும் பொதுவாக எல்லாருக்கும் தெரிந்து விட்டிருந்தது. பொது மக்களுக்கு நிராகரிப்பாளர்களின் படையின் விளக்கமான நிலையைப் பற்றி தெரியப்படுத்தப்படவில்லை. ஆயினும், இந்த இரவு மதீனாவில் மிகவும் அச்சத்திற்குரியதாகவும், ஆபத்தானதாகவும் கழிந்தது. முக்கியமான ஸஹாபா பெருமக்கள் இரவு முழுவதும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இல்லத்தைச் சுற்றி காவல் காத்தார்கள்.

உஹது யுத்தத்திற்கான ஆயத்தத்திற்காக ஆலோசனை நடைபெற்றது. அப்பொழுதே ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இரவில் நான் ஒரு கனவு கண்டேன். ஒரு பசு அறுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் எனது வாள் அதாவது ஸுல்ஃபிகார் (எனப்படும் இரட்டை முனை கொண்ட) வாளின் கூர்மை மழுங்கி விட்டதைக் கண்டேன்.

ஓர் அறிவிப்பில் எனது வாளின் கைப்பிடி உடைந்து விட்டது என்ற சொல் வருகின்றது.

ஓர் அறிவிப்பில் நான் எனது வாள் ஸுல்ஃபிகாரின் கைப்பிடிக்கு அருகில் விரிசல் வந்து விட்டதாகக் கண்டேன். இவ்விரு

விஷயங்களும் ஏதோ ஓர் இன்னலைச் சுட்டிக் காட்டுகின்றன. பிறகு, நான் ஒரு வலிமையான கவசத்துக்குள் கையை நுழைப்பதாகக் காண்கிறேன் என்று கூறினார்கள்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: நான் ஒரு வலிமையான கவசத்தை அணிந்துள்ளேன். மேலும், நான் ஒரு செம்மறியாட்டின் மீது பயணித்திருக்கிறேன்.

ஸஹாபிகள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், தாங்கள் இதற்கு என்ன விளக்கம் எடுத்துக் கொண்டீர்கள்? என்று வினவினார்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள்: பசுவைப் பொருத்த வரை அது என்னுடைய சில ஸஹாபிகள் ஷஹீதாவார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

ஓர் அறிவிப்பில் வருகிறது: அறுக்கப்படுகின்ற பசு என்பதற்கு நம்மில் சிலர் ஷஹீதாவார்கள் என்று பொருள் கொண்டார்கள். எனது வாளில் விரிசல் ஏற்படுவதைப் பொருத்த வரை அது எனது வீட்டாரில் அல்லது வம்சத்தைச் சேர்ந்தவர்களில் யாராவது ஒருவர் கொல்லப்படுவார் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

ஓர் அறிவிப்பில் இந்தச் சொற்கள் வருகின்றன: எனது வாளின் முனையில் விரிசல் என்பதன் பொருள், இந்த இழப்பு உங்களில் எவருக்கும் ஏற்படாது. அதாவது, குடும்பத்தார் அல்லாதவர்களில் (எவருக்கும்) ஏற்படாது. இங்கு ஃபுலூல் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் பொருள் வாளின் முனை எந்தப் பக்கமாவது மழுங்கி விடுவது அல்லது வாளின் கைப்பிடியில் பிளவு ஏற்படுவது அல்லது அது உடைந்து விடுவது என்பதாகும்.

இது இரு சம்பவங்கள் முன் வரும் என்பதன் அடையாளம் ஆகும். வலிமையான கவசம் என்பதன் பொருள் மதீனா ஆகும். கவசம் என்பது மதீனா ஆகும். செம்மறியாடு என்பதன் பொருள், நான் எதிரிகளுக்கு உதவி செய்பவர்களைக் கொல்வேன் என்பதாகும்.

எவ்வாறு இருப்பினும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த விஷயத்தில் ஆலோசனை கேட்டார்கள். இப்னு உத்பா இப்னு இஸ்ஹாக், இப்னு ஸஅத் போன்றோர் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்தக் கனவை ஜுமுஆ அன்று இரவு கண்டார்கள். பொழுது விடிந்ததும் அன்னார் (ஸல்) ஸஹாபா பெருமக்களிடம் வருகை தந்தார்கள். எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனுடைய தூய்மையை எடுத்துரைத்தார்கள். பின்னர் கூறினார்கள்: நீங்கள் கருதினால் மதீனாவில் தங்குங்கள். பெண்களையும், குழந்தைகளையும் நாம் கோட்டைக்குள் அனுப்பி விடுவோம். (காஃபிர்களான) அந்த மக்கள் வெளியே இருந்தார்கள் என்றால், மோசமான இடத்தில் இருப்பார்கள். நமது நகரத்துக்குள் நுழைந்தார்கள் என்றால், நாம் வீதிகளில் அவர்களுடன் போரிடுவோம். நாம் அவற்றின் வழிகளை அவர்களை விட நன்றாக அறிவோம். மேலும் குன்றுகள் மேலே இருந்தும் அவர்கள் மீது கல் மழை பொழியச் செய்தல் போன்றவை செய்யப்படும். அவர்கள் எல்லாப் புறத்தில் இருந்தும் மதீனாவைக் கட்டுமானம் மூலமாக பாதுகாத்து வைத்து விட்டிருந்தார்கள். மதீனா ஒரு கோட்டையைப் போன்று இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வழங்கிய இதே ஆலோசனைதான். பெரும் முஹாஜிர்கள் (ஹிஜ்ரத் செய்து வந்தவர்கள்) மற்றும் அன்ஸாரிகளின் (மதீனா வாழ் முஸ்லிம்களின்) ஆலோசனையாக இருந்தது. அப்துல்லாஹ் பின் உபை என்பவனும் இதே ஆலோசனையைக் கொடுத்தான். எனினும், முஸ்லிம்களின் ஒரு ஜமாஅத் கூறியது. அதில் பெரும்பான்மை இளைஞர்களான ஸஹாபிகளைக் கொண்டிருந்தது. இந்த மக்களால் பத்ர் யுத்தத்தில் கலந்து கொள்ள முடியாமல் போனது. மேலும், இவர்கள் உயிர்த் தியாகம் செய்ய ஆசைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். எதிரிகளுடன் சண்டையிட ஆசைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். (அவர்கள் கூறினார்கள்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் எங்களை அழைத்துக் கொண்டு மதீனாவுக்கு வெளியில் எதிரிகளிடம் செல்லுங்கள். நாம் கோழைகள் ஆகிவிட்டோம் என்று அவர்கள் நினைத்து விடக் கூடாது. அப்துல்லாஹ் பின் உபை கூறினான்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! மதீனாவில் தங்கியிருங்கள். மதீனாவுக்கு வெளியே செல்லாதீர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாம் எப்பொழுதெல்லாம் மதீனாவுக்கு வெளியில் எதிரியுடன் சண்டையிட்டோமோ அப்பொழுது எல்லாம் தோல்வியைத் தழுவினோம். மேலும், (நாம் மதீனாவில் இருந்து எப்பொழுதெல்லாம் சண்டையிட்டோமோ) அப்பொழுது எல்லாம் நாம் வெற்றி பெற்றோம்.

ஹஸ்ரத் ஹம்ஸா பின் அப்தில் முத்தலிப் ஸஅது பின் உபாதா மற்றும் நுஃமான் பின் மாலிக் ஆகியோரும் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாம் மதீனாவை விட்டு வெளியே செல்லவில்லை என்றால், எதிரிகள் நாம் அவர்களுடன் சண்டையிடுவதை விட்டும் கோழைகள் ஆகிவிட்டதாகக் கருதி விடுவார்களோ என்று எங்களுக்கு அச்சம் உள்ளது. இதன் காரணமாக வெளியே செல்லவில்லை என்றால் அதனால் நமக்கு எதிராக அவர்களுக்குத் துணிச்சல் அதிகரித்து விடும். பத்ரில் தாங்கள் 300 பேருடன் இருந்தபோது எல்லாம் வல்ல அல்லாஹ் தங்களுக்கு அவர்கள் மீது வெற்றியை வழங்கினான். இன்று நாம் அதிக எண்ணிக்கையில் உள்ளோம்.

இயாஸ் பின் அவ்ஸ் பின் அதீக் கூறினார்: பனூ அப்தில் அஷ்அல் கோத்திரத்தினர் அறுக்கப்பட்ட பசு நாமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றார்கள். கனவில் பசு அறுக்கப்படுவதாகக் கண்டார்கள் அல்லவா! அந்த மக்கள் கூறினர்: பசு நாங்களாக இருக்க வேண்டும் என்று நாங்கள் ஆசைப்படுகின்றோம். அவர்களைத் தவிர மற்றவர்கள் கூறினார்கள்: இது இரண்டு நன்மைகளில் ஒன்றாகும். வெற்றி அல்லது உயிர் தியாகம். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அரேபியர்கள் நம்முடைய வீடுகளுக்குள் நுழைந்து விடலாம்! என்று பேராசை கொள்ள வேண்டாம்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் கூறினார்கள்: தங்கள் மீது மறைய இறக்கிய அவன் மீது ஆணையாக! நான் மதீனாவை விட்டு வெளியே சென்று எனது வாளால் அவர்களுடன் சண்டையிடும் வரை நான் உணவு உண்ண மாட்டேன்.

ஆக, அவர்கள் வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய நாட்களில் நோன்பு வைத்திருந்தார்கள். ஷஹீது ஆனபோது அவர்கள் நோன்பு வைத்திருந்தார்கள்.

நுஃமான் பின் மாலிக் பணிவுடன் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களை சொர்க்கத்தை விட்டும் இழப்பிற்குரியவர்களாக ஆக்காதீர்கள். எவனுடைய வல்லமைப் பிடியில் எனது உயிர் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக! நான் கண்டிப்பாக சொர்க்கத்தில் நுழைவேன். அப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்படி? என்று வினவினார்கள். அவர் கூறினார்: ஏனெனில், நான் அல்லாஹ்வையும், அவனுடைய தூதர் (ஸல்) அவர்களையும் நேசிக்கின்றேன்.

மற்றோர் அறிவிப்பில் வருகின்றது. அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவரும் இல்லை என்றும், நிச்சயமாக முஹம்மத் ((ஸல்) அவர்கள்) அல்லாஹ்வின் திருத்தூதர் ஆவார்கள் என்றும் நான் சாட்சி பகர்கின்றேன். மேலும், நான் போர் நாளன்று ஓடமாட்டேன்.

அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், நீர் உண்மை கூறினீர் என்று கூறினார்கள். அவர் அந்தப் போரில் ஷஹீது ஆகிவிட்டார்கள். மாலிக் பின் ஸினான் ஃகுஹ்த்ரீ மற்றும் இயாஸ் பின் அத்தீக் மற்றும் ஒரு ஜமாஅத் போருக்காக செல்ல நன்றாக எழுச்சியூட்டினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களும் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் இந்த விவரத்தை இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களை ஒன்று திரட்டி குறைஷியர்களின் தாக்குதல் தொடர்பாக அவர்களிடம், மதீனாவிற்குள்ளேயே இருக்கலாமா அல்லது வெளியே சென்று போர் புரியலாமா? என்று ஆலோசனை கேட்டார்கள்.

ஆலோசனைக்கு முன்பு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் குறைஷியர்களின் தாக்குதல் மற்றும் அவர்களது கொலை வெறி எண்ணம் குறித்து கூறினார்கள். மேலும், இன்று இரவு நான் கனவிலும் கண்டேன் என்று கூறினார்கள். பிறகு, தற்போது குறிப்பிடப்பட்டு விட்ட அந்தக் கனவைக் கூறினார்கள். ஸஹாபா பெருமக்கள் கனவுக்கு விளக்கம் கேட்டபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

பசு அறுக்கப்படுவதற்கு நான் புரியும் பொருளாவது என்னுடைய ஸஹாபாவில் சிலர் ஷஹீது ஆவார்கள் என்பதாகும்.

எனது வாளின் முனை உடைவது என்பது என்னுடைய அன்பர்களில் யாராவது ஒருவர் ஷஹீது ஆவதைக் குறிப்பதாகத் தெரிகிறது அல்லது ஒருவேளை எனக்கே இந்த யுத்தத்தில் ஏதாவது இன்னல் ஏற்படலாம். கவசத்துக்குள் கையை நுழைப்பதற்கு நான் புரிவதாவது அந்தத் தாக்குதலை எதிர் கொள்வதற்காக நாம்

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்

∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

மதீனாவுக்குள் தங்கியிருப்பது அதிகம் பொருத்தமானதாகும்.

மேலும், செம்மறியாட்டின் மீது பயணிக்கும் கனவுக்கு அன்னார் (ஸல்) பின்வருமாறு விளக்கமளித்தார்கள்: இது காஃபிர்களின் படையின் தலைவன் அதாவது கொடியை ஏந்துவனைக் குறிக்கிறது. அவன் முஸ்லிம்களின் கைகளால் கொல்லப்படுவான். இன்ஷாஅல்லாஹ்

இதற்குப் பிறகு தற்போதைய சூழ்நிலையில் என்ன செய்ய வேண்டும்? என்று ஸஹாபிகளிடம் ஆலோசனை கேட்டார்கள். ஏற்கனவே கூறப்பட்டு விட்டது போன்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கனவால் தாக்கம் அடைந்து அல்லது சூழ்நிலையைப் பார்த்தே மதீனாவில் தங்கியிருந்து போர் புரியலாம் என்றே ஸஹாபா ஆலோசனை வழங்கினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கும் இந்த ஆலோசனையே பிடித்திருந்து.

ஆனால், பெரும்பாலான ஸஹாபா பெருமக்கள் அதிலும், குறிப்பாக இளைஞர்களாக இருந்தவர்கள் பத்ர் யுத்தத்தில் கலந்து கொள்ளாதவர்கள் தங்களுடைய உயிர் தியாகத்தால் மார்க்கத்திற்குத் தொண்டாற்றுவதற்கான சந்தர்ப்பத்தைப் பெறுவதற்காக நிம்மதி இழந்திருந்தவர்கள் மிகவும் வற்புறுத்தி நகரத்தை விட்டு வெளியேறி திறந்த மைதானத்தில் போர் புரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அந்த மக்கள் எந்த அளவுக்கு மீண்டும், மீண்டும் கேட்டுக் கொண்டார்கள் என்றால் தங்களது கருத்தை முன்வைத்தார்கள் என்றால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த மக்களுடைய உத்வேகத்தைக் கண்டு அவர்கள் கூறியதை ஏற்றுக் கொண்டார்கள். மேலும், நாம் திறந்த மைதானத்திற்குச் சென்று காஃபிர்களை எதிர்கொள்வோம் என்று தீர்மானித்தார்கள்.

பிறகு ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அன்னார் முஸ்லிம்கள் மத்தியில் அவர்கள் எல்லாம் இறைவழியில் போர் புரியும் நோக்கத்திற்காக இந்த யுத்தத்தில் கலந்து கொண்டு நற்கூலி பெறுமாறு பொது அறிவிப்பு செய்தார்கள்.

ஆக, இதன் மற்ற விவரம் இனி எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ்.

பாலஸ்தீனர்களுக்காக துஆக்கள் செய்து கொண்டே இருங்கள். போர் நிறுத்தம் முடிந்த பிறகு, மீண்டும் இவர்கள் மீது பாகுபாடின்றி குண்டுக்ள வீசப்படும். மீண்டும் அப்பாவிகள் ஷஹீதாவார்கள். எவ்வளவு அநீதியிழைக்கப்படும் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். இவர்களின் எதிர்காலம் குறித்து வல்லரசுகளின் எண்ணங்கள் மிக பயங்கரமானவையாக உள்ளன. எனவே இவர்களுக்காக அதிகம் துஆக்கள் செய்ய வேண்டிய தேவையுள்ளது. எல்லாம் வல்ல அல்லாஹ் கருணை புரிவானாக!

தமிழாக்கம்
மவ்லவி அதாவுல் முஃக்னீ

* * * * * *

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

## காதியான் ஜல்ஸா - 2023

(முதல் பக்கத் தொடர்ச்சி.......)

மவ்வூத் (அலை) அவர்களின் வோ பேஷ்வா ஹமாரா ஜிஸ் ஸே ஹே நூர் ஸாரா என்ற கவிதை வரிகளை அழகிய குரலில் படித்தார்கள்.

இந்த அமர்வின் முதல் சொற்பொழிவு ஸீரத்தே ஸஹாபா ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலி கான் ஸாஹிப் (ரலி) அவர்கள் என்ற தலைப்பில் மதிப்பிற்குரிய மவ்லானா ஸைனுத்தீன் ஸாஹிப் ஹாமித், நாஸிம் தாருல் கஸா காதியான் அவர்கள் நிகழ்த்தினார்கள். இந்த அமர்வின் இரண்டாவது சொற்பொழிவை ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹ் அவர்களுடைய குத்பாக்கள் மற்றும் சொற்பொழிவுகளிலிருந்து பயன்பெறுவதன் முக்கியத்துவம் மற்றும் அருட்கள் என்ற தலைப்பில் மதிப்பிற்குரிய முனீர் அஹ்மத் ஸாஹிப் காதிம், அடிஷனல் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாஅத் தென் இந்தியா அவர்கள் நிகழ்த்தினார்கள். இந்த சொற்பொழிவின் மூன்றாவது சொற்பொழிவை வஸிய்யத் அமைப்பின் முக்கியத்துவம் மற்றும் அருட்கள் என்ற தலைப்பில் மதிப்பிற்குரிய மவ்லானா ஸய்யது கலீமுத்தீன் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

**டிசம்பர் 30, 2023- சனிக்கிழமை**
**இரண்டாம் நாளின் முதல் அமர்வு**

இரண்டாம் நாளின் முதல் அமர்வு மதிப்பிற்குரிய முனீர் அஹ்மத் ஸாஹிப் ஹாஃபிழ் ஆபாதி செகரட்டரி மஜ்லிஸ் கார்பர்தாஸ் பஹஷ்தி மக்பரா காதியான் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மதிப்பிற்குரிய லுக்மான் அஹ்மத் தகீ ஸாஹிப் அவர்கள் திருக்குர்ஆன் திலாவத் செய்தார்கள். மதிப்பிற்குரிய ஷேக் முஜாஹித் அஹ்மத் ஷாஸ்த்ரி ஸாஹிப், மேனேஜர் பத்ர் வாரப் பத்திரிகை காதியான் அவர்கள் அதன் உருது மொழியாக்கத்தை வாசித்துக் காட்டினார்கள். அதன் பிறகு துபைர் அஹ்மத் ஷமீம் ஸாஹிப் காதியான் அவர்கள் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் கவிதை வரிகளை அழகிய குரலில் படித்தார்கள். இந்த அமர்வின் முதல் சொற்பொழிவை மதிப்பிற்குரிய ஹமீதுல்லாஹ் ஹஸன் ஸாஹிப் அமீர் ஜமாஅத் மற்றும் முபல்லிஃக் இன்சார்ஜ் ஹைதராபாத் அவர்கள் அஹ்மதியத்தின் உயிர் தியாகிகளின் தன்னிகரற்ற தியாகங்கள் ( கூன் ஷஹீதானே உம்மத் கா ஏ கம் நஸ்ர், ராயிகான் கப் கயா தா கே அப் ஜாயேகா) என்ற தலைப்பில் நிகழ்த்தினார்கள். இதன் பிறகு, அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒளிமயமான எதிர்காலம் - ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மற்றும் கண்ணியத்திற்குரிய கலீஃபாக்களின் மேற்கோள்களின் ஒளியில் என்ற தலைப்பில் இந்த அமர்வின் இரண்டாவது சொற்பொழிவை மதிப்பிற்குரிய முஸஃபர் அஹ்மத் நாஸிர் ஸாஹிப், நாஸிர் இஷ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யா காதியான், அவர்கள் நிகழ்த்தினார்கள்.

(தொடரும்.........)

* * * * * * *

## குத்பா பேருரை 22.12.23

(20ம் பக்கத் தொடர்ச்சி......)

விட்டடேன். அவர்கள் என்னைப் பார்த்து எனது நெஞ்சில் கையை வைத்து என்னைப் பின்னால் தள்ளி விட்டார்கள். அவர்கள் ஒரு வலிமையான பெண்ணாக இருந்தார்கள். மேலும், அவர்கள் கூறினார்கள்: தள்ளிப்போ! நீ கூறும் எதையும் நான் கேட்க மாட்டேன்.

அப்போது, தாங்கள் அந்த சடலங்களைப் பார்த்து விடாமல் இருக்கும் பொருட்டு தங்களை நான் தடுக்கும்படி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் என்று பணிவுடன் கூறினேன். இதைக் கேட்ட உடனேயே அவர்கள் நின்று விட்டார்கள். மேலும், தம்மிடமிருந்த இரண்டு துணிகளை வெளியே எடுத்துக் கூறினார்கள்: இந்த இரண்டு துணிகளை நான் என் சகோதரர் ஹம்ஸாவுக்காக கொண்டு வந்துள்ளேன். ஏனெனில், அவர்கள் ஷஹீதான தகவல் எனக்குக் கிடைத்து விட்டது.

எவ்வாறு இருப்பினும், அவர்கள் மகனுடைய பேச்சைக் கேட்கவில்லை. அவரைப் பின்னால் தள்ளி விட்டார்கள். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொடர்பாக கூறப்பட்டதும் கட்டுப்படுதலில் உடனடியாக நின்று விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயரைக் கேட்டதும் கடுமையான துயரமிருந்தும் தமது சுய நினைவுடன் இருந்தார்கள்; கட்டுப்பட்டார்கள்.

பிறகு, கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் பணிவுடன் கூறு! நான் நின்று விட்டேன்தான்; போகவில்லை. ஆனால், என் சகோதரர் ஹம்ஸா ஷஹீதாகி விட்டார்; மேலும், நிராகரிப்பாளர்கள் அவருடைய உடலை சிதைத்து இருக்கிறார்கள் என்ற தகவல் எனக்குத் தெரிந்து விட்டது. நான் அவரைப் பார்க்க மட்டும்தான் விரும்புகிறேன். ஒப்பாரி ஏதும் வைக்க மாட்டேன்; பொறுமை காப்பேன் என்று வாக்குறுதி அளிக்கிறேன் என்பதை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் பணிவுடன் தெரிவித்து விடு.

எனவே ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் இதைப் பணிவுடன் கூறியபோது பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களை செல்ல விடுங்கள்! சரி! சென்று பார்த்துக் கொள்ளட்டும்! என்று கூறினார்கள். அவர் தமது சகோதரரின் உடலுக்கு அருகில் சென்று அமர்ந்து கொண்டார். சிங்கத்தைப் போன்ற வீரர் இவ்வாறு ஷஹீது ஆகியிருக்கக் கண்டு தம்மையும் அறியாமல் அவருடைய கண்களில் இருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிய ஆரம்பித்து விட்டது. ஆனால், நாவில் இருந்து ஒரு சொல்லைக் கூட அவர் கொண்டு வரவில்லை.

ஓர் அறிவிப்புக்கு ஏற்ப ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் அவருக்கு அருகில் சென்றார்கள். அவருக்கு அருகில் சென்று அமர்ந்து கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கண்களில் இருந்தும் கண்ணீர் வழிந்தோட ஆரம்பித்தது.

( இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்...)

தமிழாக்கம்
மவ்லவி அத்தாவுல் முக்ஃனீ

* * * * *

# ஜுமுஆ பேருரை

**உஹது போருக்காக புறப்படும்போது நிகழ்ந்த சம்பவங்களைப் பற்றிய குறிப்புகள்**

இறைவனுடைய நபி ஆயுதம் ஏந்திய பிறகு, இறைவன் தீர்ப்பு வழங்குவதற்கு முன் ஆயுதங்களை கீழே வைப்பது அவருடைய மகிமைக்கு அப்பாற்ப்பட்டது; எனவே இனி அல்லாஹ்வின் பெயரைக் கூறி புறப்படுங்கள். நீங்கள் பொறுமையைக் கடைபிடித்தால் அல்லாஹ்வின் உதவி உங்களுடன் இருக்கும் என்பதை உறுதியாக நம்புங்கள்
என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்களின் ஆலோசனைதான் சரியானது; நாம் மதீனாவில் இருந்து கொண்டு எதிரிகளை எதிர்கொள்ள வேண்டும் என்று அந்த மக்கள் கூறினர். அதற்கு, இறைவனுடைய நபி கவசம் அணிந்த பிறகு அதனை கழட்ட மாட்டார்; இனி என்ன நடந்தாலும் நாம் முன்னேறியே செல்வோம்; நீங்கள் பொறுமை செய்தால்
இறை உதவி உங்களுக்கு கிடைக்கும் என்றும்
நான் உங்களுக்கு எந்தப் பணிக்காக கட்டளையிடுவேனோ அது உங்கள் மீது கடமையாகும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) கூறினார்கள்
அல்லாஹ்விடத்தில் என்ன உள்ளதோ அதனை அடியார் அவனுக்கு கட்டுப்படுதலின் மூலமே பெற முடியும்
(ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள்)

பாலஸ்தீனத்தின் அநீதியிழைக்கப்பட்ட மக்களுக்காக துஆக்கள் செய்து வாருங்கள்
முஸ்லிம்கள் ஒன்றுபட்டு உலகிலிருந்து அநீதியை அகற்றுவதற்கு காரணிகளாக ஆவார்களாக!

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 08டிசம்பர் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **08ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

கடந்த குத்பாவில் உஹது போர் தொடர்பாக கூறப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தெளிவாக கூறுகின்றார்கள். அதை நான் எடுத்துக் கூறுகின்றேன். காஃபிர்களின் படை போர் மைதானத்தை விட்டு ஓடும்போது அதாவது பத்ர் போருக்கு பிறகு மைதானத்தை விட்டு ஓடும்போது அடுத்த வருடம் நாங்கள் மீண்டும் மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்போம்; மேலும் எங்களின் தோல்விக்கு முஸ்லிம்களிடமிருந்து பழிவாங்குவோம் என்று அறிவித்தார்கள். ஆகவே ஒரு வருடத்திற்கு பிறகு அவர்கள் மீண்டும் முழு ஆயத்தம் மேற்கொண்டு மதீனாவின் மீது தாக்குதல் நடத்தினார்கள். மக்காவாசிகளின் கோபத்தின் நிலை எவ்வாறு இருந்தது என்றால் எந்தவொரு நபருக்கும் மரணித்தவர்களுக்காக அழுவதற்கு அனுமதியில்லை என்றும், வியாபார பொருட்கள் மூலம் கிடைக்கும் வருமானம் அடுத்த போருக்காக பாதுகாக்கப்படும் என்றும் பத்ர் போருக்கு பிறகு அவர்கள் அறிவித்திருந்தார்கள். ஆகவே பெரும் ஆயத்தத்தை மேற்கொண்ட பிறகு 3000-க்கும் அதிகமான படை வீரர்களை கொண்ட ஒரு படைக்கு அபூஸுஃப்யான் அவர்களின் தலைமையின் கீழ் அவர்கள் மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்தனர். நாம் நகருக்குள் இருந்து கொண்டு போரிட வேண்டுமா? அல்லது நகருக்கு வெளியே சென்று போரிட வேண்டுமா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடம் ஆலோசனை கேட்டார்கள். எதிரியை தாக்குதல் நடத்த விட வேண்டும்; மேலும் அதன் மூலமாக போரை துவக்கிய பொறுப்பு அவர்களை சேர வேண்டும்; முஸ்லிம்கள் தங்களது வீடுகளில் இருந்து கொண்டு அமைதியாக அதனை எதிர்கொள்ள வேண்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கருதினார்கள். ஆனால், பத்ர் போரில் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைக்காத முஸ்லிம் இளைஞர்களின் உள்ளங்களில் இறைவழியில் ஷஹீதாவதற்கான வாய்ப்பு தங்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற ஏக்கம் இருந்தது. ஆகவே, ஷஹாதத்திலிருந்து நாங்கள் ஏன் விலக்கப்படுகின்றோம்? என்று அவர்கள் பிடிவாதம் பிடித்தனர். எனவே அவர்களின் பேச்சை இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஆலோசனை கேட்கும்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது ஒரு கனவையும் எடுத்துக் கூறினார்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள்: கனவில் நான் ஒரு பசு மாட்டினை கண்டேன். எனது வாளின் முனை உடைந்துவிட்டது. அந்தப் பசுக்கள் அறுக்கப்படுகின்றன. எனது கையை உறுதியான பாதுகாப்பான கவசத்திற்குள் நுழைப்பதாகவும் நான் கண்டேன். ஒரு செம்மறியாட்டின் மீது நான் சவாரி செய்வதாகவும் நான் கண்டேன் என்றும் அன்னார் (ஸல்) கூறினார்கள்.

இந்த கனவுகளுக்கு தாங்கள் என்ன விளக்கம் கொடுக்கின்றீர்கள்? என்று அன்னாரிடம் ஸஹாபிகள் கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பசு அறுக்கப்படுவதற்கு பொருள், எனது சில ஸஹாபிகள் ஷஹீதாவார்கள் என்பதாகும். எனது வாளின் முனை உடைவது என்பது எனது அன்பர்களில் யாரேனும் ஒருவர் ஷஹீதாகலாம் அல்லது அதில் எனக்கே ஏதேனும் துன்பம் நேரிடலாம்.

மேலும், கவசத்திற்குள் கையை விடுவது என்பது மதீனாவிற்குள் இருப்பது பொருத்தமானதாக தெரிகின்றது என்று கூறினார்கள். செம்மறியாட்டின் மீது சவாரி செய்வது என்பதன் பொருள், காஃபிர்களின் படைத் தளபதியின் மீது நாம் மிகைத்து விடுவோம் என்பதாக தெரிகின்றது. அதாவது அதில் நாம் அவர்களை அடிபணியச் செய்து விடுவோம். முஸ்லிம்களின் கைகளினால் அவன் கொல்லப்படுவான் என்றும் கூறினார்கள்.

முஸ்லிம்கள் மதீனாவில் இருப்பது மிகவும் நல்லது என்று இந்தக் கனவில் தெளிவாக்கப்பட்டது. ஆனால், கனவின் விளக்கம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொந்த விளக்கமாக இருந்தது. அது இல்ஹாமிய விளக்கம் இல்லை. எனவே பெரும்பாலாரின் கருத்தை அன்னார் (ஸல்) ஒப்புக் கொண்டார்கள். மேலும், போருக்காக (மதீனாவிற்கு) வெளியில் செல்லலாம் என்று அன்னார் (ஸல்) முடிவெடுத்தார்கள். இக்கனவுகளில் சுட்டிக் காட்டப்படும் விஷயங்கள் இருப்பதை நம்மால் காணமுடிகின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கனவுகளில் காணப்படும் உவமைகளை பற்றி எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கஷ்ஃப்கள் மற்றும் கனவுகளைப் பற்றி ஹதீஸ்களில் படிக்கக் கூடியவர்களுக்கு உவமைகளைக் குறித்து எவ்வித ஒளிவு மறைவும் இருப்பதில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கஷ்ஃபில் அன்னார் இரண்டு தங்கக் காப்புகள் அணிந்திருப்பதாகக் காட்டப்பட்டபோது அது இரு பொய்யர்களைக் குறிக்கும் என்று பொருள் கொள்ளப்பட்டது. அவர்கள் பொய்யான முறையில் தங்களை இறைத் தூதர் என்று வாதித்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கனவில், கஷ்ஃபில் பசுமாடுகள் அறுக்கப்பட்டதாகக் கனவில் காட்டப்பட்டது என்பது உஹது போரில் ஷஹீதான ஸஹாபிகளைக் குறிப்பதாக பொருள் கொள்ளப்பட்டது. இதேபோன்று பல

முன்மாதிரிகள் மற்ற நபிமார்களின் கஷ்ஃப்களிலும் காணப்படுகின்றன. வெளிப்படையான முறையில் அவர்களுக்கு ஒன்று காட்டப்பட்டது; ஆனால், உண்மையில் அது கூற வந்தது வேறொன்றாக இருந்தது. எனவே நபிமார்களின் சொற்களில் உவமைகளும், உருவகமும் காணப்படுவது அரிதான மற்றும் தனித்துவமான விஷயம் ஒன்றும் கிடையாது.

எவ்வாறு இருப்பினும், வெளியே சென்று போர் புரியலாம் என்று தீர்மானிக்கப்பட்டபோது, ஆயத்தம் ஆகுங்கள் என்று அன்னார் (ஸல்) ஸஹாபிகளிடம் கூறினார்கள். அன்னாரும் போருக்காக ஆயத்தமானார்கள். அதன் விளக்கம் இவ்வாறு வருகின்றது: கனவின் அடிப்படையில் நகரத்தை விட்டு வெளியே சென்று போர் செய்வதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விரும்பவில்லை. ஆனால், தொடர்ச்சியாக மக்கள் வலியுறுத்தியபோது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த மக்களின் கருத்துடன் பொருந்திக் கொண்டார்கள். அன்னார் (ஸல்) ஜுமுஆ தொழ வைத்தார்கள். மக்களுக்கு அறிவுரை செய்தார்கள். முழு கடுமையுடனும், துணிவுடனும் போர் புரியுங்கள் என்று அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். மக்கள் பொறுமையை மேற்கொண்டால் அல்லாஹ் அவர்களுக்கு வெற்றியையும், முன்னேற்றத்தையும் வழங்குவான் என்று அவர்களுக்கு நற்செய்தி கூறினார்கள். பிறகு போரிட ஆயத்தமாகும்படி மக்களுக்கு கட்டளையிட்டார்கள். இந்தக் கட்டளையைக் கேட்டு மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். அதற்கு பிறகு எல்லாருடனும் சேர்ந்து அன்னார் (ஸல்) அஸர் தொழுகையை தொழுதார்கள். அந்த நேரத்திற்குள் அக்கம் பக்கத்தில் இருந்த மக்களும் வந்து ஒன்று கூடிவிட்டனர். அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகிய இருவருடனும் தமது வீட்டிற்கு சென்றார்கள். அவ்விருவரும் அன்னாருக்கு தலைப்பாகை கட்டடினார்கள். அன்னாருக்கு போர் உடையை அணிவித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக மக்கள் அணி வகுத்து காத்துக் கொண்டிருந்தனர். அப்போது ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களும், உஸைர் பின் உஸைர் (ரலி) அவர்களும் வெளியே சென்று போரிடலாம் என்று கூறி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அன்னாரின் விருப்பத்திற்கு எதிராக அன்னாரை நீங்கள் கட்டாயப்படுத்தி விட்டீர்கள். ஆகவே இப்போது கூட நேரம் இருக்கின்றது. இந்த விவகாரத்தை நீங்கள் அன்னாரிடம் விட்டு விடுங்கள்; அன்னார் என்ன கட்டளையிட்டாலும் சரி; அன்னாரின் கருத்து எதுவாக இருந்தாலும் சரி; அதில் நமக்கு நன்மை இருக்கும்; எனவே அன்னாருக்கு கட்டுப்படுங்கள் என்று அவர்களுக்கு அறிவுரை கூறினார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டை விட்டு வெளியே வந்தபோது அன்னார் (ஸல்) போருக்கான உடையை அணிந்திருந்தார்கள். இரட்டைக் கவசத்தை அணிந்திருந்தார்கள். அதாவது ஒரு கவசத்திற்கு மேல் மற்றொரு கவசம்.

ஸாத்துல் ஃபுஸூல் மற்றும் ஃபிஸா என்பது அந்தக் கவசங்களின் பெயர்களாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போருக்காக சென்று கொண்டிருந்தபோது ஹஸ்ரத் ஸஅது பின் உபாதா (ரலி) அவர்கள் அன்னாருக்கு அனுப்பி வைத்த கவசத்தின் பெயர் ஸாத்துல் ஃபுஸூல் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்த நேரத்தில் இந்தக் கவசம் ஓர் யூதனிடம் அடகு வைக்கப்பட்டிருந்தது. பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்தக் கவசத்தை மீட்டார்கள். அதாவது பணம் கொடுத்து அதனை திரும்பப் பெற்றார்கள்.

அன்னார் (ஸல்) போருக்காக புறப்பட்டுச் சென்றபோது, பக்கவாட்டில் வாளை தொங்கவிட்டிருந்தார்கள். அம்புக் கூடையை பின்பக்கமாக பொருத்தியிருந்தார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஸகப் என்றழைக்கப்பட்ட ஒரு குதிரையில் அமர்ந்திருந்தார்கள். வில்லை தொங்கவிட்டிருந்தார்கள். கரத்தில் ஈட்டியை பிடித்திருந்தார்கள்.

இவ்விரு விஷயங்களும் நிகழ்ந்திருக்க வாய்ப்புள்ளது. பல்வேறு மக்கள் தாம் கண்ட காட்சியை பல்வேறு கோணங்களில் எடுத்துக் கூறியிருக்கலாம்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது வீட்டை விட்டு வெளியேறியபோது ஆயுதம் ஏந்தியிருந்தார்கள். அப்போது மாலிக் பின் அம்ர் நஜ்ஜாரி மரணமடைந்து விட்டார்கள் என்றும், அன்னாரது உடல் ஜனாஸா தொழுகைக்கான இடத்தில் வைக்கப்பட்டுள்ளது என்றும் அன்னாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. போருக்கு செல்லும் முன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரது ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். அப்போது அந்நேரத்தில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களது கருத்தை எதிர்க்க வேண்டும் என்பதோ அல்லது தங்களை நிர்ப்பந்தத்திற்குள்ளாக்க வேண்டும் என்பதோ எங்களது நோக்கம் கிடையாது; தாங்கள் எதை பொருத்தமானதாகக் கருதுகின்றீர்களோ அதற்கேற்ப தாங்கள் செயல்படுங்கள் என்று மக்கள் கோரிக்கை வைத்தனர்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது: தாங்கள் நகரத்தை விட்டு வெளியே சென்று போர் புரிய விரும்பவில்லையென்றால், பின்னர் இங்கேயே இருக்கலாம் என்றும் மக்கள் கூறினர். அதற்கு, நபி ஆயுதம் ஏந்திய பிறகு எதிரிகளுக்கும் அவருக்குமிடையில் அல்லாஹ் தீர்ப்பு வழங்காத வரையில் ஆயதத்தை கீழே வைப்பது ஒரு நபிக்கு ஆகுமானது அல்ல என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். போர் செய்யாத வரை ஆயுதங்களை கீழே வைப்பது ஆகுமானதில்லை என்று மற்றோர் அறிவிப்பில் வருகின்றது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் போருக்காக ஆயத்தமானது குறித்தும், ஸஹாபிகள் தங்கள் தவறை உணர்ந்தது குறித்தும் எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டிற்குள் சென்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரின் உதவியுடன் அன்னார் (ஸல்) தலைப்பாகையை அணிந்தார்கள். போர் உடையை அணிந்தார்கள். பிறகு ஆயுதங்களை ஏந்தியவாறு அல்லாஹ்வின் பெயரை உச்சரித்தவாறு வெளியே வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கருத்திற்கு எதிராக உங்களது கருத்தில் பிடிவாதம் செய்யக் கூடாது என்று சிலர் அந்த இடைப்பட்ட நேரத்தில் அறிவுரை செய்ததன் காரணமாக அந்த இளைஞர்கள் தங்களது தவறை உணர்ந்து கொண்டனர். இந்த உணர்வு தோன்றியதும் அவர்களில் பெரும்பாலார் வெட்கித் தலை குனிந்தனர். இரட்டைக் கவசம் மற்றும் தலைக் கவசம் போன்றவற்றை அணிந்தவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தருவதை அந்த மக்கள் கண்டபோது அவர்களின் வருத்தம் மேலும் அதிகரித்தது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் தவறு செய்து விட்டோம்; தங்களது கருத்திற்கு எதிராக நாங்கள் எங்களது கருத்தில் பிடிவாதம் பிடித்து விட்டோம்; தாங்கள் எதனை பொருத்தமானதாகக் கருதுகின்றீர்களோ அதனை நடைமுறைப்படுத்துங்கள். இன்ஷாஅல்லாஹ் அதில் தான் அருள் இருக்கும் என்றும் அவர்கள் அனைவரும் ஒரே குரலில் கூறினர். அதற்கு, இறைவனுடைய நபி ஆயுதம் ஏந்திய பிறகு, இறைவன் தீர்ப்பு வழங்குவதற்கு முன் ஆயுதங்களை கீழே வைப்பது அவருடைய மகிமைக்கு அப்பாற்பட்டது; எனவே இனி அல்லாஹ்வின் பெயரைக் கூறி புறப்படுங்கள். நீங்கள் பொறுமையைக் கடைபிடித்தால் அல்லாஹ்வின் உதவி உங்களுடன் இருக்கும் என்பதை உறுதியாக நம்புங்கள் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் இதைக் குறித்து கூறியுள்ளார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டை விட்டு வெளியே வந்தபோது, இளைஞர்கள் வெட்கித் தலை குனிந்தனர். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்களின் ஆலோசனைதான் சரியானது; நாம் மதீனாவில் இருந்து கொண்டு எதிரிகளை எதிர்கொள்ள வேண்டும் என்று அந்த மக்கள் கூறினர். அதற்கு, இறைவனுடைய நபி கவசம் அணிந்த பிறகு அதனை கழட்ட மாட்டார்; இனி என்ன நடந்தாலும் நாம் முன்னேறியே செல்வோம்; நீங்கள் பொறுமை செய்தால் இறை உதவி உங்களுக்கு கிடைக்கும் என்று கூறினார்கள்.

எவ்வாறு இருப்பினும், இஸ்லாமியப் படை புறப்பட்ட ஆயத்தமானது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓராயிரம் படை வீரர்களைக் கொண்ட படை வீரர்களுடன் மதீனாவை விட்டு புறப்பட்டார்கள். அந்த சந்தர்ப்பத்தில் அன்னார் (ஸல்) மூன்று ஈட்டிகளை கொண்டு வரச் செய்து அவற்றில் மூன்று கொடிகளைக் கட்டினார்கள். அவ்ஸ் கோத்திரத்தின் கொடியை உஸைத் பின் அல்குழைர் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. கஸ்ரஜ் கோத்திரத்தின் கொடியை ஹப்பாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்களுக்கு



கொடுக்கப்பட்டது. ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்களுக்கு கொடுத்ததாகவும் சிலர் கூறுகின்றனர். முஹாஜிர்களின் கொடியை ஹஸ்ரத் அலீ(ரலி) அவர்களுக்கு கொடுத்தார்கள். மதீனாவில் எஞ்சியிருந்த மக்களுக்கு தொழுகை நடத்துவதற்காக உம்மே மக்தூம் (ரலி) அவர்களை தமது பிரதிநிதியாக நியமித்தார்கள். பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸகப் எனும் தமது குதிரையில் அமர்ந்து கொண்டு, வில்லை கழுத்தில் அணிந்து கொண்டு ஈட்டியை கரத்தில் ஏந்திக் கொண்டும் புறப்பட்டார்கள். அறிவிப்பில் வருகின்றது: உஹது போர் நாளன்று முஸ்லிம்களிடம் இரண்டு குதிரைகள் இருந்தன. ஒரு குதிரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருந்தது. அதன் பெயர் ஸகப் ஆகும். மற்றொரு குதிரை ஹஸ்ரத் அபூபுர்தஃ (ரலி) அவர்களிடம் இருந்தது. அதன் பெயர் முஸாலிஹ் ஆகும். முஸ்லிம்களும் ஆயுதங்களை ஏந்தியிருந்தனர். அவர்களில் நூறு நபர்கள் கவசம் அணிந்திருந்தனர். இரண்டு ஸஅதுகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் ஓடிக் கொண்டிருந்தனர். அதாவது ஸஅது பின் முஆஸ் (ரலி) அவர்களும், ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்களும்.அவ்விருவரும் கவசம் அணிந்திருந்தனர். மற்ற மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு வலப் பக்கமும், இடப் பக்கமும் இருந்தனர். ஸனியஃ எனும் இடத்தை அடைந்தபோது, அதிகம் ஆயுதங்களை கொண்டிருந்த ஒரு படையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்டார்கள். அவர்களின் ஆயுதங்களின் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. இது என்ன? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு, இவர்கள் யூதர்கள் ஆவர்; மேலும், இவர்கள் அப்துல்லாஹ் பின் உபை உடைய கூட்டாளிகள் ஆவர் என்று ஸஹாபிகள் கூறினர். யூதர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டனரா? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். இல்லை என்று பதில் கூறப்பட்டது. அப்படியென்றால் இணை வைப்பாளர்களுக்கு எதிராக நாம் காஃபிர்களின் உதவியைப் பெற மாட்டோம் என்று அன்னார் (ஸல்) கூறிவிட்டார்கள்.

இதைக் குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களும் எழுதியுள்ளார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாமியப் படைக்காக மூன்று கொடிகளை ஆயத்தப்படுத்தினார்கள். அவ்ஸ் கோத்திரத்தின் கொடியை உஸைத் பின் அல்குழைர் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். கஸ்ரஜ் கோத்திரத்தின் கொடியை ஹப்பாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். முஹாஜிர்களின் கொடியை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். பிறகு அக்கொடி ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களுக்கு கொடுக்கப்பட்டது.பிறகு மதீனாவின் இமாமுஸ் ஸலாத் ஆக ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உம்மு மக்தூம் (ரலி) அவர்களை நியமித்து விட்டு ஸஹாபிகளின் ஒரு பெரும் குழுவுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ர் தொழுதுவிட்டு மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவர்களான ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சவாரிக்கு முன்னால் ஓடிக் கொண்டிருந்தனர். மற்ற ஸஹாபிகள் அன்னாரின் வலப் பக்கத்திலும், இடப்பக்கத்திலும், பின்னாலும் சென்று கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புறப்பட்டுச் சென்று ஷேகைன் என்ற இடத்தில் சென்று முகாமிட்டார்கள். ஷேகைன் என்பது மதீனாவின் இரு மலைகளாகும். இங்கு சென்றடைந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் படையை மேற்பார்வையிட்டார்கள். எந்தெந்த இளைஞர்கள் பதினைந்து வயதை அடையாதவர்கள் என்று கணித்திருந்தார்களோ அல்லது எவர்கள் 14 வயதுடையவர்களாக இருந்தார்களோ அவர்களை திரும்பிச் செல்லுமாறு அன்னார் (ஸல்) கட்டளையிட்டார்கள்.

இமாம் ஷாஃபி அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன் கொண்டுவரப்பட்ட பதினான்கு வயதுடைய 17 இளைஞர்களை அன்னார் (ஸல்) திருப்பி அனுப்பி வைத்துவிட்டார்கள். அன்னாருக்கு முன் 17 வயதுடைய இளைஞர்கள் கொண்டு வரப்பட்டபோது அவர்களுக்கு அன்னார் (ஸல்) அனுமதி வழங்கினார்கள். வயதின் காரணமாக திருப்பி அனுப்பப்பட்ட இளைஞர்கள் உத்வேகத்தால் நிரம்பியிருந்தனர். அவர்களில் சிலரின் பெயர்களும் கூட வரலாற்றில் காணக் கிடைக்கின்றன. அப்துல்லாஹ் பின் உமர், ஸைது பின் ஸாபித், ஒஸாமா பின் ஸைது, ஸைது பின் அர்கம், பரா பின் ஆஸிப், உஸைது பின் ஸுஹைர், ஹராமா பின் அவ்ஸ், அபூ ஸயீது குத்ரீ, அவ்ஸ் பின் ஸாபித், ஸஅத் பின் பஹீல், இப்னு முஆவியா , ஸயீது பின் ஹப்தா, ஹப்தா என்பது அவர்களுடைய தாயின் பெயராகும்.ஸஅது பின் ருகைய்ப், ஜாபிர் பின் அப்தில்லாஹ். இவர் ஹதீஸ்களை அறிவித்தவர் கிடையாது. இவர் வேறு ஒருவர் ஆவார். ராஃபி பின் கதீஜ் மற்றும் துமரா பின் ஜுன்தப் ஆகியோர் ஆவர். ராஃபி பின் கதீஜ் என்பவரைப் பற்றிக் கூறப்படும்போது அவர் வில்லாளி என்று கூறப்பட்டது. எனவே அவருக்கு அனுமதி வழங்கினார்கள். முதலில் திரும்பிச் செல்லுங்கள் என்று அவரிடம் கூறப்பட்டது. பின்னர் அவர் வில்லாளி என்று தெரிய வந்தபோது அவருக்கு அனுமதி வழங்கினார்கள். இதனைக் கண்ட ஜுன்தப் என்ற மற்றோர் இளைஞர், ராஃபி பின் கதீஜ் என்ற இளைஞருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள்; ஆனால் என்னை திரும்பிச் செல்லுங்கள் என்று கூறிவிட்டார்கள். ஆனால், என்னால் மல்யுத்தப் போட்டியில் ராஃபியை வீழ்த்த முடியும் என்று கூறினார். இந்த விஷயம் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்தபோது, நீங்கள் இருவரும் குஷ்தி செய்யுங்கள் என்று கூறினார்கள். குஷ்தியில் துமரா அவர்கள் ராஃபியை வீழ்த்திவிட்டார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கும் அனுமதி நல்கிவிட்டார்கள்.

பிறகு அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் படையை மேற்பார்வையிட்டு முடித்திருந்தபோது சூரியன் மறைந்திருந்தது. ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் மஹ்ரிப் பாங்கை கொடுத்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தொழுகையை நடத்தினார்கள். பிறகு இஷாவிற்கான பாங்கு கொடுத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஷா தொழ வைத்தார்கள்.அந்த இரவை ஷேகைன் என்ற இடத்தில் கழித்தார்கள். அந்த இரவில் காவல் காப்பதற்காக முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களை கண்காணிப்பாளராக நியமித்தார்கள். அன்னார் (ரலி) ஐம்பது நபர்களுடன் படையை சுற்றி வந்து படையைக் காத்தார்கள். இங்கு நமது பாதுகாப்புப் பணிக்காக யார் இருப்பார்? என்று கேட்டபோது அதாவது முழுப் படையையும் அன்னாரையும் பாதுகாக்கும் பணிக்காக யார் இருப்பார்? என்று கேட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிக அருகில் இருக்கும் அந்தப் பணிக்காக அன்னார் (ஸல்) கேட்டபோது, ஸக்வான் பின் அப்தில் கைஸ் என்பவர் எழுந்து நின்றார். அதாவது, பாதுகாப்பு ஏற்பாடு சரியான முறையில் இருக்க வேண்டும் என்பதே நோக்கமாக இருந்தது. ஸக்வான் பின் அப்தில் கைஸ் எழுந்து நின்றார். அவர் தமது கவசத்தை அணிந்து கொண்டு தோலால் ஆன கேடயத்தை பிடித்துக் கொண்டு அன்னாருடைய பாதுகாப்பு பணிக்காக நின்று கொண்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டு ஒரு நொடி கூட விலகவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹ்ரீ நேரம் வரை ஓய்வெடுத்தார்கள்.

அறிவிப்பில் வருகின்றது: வானவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களை நீராட்டுவதாக நான் கனவில் கண்டேன் என்று காலை நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இதைக் குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் எழுதுகின்றார்கள்: மதீனாவின் வடக்குத் திசையில் மூன்று மைல் தொலைவில் உஹது மலை இருந்தது. அதன் பாதி தூரத்தைக் கடந்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முகாமிட்டார்கள். அந்த இடம் ஷேகைன் என்றழைக்கப்படுகின்றது. அங்கு இஸ்லாமியப் படையை மேற்பார்வையிடக் கட்டளையிட்டார்கள். ஜிஹாது செய்யும் ஆர்வத்துடன் வந்திருந்த வயது குறைவான சிறுவர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர். அப்துல்லாஹ் பின் உமர், ஒஸாமா பின் ஸைது, அபூ ஸயீது குத்ரி ஆகியோர் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர். அந்த வயது குறைவான சிறுவர்களில் ராஃபி பின் கதீஜ் என்பவரும் இருந்தார். ஆனால், அம்பு எய்வதில் நன்கு தேர்ச்சி பெற்றவராக அவர் இருந்தார். இந்த சிறப்பம்சத்தின் காரணமாக அவருடைய தந்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, ஜிஹாது செய்வதற்கு அனுமதி நல்குமாறு பரிந்துரை செய்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ராஃபியை ஏறெடுத்து பார்த்தபோது, அவர் தாம் சுறுசுறுப்பானவராகவும், உயரமானவராகவும் தெரிய வேண்டும் என்பதற்காக படை வீரரைப் போன்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நின்றார். ராஃபியினுடைய இந்த தந்திரம் பலித்து விட்டது. உடன் செல்வதற்கு அவருக்கு

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுமதி நல்கினார்கள். அப்போது துமைரா பின் ஜுன்தப் என்பவர் இவரைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டிருந்தது போன்று அவருக்கு திரும்பிச் செல்ல கட்டளையிடப்பட்டிருந்தது. அவர் தமது தந்தையிடம் சென்று ராஃபிக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கும் கிடைக்க வேண்டும் ; ஏனெனில் நான் ராஃபியை விட நான் வலிமையானவன் ஆவேன். குஷ்தியில் நான் அவரை வீழ்த்தி வந்துள்ளேன் என்று கூறினார்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் எழுதுகின்றார்கள்: மதீனாவின் வடக்குத் திசையில் மூன்று மைல் தொலைவில் உஹது மலை இருந்தது. அதன் பாதி தூரத்தைக் கடந்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முகாமிட்டார்கள். அந்த இடம் ஷேகைன் என்றழைக்கப்படுகின்றது. அங்கு இஸ்லாமியப் படையை மேற்பார்வையிடக் கட்டளையிட்டார்கள். ஜிஹாது செய்யும் ஆர்வத்துடன் வந்திருந்த வயது குறைவான சிறுவர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர். அப்துல்லாஹ் பின் உமர், ஒஸாமா பின் ஸைது, அபூ ஸயீது குத்ரி ஆகியோர் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர். அந்த வயது குறைவான சிறுவர்களில் ராஃபி பின் கதீஜ் என்பவரும் இருந்தார். ஆனால், அம்பு எய்வதில் நன்கு தேர்ச்சி பெற்றவராக அவர் இருந்தார். இந்த சிறப்பம்சத்தின் காரணமாக அவருடைய தந்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, ஜிஹாது செய்வதற்கு அனுமதி நல்குமாறு பரிந்துரை செய்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ராஃபியை ஏறெடுத்து பார்த்தபோது, அவர் தாம் சுறுசுறுப்பானவராகவும், உயரமானவராகவும் தெரிய வேண்டும் என்பதற்காக படை வீரரைப் போன்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நின்றார். ராஃபியினுடைய இந்த தந்திரம் பலித்து விட்டது. உடன் செல்வதற்கு அவருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுமதி நல்கினார்கள். அப்போது துமைரா பின் ஜுன்தப் என்பவர் இவரைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டிருந்தது போன்று அவருக்கு திரும்பிச் செல்ல கட்டளையிடப்பட்டிருந்தது. அவர் தமது தந்தையிடம் சென்று, ராஃபிக்கு அனுமதி கிடைத்துள்ளது என்றால் எனக்கும் அனுமதி கிடைக்க வேண்டும் ; ஏனெனில் ராஃபியை விட நான் வலிமையானவன் ஆவேன். குஷ்தியில் நான் அவரை வீழ்த்தி வந்துள்ளேன் என்று கூறினார். மகனின் இந்த கலப்பற்றத் தன்மையைக் கண்டு தந்தை மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அவர் தமது மகனை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று, தம் மகனுடைய விருப்பத்தை எடுத்துரைத்தார். அதைக் கேட்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் புன்னகைத்தவாறே, அப்படியா? ராஃபி மற்றும் தும்ரா ஆகியோருக்கிடையில் குஷ்தி போட்டி நடத்துங்கள்; யார் வலிமையானவர் என்பது தெரியட்டும் என்று கூறினார்கள். எனவே போட்டி நடைபெற்றது. உண்மையிலேயே நொடிப் பொழுதில் தும்ரா ராஃபியை தூக்கி வீழ்த்தி விட்டார்.இதைக் கண்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், தும்ராவிற்கு உடன் செல்வதற்கு அனுமதி நல்கினார்கள். எனவே அப்பாவி சிறுவனின் உள்ளம் மகிழ்ச்சியடைந்தது. அப்போது மாலைப் பொழுது ஆகிவிட்டதனால் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் பாங்கு கொடுத்தார்கள். அனைத்து ஸஹாபிகளும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னால் தொழுதார்கள். பிறகு இரவு தங்குவதற்கு முஸ்லிம்கள் அங்கேயே கூடாரம் அமைத்தார்கள். இரவு காவல் பணிக்கு முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களை காவல் பணிக்கு அந்நேரம் நியமித்தார்கள். அவர்கள் ஐம்பது ஸஹாபிகளைக் கொண்ட குழுவுடன் இரவு முழுவதும் வலம் வந்து இஸ்லாமியப் படையை காவல் காத்தார்கள். அப்துல்லாஹ் பின் அபீ பின் ஸூலூல் முதலில் இஸ்லாமியப் படையுடன் சேர்ந்து வந்தான். ஆனால், வழியில் திரும்பிச் சென்று விட்டான். அதைப் பற்றி ஓரிடத்தில் இவ்வாறு வருகின்றது; அதாவது, ஸஹ்ரீ நேரத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஷேகைன் என்ற இடத்திலிருந்து புறப்பட்டார்கள். மதீனாவிற்கும், உஹதிற்கும் இடையில் ஷவ்த் என்ற இடத்தை அடைந்தபோது தொழுகைக்கான நேரமாக ஆகி இருந்தது. அங்கு அன்னார் (ஸல்) பஜ்ர் தொழுகையை நடத்தினார்கள். ஷவ்த் என்பது கினா பள்ளத்தாக்கிற்கும், மதீனாவிற்கும் இடையில் உள்ள ஓர் இடமாகும். இந்த இடத்தில் தான் அப்துல்லாஹ் பின் அபீ பின் ஸூலூல் தனது கூட்டாளிகளான நயவஞ்சகர்களுடன் சேர்ந்து கொண்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட்டு விட்டு திரும்பிச் சென்று விட்டான். அவனுடைய கூட்டாளிகளின் எண்ணிக்கை 300 ஆக இருந்தது. அவர்கள் அனைவரும் முனாஃபிக்குகள் ஆவர்.

அப்துல்லாஹ் பின் உபை திரும்பிச் செல்லும்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை சுட்டிக் காட்டியவாறு அன்னார் (ஸல்) எனது பேச்சைக் கேட்காமல் சிறுவர்களின் பேச்சைக் கேட்டார்கள். சிறுவர்களின் பேச்சில் வீழ்ந்து விட்டார்கள்; அதுவெல்லாம் ஆலோசனையே கிடையாது; நாம் எதற்காக நமது உயிரைக் கொடுக்கின்றோம் என்பது நமக்கு தெரியாது; ஆகவே, மக்களே! திரும்பிச் செல்லுங்கள் என்று கூறியவாறு அவன் சென்றான். முனாஃபிக்குகளின் தலைவனுடைய இந்தக் கட்டளையின் அடிப்படையில் அவனது கூட்டாளிகள் முஸ்லிம்களை விட்டு விட்டு திரும்பிச் சென்றனர். அவர்கள் திரும்பிச் செல்வதைக் கண்ட ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களின் தந்தை ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் அந்த மக்களை திரும்பி வருமாறு அழைத்தார்கள். அப்துல்லாஹ் பின் உபையைப் போன்று இவர்களும் கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவராக இருந்தார்கள். திரும்பிச் சென்று கொண்டிருந்த அந்த மக்களிடம், நான் இறைவன் மீது ஆணையிட்டு உங்களிடம் கேட்கின்றேன்; எதிரி முழு பலத்துடன் வலிமையுடன் நமக்கு முன்னால் இருக்கும்போது நபியுடனும், தமது சமுதாயத்துடனும் துரோகம் செய்வது பொருத்தமானதாக இருக்கின்றதா? என்று நீங்களே கூறுங்கள் என்றார்கள். அதற்கு அந்த மக்கள், நீங்கள் போர் செய்ய வந்துள்ளீர்கள் என்பது எங்களுக்கு முன்னரே தெரிந்திருந்தால் நாங்கள் வந்திருக்கவே மாட்டோம்; போர் இருக்காது என்றே நாங்கள் நினைத்தோம் என்று கூறி தாங்கள் திரும்பிச் செல்வதாக அவர்கள் தெளிவாக அறிவித்து விட்டார்கள். உண்மை என்னவென்றால், போருக்காக பெரும் ஆயத்தம் செய்துதான் வந்திருந்தார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் இறைவனுடைய எதிரிகளே! அல்லாஹ் உங்களை அழித்து நாசமாக்கட்டும்! விரைவிலேயே அல்லாஹ் உங்களை விட்டு தனது நபியை தன்னிறைவு பெற்றவராக ஆக்கட்டும் !என்று கூறினார்கள்.

மற்றோர் அறிவிப்பில் வருகின்றது. அல்லாமா இப்னு ஸவ்ஜி அவர்கள் எழுதுகின்றார்கள். பனூ ஸலமா மற்றும் பனூ ஹாரிஸா கோத்திரங்கள் அப்துல்லாஹ் பின் உபை துரோகம் செய்ததை கண்டபோது நாமும் திரும்பிச் செல்லலாம் என்று எண்ணம் கொண்டார்கள். இந்த இரு கோத்திரங்களும் படையின் இரு பக்கங்களில் இருந்தார்கள். ஆனால், இந்த இரு பிரிவினரையும் அல்லாஹ் இந்தப் பாவத்திலிருந்து காப்பாற்றி விட்டான். திரும்பிச் செல்லும் எண்ணத்தை அவர்கள் கைவிட்டு விட்டனர். அப்போது அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்:

اِذۡ هَمَّتۡ طَّآئِفَتٰنِ مِنۡكُمۡ اَنۡ تَفۡشَلَا وَاللّٰهُ وَلِيُّهُمَا
وَعَلَى اللّٰهِ فَلۡيَتَوَكَّلِ الۡمُؤۡمِنُوۡنَ

அதாவது உங்களில் இரு கூட்டத்தினர் அல்லாஹ் அவர்களின் நண்பனாக இருந்தபோதும், கோழைத்தனத்தைக் காட்ட நாடிய அந்த நேரத்தை எண்ணி பார்ப்பீராக. நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை கொள்ள வேண்டும்.(3:123)

அப்துல்லாஹ் பின் உபை மற்றும் அவனது 300 கூட்டாளிகளின் இந்த துரோகத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் வெறும் 700 நபர்கள் மட்டுமே இருந்தனர். அப்துல்லாஹ் பின் உபை திரும்பிச் சென்று விட்ட அந்த நேரத்தில் அன்ஸார் பெருமக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வருகை தந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நமது நண்பர்களாகவும், உதவி செய்பவர்களாகவும் இருக்கும் யூதர்களிடம் இந்த சந்தர்ப்பத்தில் உதவி பெற வேண்டாமா?என்று கேட்டார்கள். அவர்கள் குறிப்பிட்டது மதீனாவின் யூதர்களை ஆகும். பனூ குறைழாவினுடைய யூதர்களாக அவர்கள் இருக்க வாய்ப்புள்ளது. ஏனெனில், பனூ குறைழாவினுடைய யூதர்கள் ஹஸ்ரத் ஸஅது பின் முஆஸ் (ரலி) அவர்களின் நண்பர்களாக இருந்தனர். ஹஸ்ரத் ஸஅது பின் முஆஸ் (ரலி) அவர்களோ முஆஸ் கோத்திரத்தின் தலைவராக இருந்தார்கள். ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்களைக் குறித்து கூறும் போது சில ஆலிம்கள் கூறுகின்றனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு முஹாஜிர்களில் என்ன அந்தஸ்தும், தகுதியும் இருந்ததோ அதே அந்தஸ்தும் தகுதியும் ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்களுக்கு அன்ஸார் ஸஹாபிகளுக்கு மத்தியில் இருந்தது. சுருக்கமாக, அன்ஸார் ஸஹாபி இவ்வாறு கேள்வி கேட்டபோது, நமக்கு அவர்களின் உதவி தேவையில்லை என்று மட்டுமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இதைக் குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களும் எழுதியுள்ளார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: அடுத்த நாள், ஷவ்வால் மாதம் 15-ம் தேதி, ஹிஜ்ரீ 3-ம் ஆண்டில் அதாவது 31 மார்ச், கி.பி 624-வது வருடத்தில் சனிக்கிழமை ஸஹ்ரீ நேரத்தில் இஸ்லாமியப் படை முன்னேறியது. வழியில் தொழுகையை நிறைவேற்றிய பிறகு, உஹதுக்கு அருகில் சென்றதும், அந்நேரத்தில் நயவஞ்சகர்களின் தலைவனான மற்றும் தீய இயல்புடைய அப்துல்லாஹ் பின் உபை பின் ஸூலூல் என்பவன் துரோகமிழைத்தான். முஹம்மது (ஸல்) அவர்கள் என் பேச்சைக் கேட்கவில்லை ; அனுபவமற்ற இளைஞர்களின் பேச்சைக் கேட்டு நகரத்தை விட்டு வெளியே வந்து விட்டார்கள். எனவே என்னால் அவர்களுடன் சேர்ந்து போரிட முடியாது என்று கூறிவிட்டு முஸ்லிம்களின் படையை விட்டு விலகிச் சென்று தமது 300 கூட்டாளிகளுடன் மதீனாவை நோக்கி திரும்பிச் சென்று விட்டான். இந்த துரோகம் சரியல்ல என்று அவனுக்கு சில நபர்கள் தனிப்பட்ட முறையில் புரிய வைக்க முயற்சி செய்தனர். ஆனால், அவன் யாருடைய பேச்சையும் கேட்கவில்லை. இது முறையான போராக இருந்தால் நானும் சேர்ந்து போரிட்டிருப்பேன்; இது போரே கிடையாது. இன்னும் சொல்வதாயின், இது அழிவின் வாய்க்குள் செல்வதாகும் என்று அவன் கூறினான். அப்போது இஸ்லாமியப் படையினரின் எண்ணிக்கை 700 ஆக ஆகிவிட்டது. காஃபிர்களின் 3000 படை வீரர்களுக்கு எதிரில் நான்கில் ஒரு பங்கைக் காட்டிலும் குறைவானதாக இருந்தது. சவாரிகள் மற்றும் போர் தளவாடங்களைப் பார்க்கும்போதும், குறைஷியர்களுக்கு எதிரில் இஸ்லாமியப் படை முற்றிலும் பலவீனமானதாகவும், மிகவும்

அற்பமானதாகவும் இருந்தது. ஏனெனில், முஸ்லிம்களின் படையில் 100 கவச வீரர்களும், 2 குதிரைகளும் மட்டுமே இருந்தன. இதற்கு எதிரில், காஃபிர்களின் படையில், 700 கவச வீரர்களும், 200 குதிரைகளும் மூவாயிரம் ஒட்டகங்களும் இருந்தன. இந்த பலவீனமான நிலையை முஸ்லிம்களும் உணர்ந்திருந்தனர். அப்போது அப்துல்லாஹ் பின் அபீ ஸூலூல் மற்றும் அவனது 300 கூட்டாளிகளின் துரோகம் சில பலவீனமான உள்ளம் படைத்த முஸ்லிம்களிடத்தில் ஒரு நிம்மதியற்ற நிலையை உருவாக்கியது. அப்போது, அவர்களில் சிலர் தடுமாற்றம் அடையவும் ஆரம்பித்தனர். இதைக் குறித்து திருக்குர்ஆனிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதே நிம்மதியற்ற நிலையில் பனூ ஹாரிஸா மற்றும் பனூ ஸல்மா என்ற இரு கோத்திரங்களைச் சேர்ந்த முஸ்லிம்களில் சிலர் மதீனாவை நோக்கி திரும்பிச் சென்றுவிடலாம் என்று நாட்டமும் கொண்டு விட்டனர். எனினும், உள்ளத்தில் ஈமானிய ஒளி இருந்ததன் காரணமாக சுதாரித்துக் கொண்டனர். வெளிப்படையான .காரணிகளின் அடிப்படையில் மரணம் தங்கள் கண் முன்னே இருப்பதைக் கண்ட பிறகும் கூட அவர்கள் தமது எஜமானரை விட்டு விலகவுமில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓராயிரம் படை வீரர்களை அழைத்துக் கொண்டு மதீனாவை விட்டு புறப்பட்டார்கள். சிறிது தூரத்தைக் கடந்த பிறகு இரவைக் கழிக்க முகாமிட்டார்கள். பொதுவாக எதிரிக்கு அருகில் சென்றடைந்ததும் தமது படைக்கு ஓய்வெடுக்க நேரம் வழங்குவார்கள். அதன் மூலமாக படையினர் தமது பொருட்கள் போன்றவற்றை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக அன்னார் (ஸல்) நேரம் வழங்குவார்கள். இது எப்போதும் அன்னார் (ஸல்) பேணி வந்த வழிமுறையாக இருந்தது. ஸுப்ஹ் தொழுகை நேரத்தில் அன்னார் (ஸல்) புறப்பட்டபோது, உடன்படிக்கை செய்து கொண்ட கோத்திரங்களுக்கு உதவுவதாக சாக்குபோக்குகளைக் கூறிக் கொண்டு சில யூதர்கள் வந்திருப்பதை அன்னார் (ஸல்) அறிந்து கொண்டார்கள். யூதர்களின் சூழ்ச்சியைப் பற்றி அன்னாருக்கு முன்பே தெரிந்திருந்தது. எனவே அவர்களை திரும்பிச் செல்லும்படி கூறுங்கள் என்று அன்னார் (ஸல்) கூறிவிட்டார்கள். இதைக் கண்ட நயவஞ்சகர்களின் தலைவனாக இருந்த அப்துல்லாஹ் பின் அபீ ஸூலூல் தனது கூட்டாளிகளை அழைத்துக் கொண்டு திரும்பிச் செல்லும்போது, இது ஒன்றும் போர் கிடையாது; மாறாக இது அழிவின் வாய்க்குள் செல்வதாக உள்ளது என்று கூறியபடி சென்றான்.

அப்துல்லாஹ் பின் உபை திரும்பிச் சென்றதற்கு மற்றோரு காரணம் என்னவென்றால், வந்த யூதர்களை ஏன் சேர்த்துக் கொள்ளவில்லை என்று கேட்டு விட்டு, இது அழிவிற்குள் செல்வதாக உள்ளது; ஏனெனில் உதவி செய்ய வந்தவர்களையும் போர் செய்ய வேண்டாம் என்று தடுக்கப்படுகிறது என கூறினான். இதன் விளைவாக முஸ்லிம்கள் (எண்ணிக்கையில்) 700 ஆக ஆகிவிட்டனர். எண்ணிக்கையைப் பொருத்த வரை காஃபிர்களுக்கு எதிராக நான்கில் ஒரு பகுதியை விடவும் குறைவாக இருந்தனர். தளவாடங்களைப் பொருத்த வரை இன்னும் பலவீனமானவர்களாக இருந்தனர். ஏனெனில், காஃபிர்களில் 700 பேர் கவசம் அணிந்திருந்தனர். முஸ்லிம்களில் 100 பேர் மட்டுமே கவசம் அணிந்திருந்தனர்.காஃபிர்களில் 700 குதிரை வீரர்கள் இருந்தனர். முஸ்லிம்களிடம் 2 குதிரைகள் மட்டுமே இருந்தன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ ஹாரிஸாவின் பகுதியை அடைந்தபோது, ஒரு ஸஹாபியின் குதிரை வாலை ஆட்டியபோது, அது அந்த ஸஹாபியின் வாளின் மீது பட்டது. ஆபத்து நேரிடலாம் என்று கருதி அன்னார் (ரலி) உடனடியாக தமது வாளை உருவிக் கொண்டார்கள். அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: நல்ல குறியாக கருதுவதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விரும்பி வந்தார்கள். மேலும், தீய சகுனமாக கருதுவதை விரும்ப மாட்டார்கள். இது யாருடைய வாளாக உள்ளதோ அவர் அதனை உறையில் இடட்டும்; ஏனெனில், இன்று கண்டிப்பாக வாள் உருவப்படும் என்று அவரிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதாவது, இதிலிருந்து இதுதான் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளைப் பார்த்து, அருகில் உள்ள வழிகளின் மூலமாக எம்மை எதிரிகளுக்கு அருகில் எவர் அழைத்துச் செல்வார்? என்று கேட்டார்கள். அதாவது பொதுவாக செல்லும் பயணம் செய்யப்படும் வழிகளில் அல்லாமல் அது இருக்க வேண்டும் என்று கேட்டார்கள். அப்போது, ஹஸ்ரத் அபூகைஸ்மா (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் அழைத்துச் செல்கிறேன் என்றார்கள். ஹஸ்ரத் இப்னு ஸஅது (ரலி) போன்றவர்கள் அன்னாரின் பெயரை அபூகைஸ்மா என்று குறிப்பிட்டுள்ளார்கள். எனவே அன்னார் (ரலி) பனூ ஹாரிஸா உடைய பகுதிகள் மற்றும் நிலங்களின் வழியாக முஸ்லிம்களை அழைத்துச் சென்றார்கள். எந்த அளவுக்கு என்றால் உஹது உடையப் பள்ளத்தாக்கை அடைந்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முகாமிட்டார்கள். அன்னார் எவ்வாறு முகாமை அமைத்துக் கொண்டார்கள் என்றால் உஹது மலை பின்புறமாக வரும் வகையிலும், மதீனா முன் பக்கமாக இருக்கும் வகையிலும் பார்த்துக் கொண்டார்கள். அங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களிடத்தில் சொற்பொழிவாற்றினார்கள். உஹது மலை விளிம்பில் முஸ்லிம்கள் அணி வகுத்து நின்று கொண்டிருந்தார்கள். சனிக்கிழமையன்று ஃபஜ்ர் தொழுகைக்கான நேரம் நெருங்கியது. முஸ்லிம்கள் இணை வைப்பாளர்களை பார்த்துக் கொண்டிருந்தனர். பிலால்(ரலி) அவர்கள் பாங்கு கொடுத்து, இகாமத்தும் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுக்கு ஸுப்ஹ் தொழுகையை தொழ வைத்தார்கள்.

முஹம்மது பின் உமர் அஸ்லமி அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எழுந்து நின்று மக்களிடையே உரையாற்றினார்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள். மக்களே! அல்லாஹ் தன் வேதத்தில் எனக்கு வலியுறுத்தி கூறிய விஷயங்களை நான் உங்களுக்கு கூறுகின்றேன்; அதாவது, அவனுக்கு கட்டுப்படுவது குறித்தும் மேலும் அவனால் விலக்கப்பட்டவற்றிலிருந்து விலகியிருக்குமாறும் நான் கூறுகின்றேன். இன்று நீங்கள் (நற்) கூலி பெறுகின்ற இடத்தில் இருக்கின்றீர்கள். எவர் இதனை நினைவில் கொண்டுள்ளாரோ அவர் பொறுமை, நம்பிக்கை மற்றும் மனநிறைவை கடைபிடிக்க வேண்டும். இவை அனைத்திற்கும் பொறுமையை கடைபிடிக்க வேண்டியது அவசியம் ஆகும் அல்லது இன்று எதற்காக நீங்கள் வந்துள்ளீர்களோ அதற்கு பொறுமை காப்பது அவசியம் ஆகும். ஏனெனில், எதிரிகளுடன் ஜிஹாது செய்வது மிகக் கடுமையான விஷயம் ஆகும். அல்லாஹ் நேர்வழி வழங்கிய மக்களைத் தவிர சிலரால் மட்டுமே இதில் பொறுமை காக்க முடியும். ஏனெனில், அல்லாஹ் தனக்கு கீழ்படியும் மக்களுடன் இருக்கின்றான். அல்லாஹ்வுக்கு கட்டுப்படாத மக்களுடன் ஷைத்தான் இருக்கின்றான். எனவே நீங்கள் ஜிஹாதிற்காக பொறுமையை மேற்கொண்டு உங்களது செயலை துவங்குங்கள். அதன் மூலமாக அல்லாஹ்வின் வாக்குறுதிகளைத் தேடுங்கள். நான் எந்த எந்த பணிகளுக்காக உங்களுக்கு கட்டளையிடுகின்றேனோ அவை உங்கள் மீது கடமையாகும். ஏனெனில், நான் உங்களின் நேர்வழிக்காக பெரும் ஆவல் கொண்டுள்ளேன். சந்தேகத்திற்கு இடமின்றி, கருத்து வேறுபாடுகளும், சண்டைகளும் வீழ்ச்சி மற்றும் பலவீனத்தின் அடையாளங்களாகும். அல்லாஹ் அவற்றை விரும்புவதில்லை. அதாவது எவ்வித கருத்துவேறுபாடும் இருக்கக் கூடாது. கருத்து வேறுபாடுகள் இருக்கும்போது அல்லாஹ் உதவி ஒத்தாசை செய்வது கிடையாது.

மக்களே! இவ்விஷயம் எனது உள்ளத்தில் இடப்பட்டுள்ளது; எவர் ஹராமானவற்றை மேற்கொள்வாரோ அவருக்கும் எனக்குமிடையில் அல்லாஹ் வேறுபாட்டை காட்டி விடுவான். எவர் ஹராமான வேலையை செய்கின்றாரோ அல்லாஹ் அவரை விரும்புவதில்லை. எவர் ஹராமானவற்றிலிருந்து விலகியிருக்கின்றாரோ அல்லாஹ் அவரது பாவங்களை மன்னித்து விடுகின்றான்.எவர் என் மீது ஒருமுறை தரூத் அனுப்புவாரோ அவர் மீது அல்லாஹ்வும், வானவர்களும் பத்து முறை அருளை அனுப்புவார்கள். எவர் ஏதேனும் ஒரு முஸ்லிமுடனும், காஃபிருடனும் நல்லமுறையில் நடந்து கொள்வாரோ அவருடைய கூலி அல்லாஹ்வின் பொறுப்பில் உள்ளது. அவருக்கு உலகில் விரைவில் கூலி கிடைக்கும். மறுமையில் இறுதியாக கூலி கிடைக்கும். எவர் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீது நம்பிக்கை கொள்கின்றாரோ அவர் மீது ஜுமுஆ கடமையாகும். குழந்தைகள், பெண்கள், நோயாளிகள் அல்லது கட்டுப்படுத்தப்பட்ட அடிமைகளைத் தவிர மற்றவர்களின் மீது அது கடமையாகும். எவர் அல்லாஹ்வை விட்டு தன்னிறைவு கொள்கின்றாரோ அவரை விட்டு அல்லாஹ்வும் தன்னிறைவு கொள்கின்றான் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

சுருக்கம் என்னவென்றால், முழுமையாக அன்னார் (ஸல்) அறிவுரை செய்தார்கள். அன்னார் (ஸல்) கண்ட கனவின் அடிப்படையில் இந்த சிந்தனை அன்னாருக்கு தோன்றியிருக்கலாம். முஸ்லிம்கள் எவ்வாறு இருக்க வேண்டும்? என அன்னார் (ஸல்) முழுமையாக அறிவுரை செய்தார்கள். பிறகு அன்னார் (ஸல்) கூறினார்கள்: அல்லாஹ் தன்னிறைவு பெற்றவனும், புகழுக்குரியவனும் ஆவான். அல்லாஹ்வுக்கு அருகில் கொண்டு செல்லும் அமல்களைக் குறித்து நான் அறிந்ததை எல்லாம் உங்களுக்கு கட்டளையாக கூறிவிட்டேன். நரகத்திற்கு அருகில் கொண்டு செல்லும் அமல்களைக் குறித்து நான் அறிந்ததை எல்லாம் கூறி உங்களை தடுத்துவிட்டேன். ரூஹுல் அமீன் எனும் வானவர் என்னுடைய உள்ளத்தில் இல்ஹாமாக கூறியது என்னவென்றால், எந்தவொரு ஆன்மாவும் தனது முழுமையான ரிஸ்க் எனும் உணவை பெறாத வரை இறக்காது. அதனுடைய ரிஸ்க் எனும் உணவில் எவ்வித குறைவும் செய்யப்படாது. அந்த ரிஸ்க் தாமதமாக அதற்கு வழங்கப்பட்டாலும் சரியே! அதாவது, அல்லாஹ் செயல்களுக்கான கூலியை முழுமையாக வழங்குகின்றான் என்பது இதன் பொருளாகும். மேலும், இங்கு ரிஸ்க் என்பது எல்லா வகையான ரிஸ்க்கையும் குறிக்கும். அன்னார் (ஸல்) கூறினார்கள்: எனவே நீங்கள் உங்கள் இறைவனை அஞ்சிக் கொள்ளுங்கள்; ரிஸ்கை தேடுவதில் நடுநிலையைக் கை கொள்ளுங்கள். ரிஸ்க் தாமதமாக கிடைப்பது உங்களை அல்லாஹ்வுக்கு கட்டுப்படாதவராக ஆக்கி அந்தக் கட்டுப்படாமையில் அதனை தேடக் கூடியவர்களாக உங்களை ஆக்கி விட வேண்டாம். நற்செயல்கள் உயரிய ஒழுக்கம், ரிஸ்க் ஆகியவற்றை தேடிக் கொண்டிருங்கள். ஏனெனில், அல்லாஹ்விடத்தில் உள்ளதை அடியான் தனது கீழ்படிதலின் மூலமாகவே தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும். உங்களுக்காக அல்லாஹ் ஹராம் (விலக்கப்பட்டவை) மற்றும் ஹலால் (ஆகுமானவை) ஆகியவற்றை எடுத்துக் கூறிவிட்டான். ஆனால், அவை இரண்டிற்கும் இடையில் பல சந்தேகத்திற்குரிய விஷயங்கள் இருக்கின்றன. அவற்றை பல மக்கள்

அறிவதில்லை. ஆனால் எவரை அல்லாஹ் பாதுகாப்பாக வைத்துள்ளானோ அவர்கள் அறிவார்கள். சந்தேகத்திற்குரிய அவ்விஷயங்களை எவர் விட்டுவிடுவாரோ அவர் தமது மார்க்கத்தையும், கண்ணியத்தையும் பாதுகாத்துக் கொள்வார். எவர் அதில் ஈடுபடுவாரோ அதாவது தவறான விஷயங்களில் மூழ்கி விடுவாரோ அவர் மேய்ச்சல் நிலத்திற்கு அருகில் கால்நடைகளை ஓட்டிச் செல்லும் மேய்ப்பரைப் போன்றவர் ஆவார். அவர் அந்த மேய்ச்சல் நிலத்திற்குள் சென்று விடுவதற்கு வாய்ப்பு உள்ளது. ஒவ்வோர் அரசர் புறமிருந்தும் தடை செய்யப்பட்ட மேய்ச்சல் நிலங்கள் உள்ளன. கேட்டுக் கொள்ளுங்கள்; அல்லாஹ்வால் தடை செய்யப்பட்ட மேய்ச்சல் நிலங்கள் என்பது அவனால் ஹராமாக்கப்பட்ட விஷயங்கள் ஆகும். எவை தெளிவாக கூறப்பட்டுள்ளனவோ அந்த ஹராமானவற்றிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். உடலில் தலை இருப்பது போன்று ஒரு நம்பிக்கையாளர் அனைத்து நம்பிக்கையாளர்களிடத்திலும் இருக்கின்றார். தலையில் வலி ஏற்படும்போது முழு உடலும் அதன் வேதனையை அனுபவிக்கின்றது.

இவ்விஷயங்களை இன்று முஸ்லிம்கள் நினைவில் வைத்திருந்தால் எந்தவோர் எதிரிக்கும் ஏறெடுத்து பார்ப்பதற்கு துணிவு இருந்திருக்காது.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எதிரிகள் மக்காவிலிருந்து புறப்பட்டு உஹது நாளன்று மதீனா வந்தடைந்தார்கள். போர் தளவாடங்களை சிரியாவிலிருந்து அபூஸுஃப்யான் கொண்டு வந்திருந்தார். வரும் முன் காப்போம் என்ற அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இதனை தடுப்பதற்காக பத்ர் நாள் வரை பொறுமையாக இருக்க வேண்டிய அவசியம் வந்தது. அதில் குஃப்ருடைய கம்பீரம் உடைந்து போனது. இப்போது அதே பொருட்கள் முஸ்லிம்களுக்கு எதிராக போர் தொடுக்கப்படுவதற்காக ஒன்று திரட்டப்பட்டிருந்தது. பின்வரும் திருக்குர்ஆன் வசனம் அதனைக் குறித்தும், அதற்காக செலவு செய்பவர்கள் குறித்தும் சுட்டிக் காட்டியவாறு கூறுகிறது:

إِنَّ الَّذِيْنَ كَفَرُوْا يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ لِيَصُدُّوْا عَنْ سَبِيْلِ اللّٰهِ

فَسَيُنْفِقُوْنَهَا ثُمَّ تَكُوْنُ عَلَيْهِمْ حَسْرَةً

நிச்சயமாக நிராகரிப்பாளர்கள் தங்கள் பொருள்களை அல்லாஹ்வின் பாதையிலிருந்து (மக்களைத்) தடுப்பதற்காகச் செலவிடுகின்றனர். அவர்கள் அதனைச் செலவு செய்து கொண்டேயிருப்பார்கள். பின்னர் அது அவர்களின் கவலை(க்குக் காரணம்) ஆகிவிடும்.(8:37)

இந்தப் போரில் குறைஷியர்களுடன் பனீ திஹாமா கோத்திரமும், பனீ கினானா கோத்திரமும் இணைந்திருந்தது. காஃபிர்களின் படையின் எண்ணிக்கை மூவாயிரம் வரை சென்று இருந்தது. அனைவரும் ஆயுதங்கள் வைத்திருந்தனர். அவர்களில் 700 பேர் போர் கவச உடைகளை அணிந்திருந்தனர். வெகு விரைவில் முஸ்லிம்களை பழிவாங்கி விடவேண்டும் என்று அவர்கள் அனைவரும் துடித்துக் கொண்டிருந்தனர். சிறு சிறு கோத்திரங்களால் உருவாகியிருந்த இந்த முழுப் படையும் சினத்தால் நிரம்பியிருந்தது. இவர்களின் படைத் தளபதியாக அபூஸுஃப்யான் இருந்தார். அவரது தலைமையில் மதீனாவின் வட கிழக்குப் பகுதியில் இருந்த ஒரு குறிப்பிட்ட இடத்தை படைக்கு உறுதியான பதுங்குமிடமாக அவர்கள் ஆக்கிக் கொண்டு விட்டனர். அவர்களுக்கும் மதீனா நகரத்திற்குமான தூரமாக உஹது மலையின் பள்ளத்தாக்கு மட்டுமே இருந்தது. அந்த இடத்தை பதுங்குமிடமாக ஆக்கிக் கொண்ட காஃபிர்கள் மதீனா வாசிகளின் வயல்வெளிகளையும், தோட்டங்களையும் நாசப்படுத்த துவங்கினர். இதைக் கண்ட ஸஹாபிகளுக்கு கடும் கோபம் வந்தது. இஸ்லாமிய தன்மானம் பழிவாங்க முனைந்தது. தற்காப்பிற்காக தாக்குதல் நடத்த வேண்டும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் மீண்டும், மீண்டும் கோரிக்கை வைக்கப்பட்டது.ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆயிரம் நபர்களை அழைத்துக் கொண்டு மதீனாவிற்கு வெளியே சென்றார்கள். அப்துல்லாஹ் பின் அபீ ஸூலூல் என்ற ஒரு தலைவன் மதீனாவில் வசித்து வந்தான். அவன் வெளிப்படையில் முஸ்லிம்களுடன் இருந்தான். ஆனால், போர்க் களத்தில் நெருக்கடியான தருணத்தில் தனது முந்நூறு நபர்களுடன் முஸ்லிம்களை விட்டு பிரிந்து விட்டான். இதனால் முஸ்லிகளின் எண்ணிக்கை ஆயிரத்திலிருந்து 700 ஆகிவிட்டது. இந்த மொத்தப் படையிலும் இரண்டு குதிரைகளே இருந்தன. ஆயினும் முஜாஹித்களின் பாதங்கள் தொடர்ந்து முன்னேறிக் கொண்டே சென்றன. பேரீத்தம் பழ மரங்களின் தோட்டங்களை கடந்து உஹது மலையை அடைந்து விட்டனர். இஸ்லாமியப் படை இரவு முழுவதும் அந்த மலையின் குகையிலேயே இருந்தது. காலை ஃபஜ்ர் தொழுகையை தொழுது விட்டு மைதானத்தில் ஒன்று கூடினார்கள். அப்போது போர் ஆரம்பமானது. .இதனுடைய மற்ற விவரம் எதிர் வரும் நாட்களில் எடுத்துக் கூறப்படும்.

பாலஸ்தீனர்களுக்காக துஆக்களுக்காக நான் எடுத்துக் கூறிவருகின்றேன். அவர்களுக்காக துஆக்கள் செய்து வாருங்கள். கடந்த நாட்களில் போர் நிறுத்தம் செய்யப்பட்ட பிறகு, என்ன நடக்கும் என்று கருதப்பட்டதோ அதுதான் நடந்து கொண்டு இருக்கிறது. இஸ்ரேலிய அரசாங்கம் முன்பை விடவும் அதிகமாக காஸாவின் ஒவ்வொரு பகுதியிலும் குண்டுகளை வீசி வருகிறது; தாக்குதல் நடத்தி வருகிறது. அப்பாவி குழந்தைகளும், குடிமக்களும் ஷஹீதாகிக் கொண்டிருக்கின்றனர். தற்போது இந்த செயலுக்கு எதிராக அமெரிக்காவின் ஒரு காங்கிரஸ் பிரதிநிதி அநேகமாக அவர் யூதர் என்று நினைக்கின்றேன்; அவர் பேசும்போது, இப்பொழுது இது மிக அதிமாகி விட்டது; இதை தடுப்பதற்காக அமெரிக்கா தனது பங்களிப்பை வழங்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். மத்திய கிழக்குப் பகுதியில் ஒரே அடியாக நடத்தப்படும் இந்த ஃபயரிங் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும், குண்டு வீச்சுகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் மெல்லிய குரலில் அமெரிக்க அதிபரும் தற்போது இப்போது பேசியிருக்கின்றார். தெற்குப் பகுதிக்கு செல்லுங்கள்; அங்கு ஒன்றும் ஆகாது என்று முன்பு கூறிவந்தனர். தற்போது அங்கேயும் இதே நிலைதான் காணப்படுகின்றது. எவ்வாறு இருப்பினும், அமெரிக்க அதிபரின் இந்தக் கூற்று, ஏதோ மனிதாபிமானத்தின் அடிப்படையில் கூறப்பட்டது என்று எவ்வித தப்பெண்ணத்திலும் நாம் இருந்து விடக் கூடாது. மாறாக, இது அவர்களின் சுயநலனிற்காக கூறப்பட்டது ஆகும். அமெரிக்காவில் தேர்தல் நடைபெற இருக்கின்றது. போர் நிறுத்தப்பட வேண்டும் என்று அங்குள்ள இளைஞர்களும் எதிர் நடவடிக்கைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். அதேபோன்று அமெரிக்காவில் வசிக்கும் முஸ்லிம்களும் குரல் எழுப்பியிருக்கின்றனர். எனவே இவர்கள் வாக்கு சேகரிப்பதற்காக இவை அனைத்தையும் செய்கின்றனர். பாலஸ்தீனர்களின் மீதோ முஸ்லிம்கள் மீதோ அவர்களுக்கு எந்த அனுதாபமும் கிடையாது.

அடுத்து, முஸ்லிம் நாடுகளை பார்க்கும்போது அவர்களின் குரலில் ஓரளவு அழுத்தம் உருவாகி வருகின்றது. ஆனால் எதுவரை ஒன்றுபட்டு போர் நிறுத்தத்திற்காக அவர்கள் முயற்சி செய்ய மாட்டார்களோ அதுவரை எந்த பயனும் ஏற்படாது. அல்லாஹ் முஸ்லிம்களிடத்தில் ஒற்றுமையை உருவாக்குவானாக. முஸ்லிம்களிடத்தில் ஒற்றுமை இல்லை என்பதும்; ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமை கொல்ல துடித்துக் கொண்டிருக்கின்றார் என்பதும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு தெரியும். ஏமனில் என்னவெல்லாம் நடக்கின்றது என்பதை பாருங்கள்! அதேபோன்று மற்ற நாடுகளையும் பாருங்கள்! ஆயிரக்கணக்கான குழந்தைகளும், அப்பாவிகளும் முஸ்லிம்களின் கைகளாலேயே மடிந்து கொண்டிருக்கின்றனர். இன்னும் கூறுவதாயின் சில இடங்களில் லட்சக்கணக்கில் இறந்து கொண்டிருக்கின்றனர். இந்த விஷயம் தான் அந்நியர்களுக்கு துணிவை வழங்கியுள்ளது. முஸ்லிம்களின் மீது கொடுமை இழைத்தால் எந்தப் பிரச்சனையும் இல்லை ; ஏனெனில், இவர்கள் தங்கள் மீதே அநீதி இழைத்து வருகின்றனர் என்பது அவர்களுக்கு தெரிகின்றது. முஸ்லிம்களுக்கு மற்ற முஸ்லிம்களின் உயிரைப் பற்றி எவ்வித அக்கறையும் இல்லையென்றால் எதிரிகளுக்கு எவ்வாறு அக்கறை இருக்கும். முஸ்லிம்கள் பிற முஸ்லிம்களை கொலை செய்வதைக் குறித்து அல்லாஹ் மிக கடுமையாக எச்சரித்துள்ளான். அவர்கள் நரகவாசிகளாக ஆகிவிடுவார்கள் என்று அவன் எச்சரிக்கையும் செய்துள்ளான். முஸ்லிம்கள் ஒன்றாக ஆகி உலகிலிருந்து அநீதியை அகற்றக் கூடியவர்களாக ஆகட்டுமாக! அநீதியை உருவாக்கி சண்டையிடக் கூடியவர்களாக ஆகாமல் இருக்கட்டுமாக! ஐநா சபையும் தனது குரலை உயர்த்துவதற்கு முயற்சி செய்துள்ளது. ஆனால், அதன் குரலை யார் கேட்கின்றார்கள்? நாங்கள் இதை செய்வோம்; அதை செய்வோம் என்று கூறுகின்றனர். ஆனால் ஒன்றும் செய்ய இயலாது. அவர்களுடைய பேச்சைக் கேட்பதற்கு கூட ஆள் இல்லை. வல்லரசுகள் தங்களது அதிகாரத்தை பயன்படுத்திக் கொள்கின்றன. அல்லாஹ் முஸ்லிம்கள் மீது கருணை புரிவானாக. எவ்வாறு இருப்பினும், இந்த அநீதியை முடிவுக்கு கொண்டு வருவதற்காக நாம் துஆக்கள் செய்வதுடன் நமது நட்பு வட்டத்திலுள்ள மக்களுக்கும், தத்தமது பகுதியுள்ள அரசியல் வாதிகளுக்கும் இந்த அநீதியை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக குரல் எழுப்புவதற்கு நாம் தொடர்ச்சியாக கவனமூட்டி வரவேண்டும். இதனைக் குறித்து முன்னரும் நான் ஜமாஅத்துகளின் மூலமாக தூதுச் செய்தி அனுப்பியுள்ளேன். இந்த அநீதியை முடிவுக்கு கொண்டு வர நாம் முயற்சி செய்ய வேண்டும் என்று நாம் நமது நட்பு வட்டாரத்திலும் இந்த விஷயத்தை பரப்ப வேண்டும். அப்பாவிகளை அல்லாஹ் கொடுமைகளிலிருந்து காப்பாற்றுவானாக!

* * * * *

## பாலஸ்தீன மக்களுக்காக துஆ செய்யும்படி ஹுஸூர் அன்வர் அவர்களின் தொடர் அறிவுரை

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

பாலஸ்தீனயர்களுக்காகவும் துஆக்கள் செய்து கொண்டிருங்கள். அநீதியின் உச்சம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே சென்று கொண்டிருக்கின்றது. இன்னும் கூறப்போனால், அதிகரித்துக் கொண்டே சென்று கொண்டிருக்கின்றது. அல்லாஹ் இனி அநீதியாளர்களை பிடிப்பதற்கான ஏற்பாட்டை செய்வானாக. மேலும், அநீதியிழைக்கப்பட்ட பாலஸ்தீனியர்களுக்கும் எளிமையை உருவாக்குவானாக. முஸ்லிம் நாடுகளுக்கும் அல்லாஹ் அறிவையும், புரிதலையும் வழங்குவானாக! அவற்றின் குரல் ஒருமித்தக் குரலாக இருக்கட்டுமாக! மேலும், அவை முஸ்லிம் சகோதரர்களுக்காக அவர்களின் உரிமையை செலுத்துவதற்கு முயற்சி செய்யக் கூடியவைாக இருக்கட்டுமாக!

(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள்-குத்பா பேருரை 15.12.23)

# ஜுமுஆ பேருரை

**உஹது போரின்போது ஸய்யதுஷ் ஷுஹதா ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் உயிர்தியாகம் மேலும் அந்தப் போரில் நிகழ்ந்த ஏனைய சம்பவங்களைப் பற்றிய குறிப்புகள் மற்றும் அநீதியிழைக்கப்பட்ட பாலஸ்தீன மக்களுக்காக துஆ செய்வதற்கான வழிகாட்டல்**

இந்தப் போரில் முஸ்லிம்களுக்கு ஒரு பெரும் துயரம் ஏற்பட்டது; மேலும் இந்த துயரம் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்களின் படையினரின் தவறால் ஏற்பட்டது. எனினும், ஒரு மகத்தான நன்மையும் கிடைத்தது. அதாவது, நயவஞ்சகர்களின் நயவஞ்சகமும், யூதர்களின் பகைமையும், உள்ளத்திலிருந்த காழ்ப்புணர்ச்சியும் வெட்ட வெளிச்சமாகிவிட்டது. மேலும், தூய முஸ்லிம்கள் தனித்தன்மை வாய்ந்தவர்களாக ஆகிவிட்டனர்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் கொலை செய்யப்பட்ட தகவல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கிடைத்தபோது அன்னாருக்கு கடுமையான வேதனை ஏற்பட்டது. அறிவிப்பில் வருகின்றது: ஹம்ஸாவை கொலை செய்தவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் வந்தபோது, அன்னார் அவரை மன்னித்து விட்டார்கள்தான். எனினும், வஹ்ஷீ என் முன்னால் வரவேண்டாம் என்று ஹம்ஸாவின் மீதான நேசத்திற்கு மரியாதை செலுத்தியவாறு அன்னார் (ஸல்) கூறினார்கள். மேலும், அல்லாஹ் ஹம்ஸாவின் சதையை சிறிதளவு சுவைப்பதிலிருந்தும் நெருப்பை நிரந்தரமாக ஹராமாக்கி விட்டான் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஹம்ஸா பின் அப்தில் முத்தலிப் அவர்களை அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் சிங்கம் என ஏழு வானங்களிலும் எழுதப்பட்டுள்ளது என்று ஜிப்ராயீல் (அலை) தமக்கு தகவல் தந்துள்ளதாக ஹஸ்ரத் நபி (ஸல்) கூறினார்கள்.

காஸா ஷஹீத் மதிப்பிற்குரிய ஷேக் அஹ்மத் ஹுஸைன் அபூ ஸர்தானா ஸாஹிப் மற்றும் கென்யாவின் மதிப்பிற்குரிய உஸ்மான் அஹ்மத் காகோரியா ஸாஹிப் போன்ற மர்ஹூம்களின் நற்குறிப்புகளும் ஜனாஸா காயிப் தொழுகையும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 22 டிசம்பர் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **22ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இன்றைய தினங்களில் குத்பாக்களில் உஹது போர் பற்றி கூறப்பட்டு வருகிறது. இதற்கு முன்னர் கூறப்பட்டது போன்று, முஸ்லிம்கள் பொதுவான போரில் நிராகரிப்பவர்களுக்குக் கடும் இழப்பை ஏற்படுத்தினார்கள். அவர்கள் ஓட வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளானார்கள். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வலியுறுத்திக் கூறப்பட்டிருந்த கட்டளை இருந்த பின்னரும் குன்றின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்தவர்களில் பெரும்பாலார் குன்றை காலி செய்து விட்டதனால் எதிரி அந்தப் பக்கத்திலிருந்து தாக்குதல் தொடுத்து முஸ்லிம்களுக்குக் கடும் இழப்பை ஏற்படுத்தி விட்டான். இதன் விவரம் இவ்வாறு வருகிறது: இணை வைப்பாளர்களின் கொடியை ஏந்துபவர்கள் ஒவ்வொருவராக கொல்லப்பட்டதும், ஒருவர் கூட அப்போது கொடியை ஏந்துவதற்கோ அதன் அருகில் வருவதற்கோ துணிச்சல் கொள்ள முடியாமற் போனதும் இணை வைப்பாளர்கள் ஒரேயடியாகத் தோல்வியைத் தழுவ ஆரம்பித்தனர். மேலும், புறமுதுகிட்டு ஓடத் துவங்கினர்.

சிறிது நேரத்திற்கு முன்பு வரை மகிழ்ச்சியான தொனியிலும், முழு உற்சாகத்துடனும் மேளம் கொட்டி, கொட்டிப் பாடிக் கொண்டிருந்த அவர்களுடைய பெண்களும் மேளங்களை வீசிவிட்டு மலை பக்கம் ஓடினர். முஸ்லிம்கள் எதிரிகளை ஓடக் கண்டதும், அவர்கள் பின்னால் சென்று அவர்களுடைய ஆயுதங்களை எடுக்கவும் போர்ச் செல்வங்களை சேகரிக்கவும் துவங்கினர். அதே நேரத்தில், எந்த சூழ்நிலையிலும் உங்கள் இடத்தை விட்டு நகரக் கூடாது என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டு மலைக் குன்றின் மீது நியமித்து இருந்த அந்த வில் வீரர்களின் படை போர்ச் செல்வங்களை சேகரிப்பதற்காக அங்கிருந்து ஓடிச் சென்றது. இவ்வாறு கூறப்படுகிறது:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தரப்பிலிருந்து இந்தப் படைக் குழுவுக்கு அமீராக நியமிக்கப்பட்டிருந்த ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்கள், எந்நிலையிலும் உங்களுக்கு இங்கிருந்து விலகுவதற்கான கட்டளை இல்லை என்று அவர்களை வன்மையாகத் தடுத்தார்கள். ஆனால், அவர்கள் கேட்கவில்லை. மேலும், இணை வைப்பாளர்கள் தோற்கடிக்கப்பட்டு விட்டனர். இப்பொழுது நாம் இங்கிருந்து என்ன செய்வோம்? என்று கூறி அவர்கள் எல்லாம் மலைக் குன்றிலிருந்து இறங்கிச் சென்றனர். மேலும், போர்ச் செல்வங்களை சேகரிக்கத் துவங்கினர். அவர்களில் பெரும்பாலார் தங்களுடைய இடத்தை விட்டு விட்டிருந்தனர்தான். ஆயினும், இவர்களின் அமீராக இருந்த ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்களும் மற்ற சில ஸஹாபிகளும் தங்களது இடத்திலேயே உறுதியாக நின்றனர். ஆனால், அவர்களின் எண்ணிக்கை பத்துக்கும் குறைவாகவே இருக்கும். அவர்கள் கீழே செல்பவர்களைப் பார்த்து, அதாவது குன்றிலிருந்து கீழே சென்று கொண்டிருந்தவர்களைப் பார்த்து, நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளைக்கு ஒருபோதும் மாறு செய்ய மாட்டேன் என்று கூறினார்கள்.

அவர்களின் அமீர் இவ்வாறு கூறினார்கள். பெரும்பாலான வரலாற்றாசிரியர்களும் வாழ்க்கை வரலாறு எழுத்தாளர்களும் மலைக் குன்றை விட்டுச் சென்ற ஸஹாபிகளைப் பற்றி குறிப்பிடுகையில். இவ்வாறே எடுத்துரைக்கின்றனர்:

அதாவது அவர்கள் அனைவரும் போர்ச் செல்வங்களை சேகரிப்பதற்காக அவசரப்பட்டனர்;மற்ற அனைவரும் போர்ச் செல்வங்களை சேகரித்துக் கொண்டிருக்கும்போது நாங்கள் ஏன் பின்தங்கியிருக்க வேண்டும்? என்று அதனால் தான் அவர்கள் மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களின் அமீராக இருந்த ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்களோ, என்ன நடந்தாலும் சரி, நீங்கள் உங்களுடைய இடமான இந்த இடத்தை விட்டு நகரக் கூடாது என்றே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நமக்கு கட்டளையிட்டிருந்தார்கள்; எனவே நாம் இங்கேயே இருக்க வேண்டும் என்று அவர்களைத் தடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களில் பெரும்பாலார் அமீர் கூறியதற்கு ஒத்துப் போகவில்லை. மேலும், போர்ச் செல்வங்களை சேகரிப்பதற்காகக் குன்றிலிருந்து கீழே இறங்கி சென்றார்கள்.

பெரும்பாலான வரலாற்றாசிரியர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்.

இந்த ஸஹாபிகள் போர்ச் செல்வங்களுக்காக அவசரப்பட்டு குன்றை விட்டுச் சென்று விட்டார்கள் என்ற குறிப்பே பொதுவாக ஹதீஸ் மற்றும் திருக்குர்ஆன் விரிவுரை நூல்களில் கிடைக்கின்றது. மேலும் அதிகாரம் ஆலி இம்ரானின் 153 -வது வசனம் இதுவாகும்.

مِنْكُمْ مَّنْ يُّرِيْدُ الدُّنْيَا وَمِنْكُمْ مَّنْ يُّرِيْدُ الْاٰخِرَةَ

அதாவது உங்களுள் சிலர் இவ்வுலகை நாடினர்; சிலர் மறுமையை நாடினர்.

இந்த வசனத்திற்கு விளக்கவுரை வழங்கியவாறு பெரும்பாலான திருக்குர்ஆன் விரிவுரையாளர்களும், ஸஹாபிகள் போர்ச் செல்வங்களைப் பெறுவதற்காக விரைவாக செல்ல விரும்பினர் என்றே எழுதுகின்றார்கள்:

ஆனால், ஸஹாபிகளைப் பற்றி அவர்கள் இந்த உலகியல் ஆசைக்காக குன்றை விட்டுச் சென்றார்கள் என்ற விஷயத்தை உள்ளம் ஏற்பதில்லை.

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் ஒரு விளக்கவுரைக் குறிப்பு எழுதினார்கள். அது (அச்சில்) வெளியிடப்படாத குறிப்பாகும். அதன் விளக்கத்தை நான் பின்னர் எடுத்துரைப்பேன்.

அதற்கு முன்னர் சில விஷயங்களைக் கூறிவிடுகின்றேன் அல்லது முழு வசனத்தையும் முதலில் எடுத்துக் கூறி விடுகிறேன். முழு வசனமும் இவ்வாறு வருகிறது:

وَلَقَدْ صَدَقَكُمُ اللّٰهُ وَعْدَهٗٓ اِذْ تَحُسُّوْنَهُمْ بِاِذْنِهٖ ۚ
حَتّٰٓى اِذَا فَشِلْتُمْ وَتَنَازَعْتُمْ فِى الْاَمْرِ وَعَصَيْتُمْ
مِّنْۢ بَعْدِ مَآ اَرٰٮكُمْ مَّا تُحِبُّوْنَ ۗ
مِنْكُمْ مَّنْ يُّرِيْدُ الدُّنْيَا وَمِنْكُمْ مَّنْ يُّرِيْدُ الْاٰخِرَةَ ۚ
ثُمَّ صَرَفَكُمْ عَنْهُمْ لِيَبْتَلِيَكُمْ ۚ وَلَقَدْ عَفَا عَنْكُمْ ۗ
وَاللّٰهُ ذُوْ فَضْلٍ عَلَى الْمُؤْمِنِيْنَ

பொருள்: அல்லாஹ்வின் கட்டளையினால் நீங்கள் அவர்களைக் கொன்றொழித்துக் கொண்டிருந்த வேளையில், அவன் உங்களுடன் செய்த வாக்குறுதியை நிறைவேற்றினான். எதுவரை எனில் நீங்கள் துணிவிழந்து (இறைவன் மற்றும் தூதரின்) கட்டளையைப் பற்றி ஒருவருக்கொருவர் சண்டையிட்டு நீங்கள் விரும்பியதை அவன் உங்களுக்குக் காட்டிய பின்னரும் நீங்கள் கட்டுப்பட மறுத்தீர்கள்.

உங்களுள் சிலர் இவ்வுலகை நாடினர். இன்னுஞ் சிலர் மறுமையை நாடினர். பின்னர் அவன் உங்களை சோதிப்பதற்காக (எதிரிகளாகிய) அவர்களின் தாக்குதலிலிருந்து உங்களைக் காப்பாற்றினான். என்ன நடந்ததோ, நிச்சயமாக அவன் உங்களை மன்னித்து விட்டிருக்கிறான். அதாவது, அல்லாஹ் உங்களை மன்னித்து விட்டிருக்கின்றான். மேலும், அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்குப் பேரருள் புரிபவனாவான்.(3:153)

இதுதான் அந்த வசனம். இதன் விளக்கவுரையில் இந்த வசனம் போர்ச் செல்வத்துக்காக அல்லது இந்தப் போர் தொடர்பாக இறங்கியதாக அனுமானிக்கப்படுகிறது. அவர்களுக்குப் போர்ச் செல்வங்களைப் பற்றிய கவலை இருந்ததாக ஸஹாபிகளைப் பற்றி கூறுவது, இன்னும் கூறுவதாயின் நினைப்பது கூட அவர்களது மேன்மைக்கு எதிரானதாகும். (ஸஹாபிகளாகிய) அந்த மக்களோ தங்களுடைய மனைவி மக்கள் மற்றும் தங்களுடைய உயிர்கள் எல்லாவற்றையும் விட அன்பிற்குரிய தங்கள் இறைவன் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களுடைய பாதங்களில் தங்களை அர்ப்பணம் செய்திருந்தார்கள்.

அதற்கு முன்னர் அவர்கள் தங்களுடைய செல்வங்கள் மற்றும் பொருள்களையுமே அதே வழியில் அர்ப்பணித்து விட்டிருந்தார்கள். எடுத்துரைக்கப்பட்ட நிகழ்வுகளுக்கு ஏற்ப, இந்த மக்கள் ஷஹீது ஆக வேண்டும் என்ற ஆசையிலேயே வெளியே சென்று போர் புரிய விரும்பினர்.

இந்தப் போர்கள் போர்ச் செல்வங்களைப் பெறுவதற்காக நடைபெற்றிருக்கவில்லை. இதுவோ முஸ்லிம்கள் மீது ஓர் அவதூறாகும். எனினும், வெற்றிபெறும் நிலையில் போர்ச் செல்வம் கிடைத்து விடுவது ஒரு சார்பு விஷயமாக வேண்டுமானால் இருக்கலாம். ஆனால், ஸஹாபிகளின் நோக்கம் குறிக்கோள் போர்ச் செல்வங்களைப் பெறுவதாக ஒருபோதும் இருந்திருக்க முடியாது.

எவ்வாறு இருப்பினும்,இஸ்லாத்தின் வரலாற்றில் இவ்வாறே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கையில் வரலாற்றாசிரியர்கள் அல்லது வாழ்க்கை வரலாறு எழுதுபவர்கள் அல்லது ஹதீஸ் தொகுப்பாளர்கள் அல்லது திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் ஆகிய இந்த சான்றோர்களுக்கு எங்கோ தவறு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மேலும், ஏதோ அறிவிப்பின் வரிசைகள் போன்றவற்றை மட்டுமே நம்பி அந்த மக்கள் தங்களது எளிமையின் காரணமாக அல்லது இந்த அறிவிப்பு சரியானதாக இருக்கும் என்று அதன் மீது நம்பிக்கை வைத்து, ஸஹாபா பெருமக்கள் போர்ச் செல்வத்துக்காக கீழே இறங்கிக் கொண்டிருந்தார்கள் என்று கூறி விட்டனர்.

பின்விளைவுகள் மற்றும் தாக்கங்கள் அடிப்படையில் இந்த விஷயம் எந்த அளவுக்கு இழப்பை ஏற்படுத்துக் கூடியதாக அமையலாம்; மேலும், இந்த விஷயம் கண்ணியத்திற்குரிய தூதர் பெரும்பானார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய இயல்பாக இருக்கட்டும் அல்லது அன்னாரது ஆன்மிக ஆற்றலிருந்து பலன் பெற்ற ஸஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) ஆகட்டும். அவர்களது மேன்மைக்கு எந்த அளவுக்கு எதிரானதாக அமையக் கூடும் என்ற விஷயத்தை அவர்கள் உணரவில்லை.

எவ்வாறு இருப்பினும், ஸஹாபிகளின் தியாகங்கள் மற்றும் ஷஹீது ஆவதற்கான உணர்வைப் பார்த்து ஸஹாபிகள் போர்ச் செல்வங்களைப் பெறுவதற்காக மட்டும் அந்தக் குன்றை விடுவதற்கு அவசரப்பட்டுக் கொண்டிருந்தார்கள் என்ற விஷயத்தை உறுதியாக நம்புவது சிரமமாகும். முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்து விட்டது; அவர்கள் எதிரியை விரட்டியிருக்கிறார்கள்; அவர்களைத் துரத்திச் செல்கிறார்கள் என்பதை அந்த ஸஹாபா பெருமக்கள் பார்த்தபோது குன்றில் இருந்த ஸஹாபா பெருமக்கள் இந்த பகிரங்கமான வெற்றியின் மகிழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக நிம்மதியிழந்து விட்டார்கள் என்று தெரிய வருகின்றது.

வெற்றியில் சென்று முடிகின்ற அந்தப் போரின் கடைசி நொடிப் பொழுதுகளில் நாமும் அந்த மகிழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்று அதில் கலந்து கொள்வதற்கான துடிப்பில் நிம்மதியிழந்து கொண்டிருந்தார்கள் என்பது தெரிய வருகின்றது. நம்முடைய மற்ற சகோதரர்களோ போரில் கலந்து கொள்கிறார்கள். நாம் இங்கு குன்றில் நின்று கொண்டிருக்கின்றோம் என்று அவர்கள் நினைத்திருக்கலாம்.

இப்பொழுது வெற்றிதான் கிடைத்து விட்டதே! இன்றைய நாள் முடிவடையும் பொழுது நாம் போரில் செயல் ரீதியாகவும் கலந்து கொள்ளலாமே! குறைந்தபட்சம் இந்த வெற்றியின் மகிழ்ச்சியைக் கொண்டாடலாமே என்று போரில் கலந்து கொள்வதற்கான ஆர்வம் அவர்களுக்குப் பொங்கியெழுந்திருக்கலாம்.

ஆனால், என்ன ஆனாலும் சரி; இங்கிருந்து நகரக் கூடாது என்ற கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களின் அந்த வழிகாட்டலின் மீது அதிகம் புத்திக்கூர்மையுள்ளவராக நிரூபணமான அவர்களின் அமீர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்களது பார்வை இருந்தது. என்ன ஆனாலும் சரி; நாம் இங்கிருந்து நகரக் கூடாது என்பது அவர்கள் எடுத்த முடிவாகும். மேலும், அது சரியான முடிவாக இருந்தது.

நான் கூறியது போன்று வெளியாகாத ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் திருக்குர்ஆன் விளக்கவுரை குறிப்புகளில் இந்த வசனத்திற்கு ஓரளவு விளக்கவுரை கிடைக்கிறது. அத்துடன் அன்னார் (ரலி) இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

مِنْكُمْ مَّنْ يُّرِيْدُ الدُّنْيَا

இவ்விடத்தில் உலகம் என்பதன் பொருள் போர்ச் செல்வம் அல்ல. மாறாக, உலகப் பொருளைக் குறிக்கிறது. மறுமை என்பது முடிவை மற்றும் இறுதி விளைவைக் குறிக்கிறது. நமக்குப் போர்ச் செல்வம் கிடைக்காது என்ற எண்ணம் அவர்களுக்கு வந்ததாகக் கருதுவது உண்மை நிகழ்வுக்கு மாற்றமானதாகும். ஏனெனில், பத்ர் யுத்தத்திலோ எவர்கள் எல்லாம் சில நிர்பந்தங்கள் காரணமாக போரில் கலந்து கொள்ள முடியாமற் போனதோ அவர்களுக்கும் போர்ச் செல்வத்தில் பங்கு கிடைத்து விட்டிருந்தது. எனவே இந்த சிந்தனை முற்றிலும் தவறானதாகும். ஸஹாபிகளைக் குறித்து அவர்கள் உலக ஆயுதங்களை நாடியதாகக் கருதுவது சரியல்ல. இதை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

பிறகு அன்னார் (ரலி) கூறுகிறார்கள்: அசல் விஷயம் என்னவென்றால், நாமும் இந்த உஹது போரில் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை அவர்களுக்கு இருந்தது. நாம் இந்தப் போரில் கலந்து கொள்ள வேண்டும்; காஃபிர்களைக் கொல்ல வேண்டும் என்பதும் உலக சிந்தனையாக இருந்தது. பொருள்களை சேகரிப்பதில் கலந்து கொள்வது என்பது இந்த இடத்தில் பொருள் அல்ல.

அல்லாஹ் கூறுகிறான்: நாம் போரில் கலந்து கொள்பவர்களை விட்டும் பின்தங்கி இருந்து விடக் கூடாது என்ற எண்ணம் உங்களுக்கு இருந்தது. ஆனால், இதுவும் ஓர் உலக சிந்தனையாகும்.

ஏன் உலக சிந்தனை என்றால், வெறும் சண்டையிடுவது ஒன்றும் (பெரிய) விஷயம் அல்ல. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையின்படி அமல் செய்யாமல் இருப்பது என்ற இந்த விஷயம் உலக சிந்தனையாகி விடுகிறது. நீங்களோ கட்டளையின்படி செயல்பட்டிருக்க வேண்டும். அவ்வளவுதான்! ஏனெனில்,

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையின்படி செயல்படாமல் இருப்பது, அது மார்க்கத்திற்காக செய்யப்படும் போராக இருந்தாலுமே, அன்னார் அதைத் தடுத்து விட்டார்கள். வேறு ஏதோ இடத்தில் டியூட்டி நிர்ணயித்து விட்டிருக்கிறார்கள் என்றால், அந்தக் கட்டளையின்படி அமல் செய்வதுதான் உண்மையான மார்க்கம் ஆகுமே தவிர, போர் செய்வது மார்க்கமாகாது.

பிறகு, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

وَمِنْكُمْ مَّنْ يُّرِيْدُ الْاٰخِرَةَ

என்று அல்லாஹ் கூறுகின்றான்.

அதாவது உங்களுடைய அதிகாரியும் அவருடைய தோழர்களோ மறுமையை நாடினார்கள். முடிவும், விளைவும் அவர்கள் கண் முன் இருந்தது. இதன் விளைவு நல்லதாக அமையாது என்று அவர்கள் கருதி வந்தார்கள். அவர் கட்டுப்படாமைக்குப் பிறகுள்ள விளைவைப் பார்த்துக் கொண்டிருந்தார். இவ்வாறே அவருடைய தோழர்களும் அவரை உண்மையில் நிலைத்திருப்பவர்களாகப் புரிந்தார்கள்.

அதிகாரியும் அவருடன் ஒத்துப் போன மக்களின் பார்வையும் இந்த விஷயத்தின் கடைசி விளைவை எட்டிக் கொண்டிருந்தது. எனவேதான் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையைப் போரில் கலந்து கொள்வதைக் காட்டிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதினார்கள். விஷயம் தெளிவாகி விட்டது. ஆனால், அதற்கு நேர்மாறாக, உங்களுடைய பார்வை மேலோட்டமாக இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

இவ்வாறு பொருள் கொடுப்பது ஸஹாபிகளின் பணிகள் மற்றும் அவர்களுடைய தியாகங்கள் ஆகியவற்றிலிருந்து வெளிப்படக் கூடிய அந்த மேன்மைக்குப் பொருத்தமானதாகும்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் இந்தக் குறிப்பை பற்றி கூறியவாறு அதற்கு இவ்வாறு விளக்கம் அளித்துள்ளார்கள்:

அவர்கள் உலகத்தை நாடினார்கள். அதாவது, அவர்களுடன் சண்டை போட்டார்கள். மேலும், படைக்குழுவின் அமீர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இந்தக் கருத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தம்முடைய குறிப்புகளில் எடுத்துரைத்துள்ளார்கள். மேலும், இந்தவொரு நல்ல கருத்தையும் எடுத்துரைத்துள்ளார்கள்: இங்கு உலகம் என்பதற்கு எவர்கள் எல்லாம் பொருள்களை சூறையாடுதல் போர்ச் செல்வங்கள் என்று பொருள் கொள்கிறார்களோ அது சரியானதல்ல. அவர்கள் தற்காலிக வெற்றியின் பக்கம் பார்வையை வைத்துக் கொண்டிருந்தார்கள்.

இங்கு உலகம் என்பதற்கு அவர்கள் கொள்ளும் பொருள் வெளிப்பட்டு விட்டிருந்த அந்த விவகாரத்தின் மீது அதாவது, வெற்றி பெறப்பட்டு விட்டிருந்த போரின் மீது அவர்களது பார்வை இருந்தது. மேலும், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்களின் பார்வை மறுமை மீது இருந்தது. அவர்கள் கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களின் திருப்தியில் எல்லாவற்றையும் விடப் பெரிய வெற்றியைப் பார்த்து வந்தார்கள். எனவே அவர்கள் கடைசியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அல்லாஹ்வும் திருப்தியடைந்து விட வேண்டும்; மேலும், தற்காலிகமாகத் தென்படக் கூடிய இந்த விஷயங்கள் முற்றிலும் அர்த்தமற்றவை ; உண்மையற்றவை ஆகும். நம்முடைய உண்மையான நன்மை அவர்களது திருப்தியைப் பெறுவதாகும் என்று அவர்கள் விரும்பினார்கள்.

மேற்கொண்டு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: எனவே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இவர்கள் உலகை நாடினார்கள். அவர்கள் மறுமையை நாடினார்கள் என்ற இந்த விவாதமே தொடர்பற்றதாகும். ஏனெனில், உண்மை என்னவெனில், அந்த உலகமும் எவ்வளவு இருந்தது? அது விநோதமான விஷயமாகத் தென்படுகிறது. அவர்கள் குன்றை விட்டு ஓடியிருப்பார்கள்.

பிறகு, அன்னார் இவ்வாறு விளக்கத்தை எடுத்துரைத்தார்கள்:

அவர்கள் குன்றை விட்டு ஓடியிருப்பார்கள். அதாவது, குன்றைப் பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்தவர்கள். அதற்குள் எல்லாப் பொருள்களும் விநியோகிக்கப்பட்டும் முடிந்திருக்கும். நாம் விரைவாக அங்கு சென்று கலந்து கொள்ள வேண்டும் என்ற அவசரம் அவர்களுக்கு இருந்தது என்ற சிந்தனை இருக்கிறது. உங்கள் மக்கள் மீது நல்லெண்ணம் கொள்ளுங்கள்; என்று திருக்குர்ஆன் கூறுவது போன்று நீங்கள் இப்படி ஏன் யோசிப்பதில்லை? அதாவது எல்லாரும் வெற்றி முரசுகளைக் கொட்டுகிறார்கள்; மகிழ்ச்சியடைகிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அருகில் நிற்கிறார்கள். ஒருவர் மற்றவருக்கு வாழ்த்துகள் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள். பிறகு, நாம் ஏன் இந்தக் காட்சியை விட்டும் பின்தங்கியிருக்க வேண்டும்? என்ற சிந்தனையில் அவர்கள் சென்றார்கள்.

சிலநேரத்தில் இப்படி நடப்பதுண்டு. இது முற்றிலும் இயல்புக்கு ஏற்றதாகும். அதாவது எங்கு கொண்டாடப்படுகின்றதோ மகிழ்ச்சி கொண்டாடப்படுகிறதோ அங்கு அனைவரும் ஓடோடிச் சென்றடைவார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: இங்கும் தங்கியிருக்கும்போது பலமுறை பார்த்திருக்கிறோம். ஏதாவது நல்ல செய்திருந்தால், இங்கு ஒன்றும் எந்தப் போர்ச் செல்வத்தை சேகரித்துக் கொள்வதற்காகவும் மக்கள் வருவதில்லை. மக்கள் இங்கு வந்து சேருகிறார்கள். மகிழ்ச்சியில் பங்கு பெறுவதற்காக வந்து சேருகிறார்கள்.

ஆக, அவர்களது பார்வையில் என்ன இருந்தது என்றால், கீழே இவ்வளவு இன்பம் வருகிறது பாருங்கள்! அல்லது எங்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நின்று கொண்டிருந்தார்களோ அந்த இடத்தில் எல்லாரும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சுற்றி ஒன்று கூடி இன்பமடைகின்றார்கள். இறைவனின் வாக்குறுதி நிறைவேறியது. நாம் இங்கு தனியாக நின்று கொண்டிருக்கின்றோம். நாமும் அங்கு செல்வோமே என்றார்கள்.

ஆனால் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜாபிர் (ரலி) அவர்களது பார்வை மறுமை மீது இருந்தது. அன்னார் (ரலி) கூறினார்கள்: அப்பொழுது மகிழ்ச்சியை விட நாம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காகத் தனியாக ஓரிடத்தில் அமர்ந்துள்ளோம் என்பது மிகவும் அதிகம் இன்பத்திற்குரிய விஷயம் ஆகும்; நமக்கு வழங்கப்பட்டுள்ள கட்டளையை நாம் செயல்படுத்த வேண்டும். அதில் கிடைக்கும் இன்பம் இருக்கிறதே அதுதான் உண்மையான இன்பமே தவிர அங்கு மகிழ்ச்சியில் இருப்பது அல்ல.

எவ்வாறு இருப்பினும், ஒருபுறம் காஃபிர்களின் படை கடுமையான தோல்வியைத் தழுவி புறமுதுகிட்டு ஓடிக் கொண்டிருந்தது. மறுபுறம் மலைக் குன்றின் மீது நியமிக்கப்பட்டிருந்த 50 பேர்களில் கிட்டத் தட்ட 40 போர் வீரர்கள் குன்றை விட்டு விட்டு கீழே இறங்கி வந்ததும் அந்தக் கணமே வில் வீரர்களின் படைக் குழு நிலைத்து நின்று கொண்டிருந்த அந்த மலைக் குன்று காலியாகி விட்டது என்பதை காலித் பின் வலீத் அவர்கள் பார்த்தார்கள். காலித் பின் வலீத் அவர்கள் அப்பொழுது வரை ஈமான் கொண்டிருக்கவில்லை. அங்கு சிலர் மட்டுமே எஞ்சியிருப்பதைக் கண்டார்கள். இதைப் பார்த்ததுமே அவர்கள் இக்ரிமா பின் அபீ ஜஹ்லை உடன் அழைத்துக் கொண்டு தமது குதிரைப் படையுடன் திரும்பினார்கள். அவர்கள் மலைக் குன்றை சென்றடைந்து, வில் படை வீரர்களில் அங்கு மீதமிருந்த அந்த சில மக்கள் மீது தாக்குதல் தொடுத்து விட்டார்கள். அவர்களது இந்தத் தாக்குதல் எந்த அளவுக்குக் கடுமையானதாக இருந்தது என்றால், ஒரே தாக்குதலில் அவர்கள் அந்தப் படையின் அமீர் அப்துல்லாஹ் பின் ஜுபைர் அவர்கள் மற்றும் அவர்களது சில தோழர்களைக் கொன்று விட்டனர். அந்த மக்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்களின் உடலை சிதைத்தார்கள். அதாவது, கை, கால் மற்றும் உடலின் மற்ற அங்கங்களை வெட்டி வீழ்த்தினார்கள்.

இதற்கு பிறகு குறைஷியர்களின் இந்தப் படை கீழே இறங்கி திடீரென்று முஸ்லிம்களை சூழ்ந்து கொண்டது. முஸ்லிம்கள் அச்சமயம் செய்தியறியா நிலையில் போர்ச் செல்வங்களை சேகரிப்பதிலும், இணை வைப்பாளர்களை சிறைபிடிப்பதிலும் மூழ்கியிருந்தார்கள். திடீரென்று இணை வைப்பாளர்களின் குதிரைப் படை குதிரைகளை விரட்டி வந்து அவர்களது தலைமாட்டை எட்டி விட்டது.

இந்த மக்கள் உஸ்ஸா மற்றும் ஹுபுல் (ஆகிய சிலைகள்) பெயரை முழங்கிக் கொண்டிருந்தார்கள். அது உஹது நாளன்று இணை வைப்பாளர்களின் முழக்கமாக இருந்தது. அவர்கள் முஸ்லிம்களுக்கு அருகில் வந்தடைந்ததுமே செய்தறியா நிலையில் அவர்களை வாள்களுக்கு கீழே வைத்து விட்டார்கள். முஸ்லிம்கள் பித்துப் பிடித்துப் போனார்கள். எவர் எந்தப் பக்கம் திரும்பினாரோ அவர் அந்தப் பக்கம் ஓடத் தொடங்கினார்.

எவர்கள் போர்ச் செல்வத்தில் என்ன சேகரித்திருந்தார்களோ, எத்தனை பேரை சிறைபிடித்திருந்தார்களோ அவர்கள் அனைவரையும் விட்டு விட்டு முஸ்லிம்கள் எல்லாப் பக்கமும் சிதறிச் சென்று விட்டனர். அவர்களது அணிகளும் எஞ்சியிருக்கவில்லை ; வரிசைகளும் எஞ்சியிருக்கவில்லை. எவரும் மற்றவரைப் பற்றி எந்தத் தகவலும் அறிந்திருக்கவில்லை.

இணை வைப்பாளர்களின் கொடி அந்த நேரம் வரை மண்ணில் விழுந்து கிடந்தது. இந்தப் புது சூழ்நிலையைக் கண்டு திடீரென்று அம்ரா பின்த் அல்கமா என்ற ஒரு

பெண் அதைத் தூக்கி உயர்த்தி விட்டான். இணை வைப்பாளர்களை உரத்த குரலில் திருப்பி அழைக்க ஆரம்பித்தாள். ஓடிக் கொண்டிருந்த இணை வைப்பாளர்கள் தங்களுடைய கொடி உயரத்தைக் கண்டதும் போரின் திசை மாறிவிட்டது என்று புரிந்து கொண்டார்கள்.

அவர்கள் அனைவரும் திரும்பி மீண்டும் தங்களுடைய கொடிக்குக் கீழ் ஒன்று கூடிவிட்டார்கள்.

ஓர் எழுத்தாளர் எழுதியுள்ளார்: இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த குறைஷியர்களின் கொடியை அம்ரா பின்த் அல்கமா என்ற பெண் தூக்கிப் பிடித்தி உயர்த்தி விட்டாள். அவள் அதை வேக வேகமாக அசைத்து போர்க் களத்தை விட்டு ஓடிக் கொண்டிருந்தவர்களைப் பழித்துரைக்க ஆரம்பித்தாள். அவள் மக்கத்துக் காஃபிர்களைத் திரும்பி வருமாறு கூவி அழைத்துக் கொண்டிருந்தாள்.

இவ்வாறு தோல்வி அடைந்திருந்த நிராகரிப்பாளர்கள் மீண்டும் உஹது போர்க் களத்தில் ஒன்று கூடி விட்டார்கள். அவர்கள் முன் பக்கத்திலிருந்தும், பின்பக்கத்திலிருந்தும் முஸ்லிம்களை சூழ்ந்து கொண்டார்கள். (இனி) கவலையில்லை என்ற அடிப்படையில் முஸ்லிம்கள் அணிவகுப்பை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டிருந்தார்கள். எனவே இப்பொழுது அவர்களுக்கென எந்த ஒரு வரிசையும் இருக்கவில்லை. அந்த நாளில் முஸ்லிம்கள் ஒரு நல்ல எண்ணிக்கையில் ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள். முதலில் கிடைத்திருந்த வெற்றி இப்பொழுது தோல்வி எனும் சோதனையாக மாறிவிட்டிருந்தது.

அப்போதைய காட்சியை வரைந்தவாறு ஓர் எழுத்தாளர் இவ்வாறு எழுதுகிறார்: முஸ்லிம்கள், (தங்களது) வில் வீரர்களின் தவறுக்குப் பிறகு தங்களது ஒருங்கமைப்பை இழந்து விட்டிருந்தார்கள். அவர்களது அணிகள் சிதறுண்டு போய் விட்டன. அவர்கள் போர்ச் செல்வங்களைத் தங்களுடைய கைகளிலிருந்து வீசிவிட்டார்கள். பித்துப் பிடித்த நிலையில் ஒருவர் மற்றவரைக் கொல்ல ஆரம்பித்தனர். அவர்களில் பெரும்பாலான மக்கள் பித்து பிடித்தவர்கள் போல் ஆகிவிட்டார்கள்.

அவர்கள் எங்கு செல்வது என்றே அவர்களுக்கு தெரியவில்லை. குறிப்பாக இணை வைப்பாளர்களின் அறிவிப்பாளன் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் என்று அறிவிப்பு செய்த பிறகு, இது ஒரு பெரும் சோதனையாக இருந்தது. அதில் பல முஸ்லிம்கள் தங்களுடைய சகோதரர்கள் கைகளால் எண்ணம் இல்லாமல் கொல்லப்பட்டு விழுந்தனர். சிலவேளை தவறுதலாக முஸ்லிம்கள் முஸ்லிம்களையும் கொன்று விட்டார்கள். காலித் அவர்களின் நடவடிக்கைக்குப் பிறகு மீண்டும் தங்களை ஒருங்கமைத்துக் கொண்டு விட்டிருந்த எதிரிகளின் பெரும்பான்மையான எண்ணிக்கை முஸ்லிம்களின் குறைவான எண்ணிக்கையை அழித்து அவர்களை முடிவுக்குக் கொண்டு வந்து விடவிருந்தது. ஆனால், எவ்வாறு இருப்பினும் எல்லாம் வல்ல அல்லாஹ் மீண்டும் அருள் புரிந்தான். எதிரிகள் என்ன நினைத்தார்களோ அதுவோ நடக்கவில்லை.

ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்களின் தந்தை யமான் (ரலி) அவர்கள் முஸ்லிம்களின் கைகளால் கொல்லப்பட்டது பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

தவறுதலாக ஸஹாபி ஒருவர் மற்றவரைக் கொன்றதற்கான ஓர் உதாரணம், ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்களின் தந்தை யமான் ஆவார்கள்; அவர்களை முஸ்லிம்கள் அறியாததன் காரணமாக ஷஹீத் ஆக்கி விட்டார்கள்.

இப்னு இஸ்ஹாக் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹூது போருக்காக சென்றபோது, ஃஸாபித் பின் வஹ்ஷ் மற்றும் யமான் எனும் பெயரைக் கொண்ட ஹுஸைல் பின் ஜாபிர் அவர்களை - இவர்கள் ஹுஸைஃபா பின் யமானின் தந்தையாவார்கள். இவர்கள் இருவரும் வயது முதிர்ந்தவர்களாக இருந்தார்கள். மேலும், முஸ்லிம்களின் பெண்களும்,குழந்தைகளும் பாதுகாப்பிற்காக அடைக்கலம் பெற்றிருந்த கோட்டையில் இவர்கள் இருவரும் இருந்தார்கள்.

அவர்களில் ஒருவர் மற்றவரிடம், நீ எதற்காக காத்துக் கொண்டிருக்கிறாய்? என்று கேட்டார். முதியவர்கள் இருவரும் கோட்டைக்குள் அடைப்பட்டு இருந்தனர். அவர்கள் தங்களுக்குள் உரையாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் இவ்வாறு கூற ஆரம்பித்தார்கள்: நாம் எதற்காக காத்துக் கொண்டிருக்கின்றோம்? நாம் நம்முடைய வாளை ஏந்த வேண்டாமா? ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் சென்று இணைந்து கொள்ள வேண்டாமா? எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்கு ஷஹீதாகும் நற்பேற்றினை வழங்கிவிடலாம்.

பிறகு, இவர்கள் இருவரும் வாளை எடுத்துக் கொண்டு காஃபிர்கள் மீது சென்று பாய்ந்தார்கள். மக்களோடு மக்களாக கலந்து விட்டார்கள். அதாவது, இந்தப் பெரியவர்கள் இருவரும் போரில் கலந்து கொள்ளவில்லை ; மதீனாவில் இருக்கிறார்கள் என்பதை முஸ்லிம்கள் அறிந்திருந்தார்கள். ஆனால், இப்பொழுது இவர்கள் போர்க் களத்தைச் சென்றடைந்து போரில் கலந்து கொண்டு விட்டிருந்தார்கள். முஸ்லிம்களால் இவர்களை உடனடியாக அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் போனது. இவர்கள் யார் என்றே தெரியாமல் போனது! ஸாபித் பின் வஃஹ்ஷ் அவர்களையோ நிராகரிப்பாளர்கள் ஷஹீது ஆக்கி விட்டார்கள். ஹுஸைஃபா அவர்களின் தந்தையாரை முஸ்லிம்கள் அறியாயததன் காரணமாக ஷஹீது ஆக்கி விட்டார்கள். ஹுஸைஃபா (ரலி) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஷஹீது ஆன இவரோ என் தந்தை ஆவார். அவர்கள் பார்த்தபோது, இவரோ என் தந்தை ஆவார் என்று கூறினார்கள். முஸ்லிம்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் இவர்களை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. தவறுதலாக ஷஹீது ஆக்கி விட்டார்கள். யதார்த்தத்தில் அவர்கள் உண்மையைத்தான் கூறியிருந்தார்கள்.

ஹுஸைஃபா (ரலி) கூறினார்கள்: இறைவன் உங்களை மன்னிப்பானாக! அவன் கருணையாளர்களில் எல்லாம் பெரிய கருணையாளன் ஆவான். பிறகு, ஹுஸூர் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்களுக்கு அவர்களின் தந்தைக்கு ஈட்டுத் தொகை கொடுக்க விரும்பினார்கள்.

தவறுதலாக முஸ்லிம்களால் ஷஹீது ஆகிவிட்டதனால் அதற்கான ஈட்டுத் தொகை கொடுக்கப்பட வேண்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆனால், ஹுஸைஃபா (ரலி) அவர்கள் அதைப் பெறவில்லை. அவர்கள் பெற மறுத்து விட்டார்கள். முஸ்லிம்களை மன்னித்து விட்டார்கள். இதிலிருந்து ஹுஸைஃபா (ரலி) அவர்களின் அந்தஸ்து அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்கள் மேலும் முஸ்லிம்களின் பார்வையில் மிகவும் உயர்ந்து விட்டது.

இந்தப் போரில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களும் ஷஹீது ஆனார்கள். அவர்களது சம்பவமும் எழுதப்பட்டுள்ளது. உமைர் பின் இஸ்ஹாக் இவ்வாறு அறிவிக்கிறார்கள்: உஹது நாளன்று ஹம்ஸா பின் அப்தில் முத்தலிப் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் இருந்து கொண்டு இரண்டு வாள்களை வைத்து போர் செய்து கொண்டிருந்தார்கள். நான் அஸதுல்லாஹ், அதாவது அல்லாஹ்வின் சிங்கம் ஆவேன் என்று கூறிக் கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு கூறியவாறு சிலசமயம் முன்னால் செய்வார்கள்; சில சமயம் பின்னால் வருவார்கள். அவர்கள் இதே நிலையில் இருக்கும்பொழுது திடீரென்று வழுக்கி விழுந்து விட்டார்கள். அவர்களை வஹ்ஷீ அஸ்வத் பார்த்து விட்டார்.

அபூ உஸாமா கூறினார்கள்: அவர் அவர்கள் மீது ஈட்டியை ஓங்கி எறிந்து கொன்று விட்டார். இதைப் பற்றி ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ளதும் இவ்வாறு இருக்கிறது:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சொந்த சிறிய தந்தையாக இருந்தது மட்டுமின்றி, அன்னாரின் பால்குடி சகோதரராகவும் இருந்த ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் மிகவும் வீரத்துடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எங்கு சென்றார்களோ அங்கெல்லாம் அவர்களுக்கு முன்னால் குறைஷியர்களின் படைகள் துண்டு துண்டாகிப் போயின. ஆனால், எதிரியும் அவர்களுக்காக காத்துக் கொண்டிருந்தான்.

ஜுபைர் பின் முத்இம் தனது ஓர் அபிஸீனிய அடிமை வஹ்ஷீ என்பவரை குறிப்பாக விடுதலை அளிப்பதாக வாக்குறுதி அளித்து தன்னுடன் அழைத்து வந்திருந்தான். எப்படியாவது ஜுபைர் உடைய சிறிய தந்தையார் தயீமா பின் அத்தியை பத்ர் யுத்தத்தின் சந்தர்ப்பத்தில் வாளுக்கு இரையாக்கிய ஹம்ஸா (ரலி) அவர்களைக் கொன்று அவர்களைப் பழிதீர்ப்பதை முழுமை செய்து கொள்ள வேண்டும் என்பதற்காக அழைத்து வந்திருந்தான். எனவே வஹ்ஷீ ஓரிடத்தில் ஒளிந்து கொண்டு அவர்களுக்காகக் காத்திருந்து அமர்ந்து விட்டார். ஹம்ஸா (ரலி) அவர்கள் ஒரு நபரைத் தாக்கியவாறு அங்கிருந்து கடந்து சென்றபோது அவர் சரியான சந்தர்ப்பம் பார்த்து அவர்களுடைய தொப்புளுக்குக் கீழ் தனது சிறிய ஈட்டியை எறிந்தார். அது பட்டதுமே உடலின் அந்தப் பக்கம் சென்று விட்டது. ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் தடுமாறி விழுந்தார்கள். ஆனால், மீண்டும் துணிவு கொண்டு எழுந்தார்கள். கையை வஹ்ஷீ பக்கம் காட்டி அவர் பக்கம் செல்ல அவர்கள் நினைத்தார்கள். ஆனால், மீண்டும் தடுமாறி விழுந்து விட்டார்கள். மேலும், உயிரை விட்டு விட்டார்கள்.

இவ்வாறு இஸ்லாமியப் படையின் வலுவான ஒரு கை உடைந்து விட்டது. ஹம்ஸா கொல்லப்பட்டு விட்ட தகவல்

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 25 Jan- 08 FEB 2024 Issue No. 4&5& 6

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கிடைத்தபோது அன்னாருக்குக் கடுமையான துயரம் ஏற்பட்டது.

அறிவிப்பில் வருகிறது; தாயிஃப் யுத்தத்துக்குப் பிறகு ஹம்ஸாவைக் கொன்றவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் வந்தபோது அன்னார் (ஸல்) அவரை மன்னித்து விட்டார்கள்தான். ஆனால், ஹம்ஸாவின் மீதான அன்பிற்கு மரியாதை கொடுத்தவாறு வஹ்ஷீ எனக்கு முன்னால் வராமல் இருக்கட்டும் என்று கூறிவிட்டார்கள்.

அப்பொழுது வஹ்ஷீ தமது உள்ளத்தில் இவ்வாறு உறுதி எடுத்துக் கொண்டார்:

எந்த கையால் நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாரைக் கொன்றேனோ அதே கையால் இஸ்லாத்தின் பெரிய எதிரி ஒருவனை வாளுக்கு இரையாக்கி விடாத வரை நான் நிம்மதி அடைய மாட்டேன்.

அவர் தற்போது முஸ்லிம் ஆகிவிட்டிருந்தார். கண்ணோட்டங்கள் மாறிவிட்டிருந்தன. சிந்தனைகள் மாறிவிட்டிருந்தன. ஆக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலகட்டத்தில் அவர் யமாமா போரில் பொய் நபித்துவ வாதியான முஸைலமா கஸ்ஸாபைக் கொன்று தனது வாக்குறுதியை நிறைவேற்றினார்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுடைய உடல் அவமதிக்கவும்பட்டது. அறிவிப்பில் வருகிறது; அபூ ஸுஃப்யானின் மனைவி ஹிந்த் உஹுது நாள் அன்று படைகளோடு வந்திருந்தார். அவர் பத்ர் யுத்தத்தில் ஹம்ஸா (ரலி) அவர்களுடன் சண்டையிடும்போது கொல்லப்பட்ட தன் தந்தைக்காகப் பழிவாங்குவதற்காக சந்தர்ப்பம் கிடைத்தால் நான் ஹம்ஸா (ரலி) உடைய கல்லீரலை மெல்வேன் என்று வேண்டியிருந்தார். இந்த சூழ்நிலை ஏற்பட்டு ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் மீது இன்னல் வந்து விட்டது. அப்பொழுது இணை வைப்பாளர்கள் கொல்லப்பட்டவர்களின் உடல்களை சிதைத்து விட்டார்கள். அவர்களுடைய தோற்றத்தைக் கெடுத்தார்கள். மூக்கு, காது போன்ற அங்கங்களை வெட்டினார்கள். அவர்கள் ஹம்ஸாவின் கல்லீரலின் ஒரு துண்டைக் கொண்டு வந்தனர். ஹிந்த் அதைத் தின்பதற்காக மென்று கொண்டிருந்தார். ஆனால், அவரால் அதை விழுங்க முடியாதபோது அதை துப்பிவிட்டார்.

இந்த சம்பவம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தெரிய வந்தபோது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) கூறினார்கள்: ஹம்ஸாவின் சதையை சிறிதும் சுவைப்பதையும் நெருப்பின் மீது அல்லாஹ் ஹராமாக்கி விட்டான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹம்ஸா (ரலி) அவர்களின் உடலுக்கு அருகில் வந்து எந்த உணர்வுகளை வெளிப்படுத்தினார்களோ அவர்களுக்கு உயர்வான அந்தஸ்துக்கான நற்செய்தியை வழங்கினார்களோ அது தொடர்பாக இவ்வாறு அறிவிப்பு வருகிறது:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் சடலத்தைப் பார்த்தபோது அவர்களுடைய கல்லீரல் வெளியே எடுத்து சுவைக்கப்பட்டிருந்தது. இப்னு ஹிஷ்ஷாம் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த நிலையில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுடைய உடலுக்கு அருகில் நின்றபோது கூறினார்கள்: ஹம்ஸாவே! உம்முடைய இந்த இன்னலைப் போன்ற ஓர் இன்னல் எனக்கு ஒருபோதும் வராது. நான் இதை விட அதிகமான வேதனை மிகுந்த காட்சியை இன்று வரை கண்டதில்லை.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஜிப்ரீல் வந்து எனக்கு செய்தி தெரிவித்தார். அதாவது, ஹம்ஸா பின் அப்தில் முத்தலிபை ஏழு வானங்களிலும் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரின் சிங்கம் என்று எழுதப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கடுமையான எதிரிகளில் ஒருவராக ஹிந்த் இருந்தார். அவர் எவ்வளவு கடுமையான எதிரியாக இருந்தார் என்றால் உஹுது போர் சந்தர்ப்பத்தில் மக்களைக் கவிதைகள் பாடி, பாடி செல்லுங்கள்! இஸ்லாமியப் படை மீது தாக்குதல் தொடுங்கள்! என்று தூண்டிவிட்டுக் கொண்டிருந்தார்.

முஸ்லிம்களுக்கு ஒரு பயங்கரமான சந்தர்ப்பம் வந்தபொழுது இந்தப் பெண், எவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாரான ஹஸ்ரத் ஹம்ஸாவின் கல்லீரலை எடுத்து என்னிடம் கொண்டு வருவாரோ, அதேபோன்று அவர்களுடைய மூக்கு மற்றும் காதுகளை அறுத்து என்னிடம் கொண்டு வருவாரோ அவருக்கு நான் பரிசளிப்பேன் என்று கூறினார்.

ஆக, ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் சடலத்துடன் இவ்வாறே நடந்து கொள்ளப்பட்டது. போருக்குப் பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அன்னாரது சிறிய தந்தையாருடன் இப்படிப்பட்ட அவமரியாதை செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வந்தபோது, இயல்பாகவே அன்னாருக்குத் துன்பம் ஏற்பட்டது.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: எதிரிகள் இது போன்ற அநியாயமான முறையில் நடந்து கொள்வதைத் துவக்கி வைத்து விட்ட பிறகு, நானும் அவர்களோடு இவ்வாறே நடந்து கொள்வேன். அப்பொழுது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் புறமிருந்து அன்னாருக்கு இவ்வாறு இறையறிவிப்பு வந்தது; அவர்களுடைய இந்த அநீதியான நடைமுறைக்குப் பிறகும் கூட தாங்கள் ஒருபோதும் இது போன்ற எந்த ஓர் அடியையும் எடுத்து வைக்கக் கூடாது. அவர்களை மன்னித்து விட வேண்டும். எனவே இஸ்லாத்தில் இது தடுக்கப்பட்டு விட்டது. இங்கு ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் சகோதரியின் சம்பவமும் எழுதப்பட்டுள்ளது. எவ்வாறு அவர்கள் பொறுமை, திருப்தி கொள்ளுதல் மற்றும் கட்டுப்படுதலின் பொறாமை கொள்ளத் தக்க முன்மாதிரியைக் காட்டினார்கள் என்பது பற்றி வருகிறது.

ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: உஹுது போர் அன்று முடிவில் ஒரு பெண் முன்னால் இருந்து வேகமாக வந்து கொண்டிருப்பது தென்பட்டது. அந்தப் பெண் ஷஹீது ஆனவர்களின் சடலங்களைப் பார்த்து இருந்திருப்பார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பெண் அங்கு வந்து, மோசமான நிலையில் இருந்த சடலங்களைப் பார்ப்பதை நல்லதாகக் கருதவில்லை. ஏனெனில், பெரும்பாலானவர்களின் உடல்கள் சிதைக்கப்பட்டிருந்தன. எனவே அந்தப் பெண்ணைத் தடுத்து நிறுத்துங்கள்! அந்தப் பெண்ணைத் தடுத்து நிறுத்துங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் கூர்ந்து கவனித்தபோது அவர்கள் என் தாயார் ஹஸ்ரத் ஸஃபிய்யாவாக இருந்தார்கள். எனவே நான் அவர்கள் பக்கம் ஓடிச் சென்றேன். அவர்கள் ஷஹீது ஆனவர்களின் சடலங்கள் வரை சென்றடைவதற்கு முன்பே நான் அவர்களை சென்றடைந்து

இதன் தொடர்ச்சி 9ம் பக்கம்...

**National Watch Company**

**Sales & Service**




**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT 99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad